புதிய தமிழ் வடிவம்



கொடுமுடி சண்முகப் பிரசுரம்

கொடுமுடி
சண்முகப் பிரகதம்

3217

புதிய
தமிழ் வடிவம்

சேகர் பதிப்பகம்
66, பெரியார் தெரு
எம். ஜி. ஆர். நகர்
சென்னை—600 083

முதற் பதிப்பு
பிப்ரவரி, 1979

விலை ரூ. 10-00

அச்சிட்டோர்
மூவேந்தர் அச்சகம்
சென்னை-600 014

Bibliographical Data

Title of the book	—	PUTHIYA TAMIL VADIVAM
Author	—	KODUMUDI SHANMUGA BRAGADHAM
Date of birth	—	19-1-1948
Language	—	TAMIL
Edition	—	First, February, 1979
Copyright holder	—	Kodumudi Shanmuga Bragadham
Paper used	—	White Printing, D.D., 14.2 Kg
Size of the book	—	Double Demmy 21.3X 14 Cms
Printing points	—	10 Points
No. of Pages	—	4+132=136
No. of copies	—	1,200
Printer	—	MOOVENDHAR ACHAGAM
Binding	—	Card board
PRICE	—	**Rs. 10-00**
Publisher	—	SEKAR PATHIPPAGAM
Subject	—	Linguistics
Call number	—	P, 31, 1; 4 L9.

உருவாக்கியவர்கள்

ஆசிரியர்	:	கொடுமுடி சண்முகப் பிரகதம்
கருத்தாளர்	:	கொடுமுடி ச. சண்முகன் பி. இ., டி. எஸ். எஸ்., எம். ஐ. இ.,
ஓவியர்	:	அமுதோன்
பிளாக்	:	தணிகாசலம்
நூல் அச்சிட்டோர்	:	கோ. தையமுத்து மூவேந்தர் அச்சகம்
அச்சு அமைப்பு	:	க. வீ. தயாளன், பீ. பலராமன்
முகப்பு அச்சிட்டோர்	:	பிரபு பிரிண்டிங் அவுஸ்
முகப்பு வண்ணம்	:	சியாம்
கட்டுக்கோப்பு	:	ரா. வெங்கடேசன் பைண்டிங்
பிழை திருத்தம்	:	மா. ரா. இளங்கோவன், எம். ஏ.,
பதிப்பாளர்	:	வெள்ளையாம்பட்டு சுந்தரம்



ஆசிரியர் முன்னுரை

தமிழ் எழுத்துகள் எப்படியிருந்தால் என்ன? என்றுதான் இருந்தேன் கையால் எழுதிக் கொண்டிருந்தவரை. 1971ஆம் ஆண்டு கொங்கு இதழைத் தொடங்கினோம்.

அரசாங்கத்தோடும், விளம்பரதாரர்களோடும் தொடர்பு கொள்வதற்கு, தட்டச்சுப் பொறி தேவையாயிற்று. அவ்வப் போது கூலி கொடுத்து, தட்டச்சு செய்து பெறுவதில் கால விரையம் அதிகமாகியது. நினைத்ததை உடனுக்குடன் முடிக்க முடியவில்லை. அசல் கடிதம் எழுத, பின்னர் நகல் எடுக்க என்ற வாறு வேலை இரண்டு மடங்காகியது.

அதனால் சொந்தமாக ஒரு தட்டச்சுப் பொறி வாங்கினோம். நாங்களே தட்டச்சு செய்யப் பழகிக் கொண்டோம். அசலும் நகலும் ஒரே சமயத்தில் தட்டச்சுப் பொறியிலேயே செய்து கொண்டோம். கையால் எழுதும் பணி குறைந்து கொண்டே வந்தது.

நமது நாடு இருக்கும் நிலைமையில், தமிழ் மொழி சில இடங் களில் செல்லுபடியாகவில்லை. நடுவண் அரசுடன் ஆன கடிதங் களை ஆங்கிலத்தில் அனுப்பித் தீர வேண்டியிருந்தது. நடுவண் அரசின் விளம்பரங்கள் தொடர்ந்து கிடைத்து வந்ததால் ஆங்கிலக் கடிதத் தொடர்பு இன்றியமையாததாகிவிட்டது.

கொங்கு போன்ற மிகச் சிறிய நிறுவனங்கள், இரண்டு தட்டச்சுப் பொறிகளை வைத்துக் கொள்ள இயலுமா? 'ஒரே

பொறியில் இரண்டு மொழியும் இருந்தால் எவ்வளவு வசதி!' என எண்ணத் தொடங்கினோம்.

கொங்கு இதழின் வாசகர் முகவரியை 'பிராட்மா' அச்சில் செய்து கொள்ள விரும்பினோம். எதைச் செய்தாலும், தமிழில் தான் செய்ய வேண்டும் என்பது எங்கள் கொள்கை. 'பிராட்மா' அச்சினர் தமிழில் அதனைச் செய்ய இயலாது என்றனர். இயலாமை காரணமல்ல. எழுத்து வடிவங்களின் பெருந் தொகையே காரணம். பெருத்த அளவில் உத்தரவு வழங்கும் நிறுவனங்கள் வற்புறுத்தியிருந்தால், தமிழில் செய்திருக்கலாம். எனினும், 'தமிழ் வடிவ எண்ணிக்கையைக் குறைக்க இயலாது' என்ற எண்ணம் இதனால் வலுப்பெற்றது.

எனது கணவரின் பொறியியல் வரைபடங்களில், ஆங்கில எழுத்துகளை வடிவம் மாறாமல், தொடர்ந்து எழுதுவதற்கு 'ஸ்டென்சில்' என்ற கருவி பயன்படுவதைப் பார்த்துள்ளேன். பிளாஸ்டிக் அட்டையில் துளையிட்டு வடிவங்கள் அமைந்திருக் கும். அதுபோல தமிழில் ஏன் இன்னும் வரவில்லை என்ற கேள்விக்கும், எழுத்தெண்ணிக்கையே காரணமாகத் தெரிந்தது. மற்றும் தொலையச்சு (Telex), வங்கிகளில் பெயர் எழுதும் பொறி, கணிதி (Computer) போன்ற இடங்களில் தமிழ் இடம் பெறுவதற்கு, எழுத்தெண்ணிக்கையும் ஒரு காரணம் என்பது தெளிவாயிற்று.

எழுத்து வடிவங்களை எப்படிக் குறைக்கலாம் என்று எண்ணியபோது, தற்போதைய தமிழ் தட்டச்சுப் பொறியே, வழி காட்டியாக அமைந்தது. இதனை வடிவமைத்தவர்களில் தமிழக சட்டமன்றத்தின் தட்டச்சர்களான ஆனந்தன், சாமிநாதன் ஆகி யோர் குறிப்பிடத்தக்கவர்கள். அதன் சாவிகளில் கீழ்த்தட்டுகளில் உள்ளவை அனைத்தும் இன்றியமையாதவை. மேல்தட்டுகளில் உள்ளவற்றை அகற்றினால் போதும் என்பதை உணர்ந்தோம். அவற்றை அவ்வப்போது இந்தியப் பல்கலைக் கழகத் தமிழா சிரியர் மன்றக் கருத்தரங்குகளில் கட்டுரை வடிவில் அனுப்பி வைத்தோம். எங்களின் கருத்து வளர்ச்சியை, 'ஆய்வுக் கோவை' யில் தொடர்ந்து வந்த கட்டுரைகள் மூலம் அறியலாம். அவை ஒரே நாளில் முகிழ்த்த கண்டு பிடிப்புகள் அல்ல. இறுதியில் வடிவச் சுருக்கத்தை மூன்றாக வகைப்படுத்த முடிந்தது. அவை:

1. பெரியார் புழங்கியபடி (ளை, லை, னை, ணை, றா, னா, ணா).

2. உகர, ஊகார உயிர்மெய்களுக்குப் பக்கக் குறி இடுதல்.

3. உயிர் நெடில்களுக்குக் கால் இடுதல் (அா, இா, உா, எா, ஒா) இவை மூன்றும் தட்டச்சிற்குப் போதும், அச்சிற்கு இன்னும் இரண்டு வகை தேவைப்பட்டது.

1. மெய்யின் தலைப்புள்ளியை, தலைக்கு நேர் மேலே வைக்காமல் சற்றே தள்ளி டிகிரிக் குறி போல வைத்தல்.

2. இகர, ஈகார மேல் விலங்குகளை எழுத்துடன் இணைத்து விடாமல் பழைய சுதேசமித்திரன் போலத் தனியாக அமைத்தல்.

இவை இரண்டிற்கும் தனி ஒப்புதல் தேவையில்லை. பொது மக்கள் கவனத்தைக் கவராமல் தானாகவே வந்துவிடும்.

சொல்லும்போது, அதற்கான காரண, காரியங்கள் கூற வேண்டிய இன்றியமையாமை வந்து சேர்ந்தது. என் கணவரது தொல்லியல் பயிற்சி அதற்கும் வழி வகுத்தது. எழுத்துக்கள் காலங்கள்தோறும் மாறி வந்துள்ளன. எனவே மாற்றுவது பிழையல்ல, பண்டைய தமிழ் வடிவங்களில் உகர, ஊகார, உயிர் மெய் வடிவங்களுக்கு ஒட்டு சேர்த்துள்ளார்கள். அ, இ, உ ஆகிய வற்றின் நெடில்கள் உகரத்தோடு ஒட்டிய கோட்டால் ஆனவை தான். எனவே நாங்கள் புதிதாக எதையுமே சொல்லிவிட வில்லை.

எங்களின் பரிந்துரைகள் அனைத்தும் நாங்களே முட்டி மோதிக் கண்டுபிடித்தவை. ஆனால் அந்தப் பெருமையும் நிற்க வில்லை. உகர, ஊகாரத்திற்கு ¬, ூ குறிகளைப் பயன்படுத்த லாம் என்பதைப் பெரியாரே 30 ஆண்டுகளுக்குமுன் ஒரு கட்டுரை யில் கூறியிருப்பதைப் பின்னர் படிக்க நேர்ந்தது.

நாடு விடுதலை அடைந்த பின்னர், அப்போதைய தமிழக அரசு தமிழ் வடிவங்களை ஆராய ஒரு குழு அமைத்ததாகத் தெரி கிறது. முதறிஞர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் அக்குழு வில் இருந்தார். அக்குழுவின் அறிக்கை வெளிவரவில்லை. ஆயினும் அவரது கட்டுரை 1952இல் (Tamil Culture இதழில்) வெளிவந்ததாம். அந்தப் பரிந்துரைகளை, அண்மையில் செ. வை. சண்முகம் அவர்களின் நூலில் (1979) படிக்க நேர்ந்தது.

நாங்கள் பரிந்துரைத்துள்ள பெரும்பாலான செப்பங்களை அவர் அப்போதே கூறியுள்ளார் என்பதை அறிந்து கொண்டோம்.

இதனால் எங்கள் மீதிருந்த ஒரு பெரும் பாரம் குறைந்தது. நாங்கள் கூறியுள்ளவை எதுவும் புதியன அல்ல. பல்வேறு கால கட்டங்களில் தமிழறிஞர்கள் கூறியுள்ள செப்பங்களே என்பது தெளிவு.

1963ஆம் ஆண்டிலிருந்து கொங்கு இதழில் எழுத்துச் சீர்மை பற்றிய கருத்துகளைத் தொடர்ந்து மக்கள் சிந்திக்கும் வண்ணம் செய்ததே எங்கள் பணி. பல்வேறு பரிந்துரைகளின் மீதான மக்களின் கருத்துக் கணிப்பும், அவற்றின் செயல் முறை இடர்ப் பாடுகளும், அவற்றின் நீக்கங்களுமே நாங்கள் செய்தவை.

1974 – சனவரியில் இலங்கையில் நடைபெற்ற உலகத் தமிழராய்ச்சி மாநாட்டில் எழுத்துச் சீர்மை பற்றிய என் கணவரது எழுத்துரையுடன் மேலும் இரண்டு கட்டுரைகள் வந்தன. 1975–ஆம் ஆண்டு புதுச்சேரி தாகூர் பல்கலைக்கழகம் Dr. சாலை இளந்திரையனார் தலைமையில், பேராசிரியர்களோடு கலந்துரையாடும் வாய்ப்பு நேர்ந்தது. புதிய எழுத்தில் ஆய்வுக் கோவையில் ஆண்டுதோறும் எங்கள் கட்டுரை இடம் பெற்றது. எங்களின் முயற்சி தொடர்ந்து நீடித்தது. அந்தச் சிந்தனைகளே நூல் வடிவில் தற்போது தங்களின் கைகளில் மிளிருகின்றது. ஓராண்டிற்கு முன்னரே எழுதி வைத்த நூல் பல்வேறு தாமதங் களால் இப்போதுதான் அச்சேறியது.

எழுத்துச் சீர்மை முயற்சியில் தொடர்ந்து ஊக்குவித்து வந்த பொது நூலக இயக்குநர் வே. தில்லைநாயகம், தமிழ் வளர்ச்சி இயக்குநர் கொண்டல் சு. மகாதேவன், பள்ளிக் கல்வி இயக்குநர் Dr. வேங்கடசுப்பிரமணியம், தொல்லியல் துறை இயக்குநர் Dr. இரா. நாகசாமி, தில்லி Dr. சாலை இளந்திரையன், மதுரைக் காமராசர் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் Dr. வ. செ. குழந்தைசாமி ஆகியோரின் அன்புள்ளங்களுக்கு என்றும் கடப்பாடுடையோம்.

ச. பிரகதம்

பதிப்புரை

தமிழ் எழுத்து வளர்ச்சி என்பது காலந்தோறும் நடைபெற்று வருகிற ஒரு வரலாற்றுத் தொடர் நிகழ்ச்சி ஆகும். உருவ மாற்றங்கள் காலச்சூழலை ஒட்டி ஏற்படுவது இயற்கையாகும்.

உயர்தனிச் செம்மையுடைய தமிழ் ஒலி வடிவ அமைப்பில் மாறுதல் தோன்ற வாய்ப்பில்லை; தேவையுமில்லை.

'இப்பொழுதுள்ள தமிழ் எழுத்து அமைப்பு முறையில் உள்ள சில முரண்பாடுகளை விலக்கி, ஒரு சீராக எழுதும் வகை காணப்பட வேண்டும்' என்ற கருத்து, மொழி அறிஞர்களிடையே பல ஆண்டுகளாக இருந்து வருகிறது.

எழுத்துச் சீர்மை எவ்வாறு நடைபெறவேண்டும் என்பதிலும், எந்த எந்த எழுத்துகளை மாற்றியமைக்கலாம் என்பதிலும் பரவலான கருத்துகள் பரிமாறப்பட்டுவந்தது; வாதங்கள், கருத்து வேறுபாடுகள் நன்கு ஆராயப்பட்டன.

ஒரு கட்டத்தில், தமிழ் நாட்டுச் சீர்திருத்த செம்மல், தந்தை பெரியார் அவர்கள், 'எழுத்து மாறுதல் தேவை; எளிமையும் தேவை; ஒரே முறைமையாகவும் அமைந்திடவேண்டும்!' என்ற முடிவுக்கு வந்தார். அம் முடிவினை நடைமுறையில் மேற் கொண்டு, தமது கருத்துகளால் பரப்பி வந்தார்.

அவர்கள் மறைவுக்குப்பின், அவர்களது நூறாவது ஆண்டு விழா தமிழக அரசினரால் நாட்டு விழாவாகக் கொண்டாடப் படுகிறது அதற்கு மணி முடி சூட்டுவது போன்று தனிப்புகழ் சேர்க்கும் முறையில், பெரியார் அவர்கள் விரும்பிய தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை அரசு மதித்து ஏற்றுக் கொண்டு. நாட்டில் நடைமுறை செய்திட ஆணையிட்டது.

பெருமதிப்பிற்குரிய தமிழக முதல்வர் மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின் ஆர்வமும் செயலூக்கமும் உறுதியான முடிவும் பாராட்டத் தக்கது. வரலாற்றில் புதியதொரு திருப்பமாகவும் பொன்னெழுத்தால் பொறிக்கத்தக்க புகழ்ச்சி சின்னமாகவும் அமைந்துவிட்டது. முதல்வர் அவர்கட்கு நாடு தனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்ப் புலவர்கள், தமிழ் அறிஞர்கள் தமிழ் மொழி வளர்ச்சிக்குத் தொண்டாற்றுவதில் வியப்பில்லை. ஆனால் வேறு துறையில் ஈடுபாடு கொண்டு உழைத்திட்ட தந்தைபெரியார் அவர்கள் மொழி – எழுத்துத்துறையில் சிந்தனை செலுத்தியதும் செயல்பட்டு வெற்றி கண்டதையும் புதுமை எனல் வேண்டும் அன்றோ!

அவ்வகையில், பொறியாளர்களாக இருந்து அறிவியல் சார்ந்த பணிபுரியும் இருபெருமக்கள் இங்குக் குறிப்பிடத்தக்கவராவர்.

ஒருவர், மறைந்த அறிஞர் பா. வே. மாணிக்க நாயக்கர் அவர்கள். மற்றொருவர் இந்நூலின் கருத்தாளர் நண்பர் கொடுமுடி சண்முகன் அவர்கள். தனியொரு மனிதராக நின்று, தழைத்த ஆர்வமும் தளராத முயற்சியும் கொண்டு, தமிழ் ஆங்கிலம் இணைந்த தட்டச்சுப் பொறியை அமைத்துப் பெருஞ் சாதனை புரிந்துள்ளார் அவர். அவரும் அவரது துணைவியாரும் தமிழ்ச் சீர்மை வரலாற்றில் தங்கள் தொண்டினை நன்கு பதித்திருக்கின்றனர். அவர்களின் சிரிய செயல் திறனை நன்கு அறிந்தவன் நான். எனவே அவர்களைப் பாராட்டுவது என் கடமையாகிறது.

சிறப்புமிக்க இவர்களது உழைப்பின் பயனைத் தமிழ்மக்கள் அறியவும் பயன் பெறவும் வேண்டும் என்று மிக விரும்பினேன்; அதற்காகவே அவர்களது கருத்தினை-தட்டச்சு அமைப்பு முறையை நூல் உருவில் தந்திட விழைந்தேன். அவர்களது அன்பான ஒத்துழைப்புடன் இந்நூலை மிக்க விளக்கமுடன்

பெருஞ் செலவைக் கருதாது, தக்க படங்களையும் இணைத்து, சிறந்த நூலாக வெளியிடுகின்றேன். ஆசிரியர், கருத்தாளர் இருவர்க்கும் என் பாராட்டும் நன்றியும் உரியது. நாடும் அரசும் பாராட்டவேண்டும் என்பதும் என் பேரவா.

மேலும் இந்நூல் அமைப்பு முறை பற்றிச் சிறந்த கருத்து களைச் சொல்லி ஊக்குவித்த தமிழ்நாடு பொதுநூலக இயக்குநர் திரு. வே. தில்லைநாயகம் அவர்களுக்கும் என் நன்றியுரியது. தமிழ் எழுத்துச் சீர்மை பற்றிச் சரியான சிந்தனை கொண்டுள்ள இவரது அரிய கருத்து, எமது மற்றொரு வெளியீடான, 'எழுத்துச் சீர்மை—அறிஞர்கள் கருத்து' என்னும் நூலில் சேர்த்திட இசைவளித்தது பற்றியும் இங்கு நான் குறிப்பிடவேண்டும்.

எழுத்து விளக்கப் படங்களுடன் அச்சிடும் தொல்லையை அன்புடன் ஏற்று முடித்துத்தந்த மூவேந்தர் அச்சக உரிமையாளர் நண்பர் திரு. முத்து அவர்கட்கும்,புத்தக முகப்பு ஓவியம் வரைந்த கவிஞர் ஓவியர் அமுதோனுக்கும் என் நன்றியுரியது.

தமிழ் எழுத்து வடிவ மாற்ற புதிய அலைபரவும் இக் காலக் கட்டத்தில், மக்களும், கல்விகற்கும் மாணவரும், ஆசிரியரும், கற்றறிந்தோர் அனைவருமே இந்த நூலினை வாங்கிப் படித்துப் பயன்பெறவேண்டும். குறிப்பாகத் தமிழ்த் தட்டச்சுப் பயிற்சி நிலையத்தார்க்கு மிக உதவும் நூல் இது. அனைவரும் வாங்கி ஆதரிக்க வேண்டுகிறேன்.

வளரும் தமிழ் வையத்தின் முன்பு 'புதிய தமிழ் வடிவம்' வைத்து வணங்குகின்றேன்.

அன்பன்

வெள்ளையாம்பட்டு சுந்தரம்

சேகர் பதிப்பகம்

உள்ளே . . .

பக்கம்

புதிய தமிழ் வடிவங்கள்

முதல் நிலை

1. பெரியார் புழங்கியபடி (ஐ, ஔ தவிர)

இரண்டாம் நிலை

2. உகர, ஊகார உயிர்மெய்களுக்குப் பக்கக்குறி சேர்த்தல்.

3. உயிர் நெடில்களுக்குக் குறிலுடன் கால் சேர்த்தல்.

அச்சக முயற்சி

4. மெய்ப்புள்ளியை, பாகைக் குறி (Degree) போல் சேர்த்தல்.

5. இகர, ஈகார மேல்விலங்கைத் தனியாகச் சேர்த்தல்.

புதிய வடிவங்களை அடுத்த பக்கம் காண்க.

புதிய தமிழ் வடிவங்கள்

	அ	ஆ	இ	இா	உ	உா	எ	எா	ஐ	ஒ	ஒா	ஒள
க°	க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ
ங°	ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ
ச°	ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ
ஞ°	ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ
ட°	ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ
ண°	ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ
த°	த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ
ந°	ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ

ப்	ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ
ம்	ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ
ய்	ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ
ர்	ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ
ல்	ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ
வ்	வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ
ள்	ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ
ழ்	ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ
ற்	ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ
ன்	ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ

தமிழ் வடிவம்

அன்றும்

இன்றும்

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ

க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ழ ள ற ன

க கா கி கீ கு கூ கெ கை கொ

எண்ணும் எழுத்தும்

மொழி

'எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்' என்றனர் ஆன்றோர். இங்கு எண் என்பது எண்களின் தொடர்பான அறிவியலையும், எழுத்து என்பது இலக்கியத்தையும் குறிக்கின்றது. ஒரு மொழி பேச்சு வழக்காகத் தொடங்குகின்றது. நேருக்கு நேர் இருக்கும்போது பேசித் தெரிந்து கொள்கின்றோம். அருகில் இல்லாத ஒருவருக்குச் செய்தி அனுப்பும்போதுதான் எழுத்தின் இன்றியமையாமை தோன்றுகி .

எழுத்து

எழுத்து என்பது வரிவடிவம் என்று எண்ணிக் கொண்டிருக்கின்றோம். பண்டைத் தமிழ்ப் பேரிலக்கண நூலான தொல்காப்பியம் ஒலிவடிவத்தையே குறிப்பிடுகின்றது. ஒலிவடிவிற்கான உருவங்கள் வரிவடிவம் ஆகும். ஒலிவடிவம் மாறுவதில்லை. வரிவடிவம் காலப்போக்கில் பல உருமாற்றங்கள் பெறுகின்றன.

பண்டைய மொழிகள்

உலகத்தில் பண்டைய மொழிகள் ஆறு. இலத்தீன் கிரேக்கம், எபிரேயம், சமதிகிரும், சீனம், தமிழ் ஆகியவை குறிப்பிடத் தக்கன. அவற்றுள் சீனமும் தமிழும் மட்டுமே உயிரோடு உள்ளன. தமிழ், கடந்த மூவாயிரம் ஆண்டுகளாக உயர்தனிச் செம்மொழியாகச் சிறந்து விளங்குகின்றது.

உயிரெழுத்துகள் முற்காலத்தில் இருந்த நிலையும் அவை காலந்தோறும் உருவம் மாறிய நிலையும்:

நூற்றாண்டு Century	அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ
கி. மு. 3											
கி. பி. 2											
கி. பி. 3											
கி. பி. 4											
கி. பி. 5											
கி. பி. 6											
கி. பி. 7											
கி. பி. 8											
கி. பி. 9											

கி. பி. 10
கி. பி. 11
கி. பி. 12
கி. பி. 13
கி. பி. 14
கி. பி. 15
கி. பி. 16
கி. பி. 17
கி. பி. 18
கி. பி. 19

முற்காலத் தமிழ், காலந்தோறும் உருவம் மாறி மாறி, புதிய வடிவங்கள் பெற்றுள்ளதைக் காண்க.

நூற்றாண்டு		க்	ங்	ச்	ஞ்	ட்	ண்	த்	ந்	ப்	ம்	ய்	ர்	ல்	வ்	ழ்	ள்	ற்	ன்
கி.மு.	3	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]
கி.பி.	2	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]			[illegible]
கி.பி.	3	[illegible]		[illegible]			[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]		[illegible]	[illegible]			[illegible]
கி.பி.	4	[illegible]		[illegible]				[illegible]	[illegible]	[illegible]	[illegible]		[illegible]			[illegible]		[illegible]	[illegible]
கி.பி.	5	[illegible]	[illegible]	[illegible]		[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]		[illegible]
கி.பி.	6	[illegible]	[illegible]	[illegible]		[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]
கி.பி.	7	[illegible]	[illegible]	[illegible]		[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]		[illegible]		[illegible]
கி.பி.	8	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]
கி.பி.	9	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]

கி.பி.	10	க	ங	ச	ஞ	ட	ண	த	ந	ப	ம	ய	ர	ல	வ	ழ	ள	ற	ன
கி.பி.	11	க	ங	ச	ஞ	ட	ண	த	ந	ப	ம	ய	ர	ல	வ	ழ	ள	ற	ன
கி.பி.	12	க	ங	ச	ஞ	ட	ண	த	ந	ப	ம	ய	ர	ல	வ	ழ	ள	ற	ன
கி.பி.	13	க	ங	ச	ஞ	ட	ண	த	ந	ப	ம	ய	ர	ல	வ	ழ	ள	ற	ன
கி.பி.	14	க	ங	ச	ஞ	ட	ண	த	ந	ப	ம	ய	ர	ல	வ	ழ	ள	ற	ன
கி.பி.	15	க	ங	ச	ஞ	ட	ண	த	ந	ப	ம	ய	ர	ல	வ	ழ	ள	ற	ன
கி.பி.	16	க	ங	ச	ஞ	ட	ண	த	ந	ப	ம	ய	ர	ல	வ	ழ	ள	ற	ன
கி.பி.	17	க	ங	ச	ஞ	ட	ண	த	ந	ப	ம	ய	ர	ல	வ	ழ	ள	ற	ன
கி.பி.	18	க	ங	ச	ஞ	ட	ண	த	ந	ப	ம	ய	ர	ல	வ	ழ	ள	ற	ன
கி.பி.	19	க	ங	ச	ஞ	ட	ண	த	ந	ப	ம	ய	ர	ல	வ	ழ	ள	ற	ன

முற்காலத்தில் எழுதப்பட்ட எண்கள் காலவளர்ச்சியில் உருவங்கள் மாறி வளர்ந்ததைக் காண்க.

அராபிய 1	கி.பி 2.ம்	கி.பி 3 ம்.	கி.பி. 4.ம்	கி.பி. 10.ம். பாண்	கி.பி. 11 ம சோ.	கி.பி. 13 ம் சோழ	கி.பி 15.ம் பாண்	கி.பி. 18.ம்	இன்று
1/16	?	?	?	௰	௰	௰	௰	௰	௰
1/8	?	?	?	ஹு	ஹு	ஹு	ஹு	ஹு	ஹு
1/4	?	?	?	வ	வ	வ	வ	வ	வ
1/2	?	?	?	ரு	ரு	ஓ	இ	இ	இ
3/4	?	?	?	ஙு	ஙு	ஙு	ஙு	ஙு	ஙு
1	-	\	\	+	+	+	க	க	க
2	=	=	⸗	உ	உ	உ	உ	உ	உ
3	≡	≡	≋	ங	ங	ங	ங	ங	ங

4	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	௪	௪	௪	௪
5	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	௫	௫	௫	௫
6	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	௬	௬	௬	௬
7	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	௭	௭	௭	௭
8	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	[illegible]	௮	௮	௮	௮
9	[illegible]	[illegible]	?	[illegible]	[illegible]	௯	௯	௯	௯
10	[illegible]	[illegible]	?	[illegible]	[illegible]	௰	௰	௰	௰
100	[illegible]	[illegible]	?	[illegible]	[illegible]	௱	௱	௱	௱
1000	[illegible]	[illegible]	?	[illegible]	[illegible]	௲	௲	௲	௲

இளந் தமிழ் !

தமிழன்னையின் சீரிளமைத் திறம் வியந்து பாடி, செயல் மறந்து நிற்பதாக மனோன்மணீயம் பாடுகின்றது. கடந்த மூவாயிரம் ஆண்டுகளாக உள்ள ஒரு மொழியை இளமை வாய்ந்தது என்று சொல்லுவது எதனால்?

காலங்கள் பல கடந்த போதிலும், அன்று எழுதியவற்றை இன்றைக்கும் புரிந்து கொள்ள இயலுவதாற்றான். இறந்து போகின்ற மொழிக்கு, வயது உண்டு. மூப்பைக் கடந்து விட்ட மொழிக்கு என்றும் இளமைதானே!

மாறுகிற வடிவம்

ஒலிவடிவம் மாறாமல் இருந்த போதிலும்,வரிவடிவம் அவ்வப் போது மாறி வந்துள்ளது. தொல்காப்பியரும், திருவள்ளுவரும் எழுதிய எழுத்துகளின் வரிவடிவம் வேறு. அவற்றின் வளர்ந்த நிலையே தற்போதைய வரிவடிவம் என்பது வெள்ளிடை மலை.

எழுத்துகள் அடிக்கடி மாற்றப்பட்டு வந்துள்ளதை — முன் (14—19) பக்கங்களில் கண்டு அறியலாம். அவை கல்வெட்டு ழுத்துச் சான்றுகளைக் கொண்டு விளக்கும் பட்டியல்கள்.

மாறாத நிலைமை

அச்சு எந்திரம் தோன்றாத காலமாதலால் எழுத்துகள் உரு மாறி வளர்ந்து விட்டன. அச்சிட்ட நூல்கள், செய்தித்தாள்கள் முதலியவற்றால் தமிழகம் முழுவதும், தமிழ் பேசுகின்ற உலக நாடுகள் அனைத்திலும் தமிழ் எழுத்துகளின் வரிவடிவங்கள் நிலை பெற்று விட்டன. இனிமேல் மாறும் என்று எண்ணுவதற் கில்லை.

மாறலாம்

வரிவடிவம் தானே மாறாது. எனினும் அறிவியல் முன்னேற்றம் கருதி, நாமே சில மாற்றங்களை மேற்கொள்ளலா மல்லவா?

குறையோ?

அப்படியாயின் தற்போதைய தமிழ் எழுத்துகள் குறை யுடையனவா? இல்லவே இல்லை என்று அடித்துச் சொல்லலாம். குறை என்று இல்லாவிட்டாலும், அச்சு எந்திர, கம்ப்யூட்டர்

(கணிதி என்பர்) காலத்திற்கேற்ப மிகச் சிறிய திருத்தங்களை மேற்கொள்வதில் பிழையில்லை.

செப்பம்தான்

இச் செப்பங்களால், தமிழ் மொழி வளர்ச்சியோடு, தமிழ் மொழி பேசுவோரும் வளர்ச்சி பெறுவர் என்பது திண்ணம். பொருளாதாரச் சிக்கனமும் உண்டாகும்.

பிழையல்ல

இன்றியமையாத தேவைக்கேற்ற செப்பங்களைச் செய்து கொள்வது பிழையல்ல என்பதை உணர்த்தவே தமிழ் எழுத்து களின் வளர்ச்சியைக் காட்டும் அட்டவணையை முன்னால் இணைத்துள்ளோம்.

ஒலி வடிவம்

எழுத்துகள் ஒலி வடிவானவை என்பதைத் தொல்காப்பியர் விரிவான முறையில் கூறினார். வரிவடிவங்கள் எல்லாவற்றையும் விளக்காமல், ஒரு சிலஎழுத்துகளைப்பற்றி மட்டுமே அவர் கூறிப் போந்தார்.

> 'பழையன கழிதலும் புதியன புகுதலும்'
> வழுவல; காலவகை யினானே'

என்றார் தொல்காப்பியர்.

இன்றைய வடிவங்கள்

முப்பது எழுத்துகள்

தமிழ் எழுத்துகள் உயிர், மெய், உயிர்மெய், ஆய்தம் என நான்கு வகைப்படும்.

அகர முதல னகர இறுவாய் எழுத்துகள் முப்பது என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.

உயிர்	12
மெய்	18
உயிர் மெய்	216
ஆய்தம்	1
மொத்தம்	247

இவற்றுள் உயிர், மெய் ஆகிய இரண்டும் முதல் எழுத்துகள் ஆகும்.

உயிர்மெய் எழுத்துகளைச் சார்பெழுத்து என்பர்.

வடிவங்கள்

பனிரண்டு உயிர்களும், பதினெட்டு மெய்களும் ஓர் ஆய்தமும் தமக்கெனத் தனிவடிவம் கொண்டவை. உயிர் மெய் எழுத்து களைத் தோற்றுவிப்பதற்கு, மெய்யெழுத்தின் தலைப்புள்ளியை நீக்கிவிட்டு, அத்துடன் பக்கக் குறி சேர்த்தல், மேல்விலங்கு இடல், கீழ்விலங்கு இடல், ஆகிய முறைகள் கையாளப் படுகின்றன.

ா ை ெ ள = பக்கக் குறிகள்

ி ீ மற்றும் உகரக்குறிகள் = மேல் கீழ் விலங்குகள்

அச்சு வடிவம்

அச்சுவடிவத்தில், ஒரு எழுத்திற்குப் பக்கத்தில், அடுத்த எழுத்து அடுக்கப்படுகிறது. அதனால், மேல் விலங்கு, கீழ் விலங்கு, மெய்ப்புள்ளி உள்ளவை, தனி எழுத்தாக உள்ளன.

சான்றாக, அச்சில் க் என்பது ஒரே எழுத்து. க எழுத்தையும் புள்ளியையும் இணைக்க இயலாது. ஆனால் கை என்ற எழுத்தில் கொம்பு தனியாகவும் எழுத்து தனியாகவும் இருக்கலாம். அதனால் ஐகார வரிசை உயிர்மெய்களை அச்சிட, ை கொம்பு மட்டும் கூடுதலாக இருந்தால் போதும். லை, ளை, னை, ணை போன்ற நான்கு எழுத்துகள் விதி விலக்கு. அதனால் ஐகார வரிசை முழுமை பெற இந்நான்கு எழுத்துகளும் கூடுதலாக வேண்டும். அதே போன்று ஆகார உயிர்மெய் வரிசையில் கால் கூடுதலாக இருக்க வேண்டும். அத்துடன் னா, ணா, றா போன்ற மூன்று தனி எழுத்துகளும் வேண்டும். லை, ளை, னை, ணை, னா, ணா, றா போன்ற ஏழு எழுத்துகளால் ஆகார வரிசை, ஐ கார வரிசை ஒகார வரிசை ஆகிய மூன்று வரிசைகளில் சீர்மை (Uniformity) இல்லை.

இகர, ஈகாரம்

இகர, ஈகார வரிசையில் மேல் விலங்கு போடும் பழக்கம் உள்ளது. அச்சில் கி என்ற எழுத்து தனியாக இருக்க வேண்டும். க என்ற எழுத்துடன் எதனையும் இணைக்கஇயலாது. கீ எழுத்தும் அவ்வாறே. ஆக, இகர, ஈகார உயிர் மெய் வரிசைக்கு 18+18=36 எழுத்துகள் கூடுதலாக வேண்டும்.

எகர, ஏகாரம்

எகர வரிசை ஓரளவு இடர் இல்லாதது. ெ—ஒற்றைச்சுழிக் கொம்பு தனியாக உள்ளது. அதே:போல ே—இரட்டைச் சுழிக் கொம்பும் தனியாக உள்ளது. எனவே ெ, ே என்ற இரண்டு குறியீடுகள் இருந்தால் போதும். எகர, ஏகார வரிசை முழுவதும் அச்சிட்டுக் கொள்ளலாம்.

ஒகர ஓகாரம்

ஒகர வரிசை என்பது ெ—ஒற்றைச் சுழிக் கொம்புடன் ஆகார உயிர்மெய் நெடிலைச் சேர்ப்பது. அதே போன்று ஓகார வரிசை

யிலும் ே—இரட்டைச் சுழிக் கொம்புடன் ஆகார உயிர்மெய் நெடிலைச் சேர்ப்பது. எனவே ஒகர, ஓகார உயிர்மெய் வரிசைக்குக் கூடுதல் எழுத்துகளே தேவையில்லை.

ஔகாரம்

ஔகார வரிசையில், ெ—ஒற்றைச்சுழிக் கொம்பு முன்னாலும் ள— என்ற குறி பின்னாலும் உள்ளது. ளகரம் ஏற்கனவே அகர உயிர்மெய் வரிசையில் வந்து விடுவதால், அதையே பயன்படுத்தலாம் எனவே ஔகார வரிசைக்கும் கூடுதல் குறியீடு ஏதுமில்லை.

உகர ஊகாரம்

இனி உகர ஊகார வரிசைக்கு வருவோம் இவ்வரிசைகளில் ஒவ்வொரு எழுத்தும் ஒரு விதம். கு நு சு ஞு டு ணு என்றவாறு ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதம். எனவே உகர உயிர்மெய் 18+ ஊகார உயிர் மெய் 18; ஆக 36 எழுத்து வடிவங்கள் தேவையாகிவிடுகின்றன.

மொத்த வடிவங்கள்

உயிர்		— 11	அ–முதல் ஔ–வரை
மெய்		— 18	க்–முதல் ன்–வரை
உயிர் மெய்	அகரவரிசை	— 18	க–முதல் ன–வரை
,,	ஆகாரவரிசை	— 1	ா
,,	கூடுதல்	— 3	ஊ ஹ ரு
,,	இகர வரிசை	— 18	கி–முதல் னி–வரை
,,	ஈகார வரிசை	— 18	கீ–முதல் னீ–வரை
,,	உகர வரிசை	— 18	கு–முதல் னு–வரை
,,	ஊகார வரிசை	— 18	கூ முதல் னூ–வரை
,,	எகர வரிசை	— 1	ெ
,,	ஏகார வரிசை	— 1	ே
,,	ஐகார வரிசை	— 1	ை
	கூடுதல்	— 4	ஊ, ணா, லை, ஊ.
,,	ஒகர வரிசை	—	இல்லை
,,	ஓகார வரிசை	—	இல்லை
,,	ஔகார வரிசை		இல்லை
	ஆய்தம்	— 1	ஃ
	ஆக மொத்தம்	131	

பு. த.—2

247 தமிழ் எழுத்துகளை அச்சிட 131 தனித்தனி வரி வடிவங்கள் தேவைப்படுகின்றன.

தட்டச்சு வடிவங்கள்

அச்சில் இல்லாத வசதிகள் சில தட்டச்சுப் பொறியில் உள்ளன, ஒன்றோடு ஒன்று ஒட்டிக் கொள்ளும் வசதி இங்கு உண்டு. அந்தக் கோணத்தில் இனித் தமிழ் வடிவங்களைப் பகுத்துக் காணலாம்.

மெய்ப்புள்ளி

மெய்யெழுத்துகளின் மெய்ப்புள்ளியை, உயிர்மெய் எழுத்தின் மேல் தட்டிக் கொள்ளலாம். மெய்ப்புள்ளி தட்டச்சுப் பொறியில் நிறுத்தச் சாவியாக அமைந்துள்ளது. அதாவது இந்தப் புள்ளியை அடித்ததும் பொறி நகராது. எழுத்தை அடித்தால், அது புள்ளியின் கீழ் அமையும். இப்போது எழுத்தும், மெய்ப்புள்ளியும் ஒன்றின்மீது ஒன்ருக ஒரே எழுத்தாகத் தெரியும். அதனுல் மெய்வரிசையை அடிக்க ஒரே ஒரு மெய்ப்புள்ளிக் குறி போதும். அச்சில் 18 எழுத்து தேவைப்பட்ட இனத்திற்கு தட்டச்சில் ஒரே குறி போதும்.

இகர, ஈகாரம்

இதே போன்று இகர, ஈகாரக் கொம்புகள் தனித்தனியாக நிறுத்தக் குறிகளில் உள்ளன. முதலில், குறியைத் தட்டிப் பின்னர் எழுத்தைத் தட்ட வேண்டும். இங்கும் 18 + 18 = 36 வடிவங்கள் தேவைப்பட்ட இனங்களில் இரண்டே குறியீடுகளில் வேலை முடிந்து விடுகிறது.

உகர, ஊகாரம்

உகர, ஊகார வரிசையைக் காண்போம். தட்டச்சுப் பொறியில் கூடுதலாக இடத்தை அடைப்பவை இவ்வரிசைகளே.

தனித்தனி வடிவம்

கு, சு, ஞு, டு, ணு, து, நு, மு, ரு, லு, ழு, ளு, று, னு, ஆகிய பதினான்கு எழுத்துகள் தனி வடிவம் கொண்டவை. ணு, சற்றே நீளமாக இருப்பதால் இரண்டாக வெட்டி, இரண்டு சாவியில் வைத்துள்ளார்கள். ஆகவே இவை பதினைந்து இடத்தை அடைக்கின்றன.

கீழ்க் கோடு

பு வு யு நு ஆகிய நான்கிற்கும் அடிக்கோடு மட்டும், தனிச் சாவியாக நிறுத்தச் சாவியில் உள்ளது. ஆக, உகர வரிசைக்கு மட்டும் 15 இடங்கள் ஆகின்றன.

நெடில்

கூ கு ஆகிய இரண்டும் தனி எழுத்துகள். டூ, மூ, ரூ, ழூ, ஆகியவற்றின் இறுதிச் சுழி மட்டும் தனியாக ஒரு நிறுத்தச் சாவியில் அமைந்துள்ளது. ஞு, ணு, து, நு, லு, ளு, று, னு ஆகியவற்றிற்காக காலின் ஒரு பகுதியான T பகுதி மட்டும் ஒரு நிறுத்தச் சாவியில் உள்ளது. பூ, வூ, யூ, நூ ஆகியவற்றின் கீழ் விலங்கு மட்டும் தனியாக ஒரு நிறுத்தச் சாவியில் உள்ளது. ஆக, ஊகார உயிர்மெய் வரிசைக்கு மட்டும் 5 வடிவங்கள் உள்ளன. எனவே உகர, ஊகார வரிசைக்கு மொத்தமாக 15+5=20 இடங்கள் தேவைப்படுகின்றன. எனவே இந்த இரண்டு வரிசைகளில் எளிமை கண்டாலே அது மிகப் பெரிய சாதனை ஆகும்.

கிரந்த வடிவங்கள்

தமிழ் எழுத்துகளைத் தவிர ஸ, ஸ்ரீ, ஜ என்ற கிரந்த எழுத்துகளும், அவற்றின் உகர, ஊகார வரிசைகளுக்குத் தேவைப்படும் ு, ூ குறிகளும் சேர்த்து ஐந்து சாவிகள் கூடுதலாக உள்ளன.

மொத்த வடிவங்கள்

தமிழ்த் தட்டச்சின் சாவிக் கணக்கு வருமாறு:

	உயிர்	11	அ முதல் ஓ வரை
	மெய்	1	மெய்ப்புள்ளி மட்டும்
உயிர்மெய்	அகரவரிசை	18	க முதல் ன வரை
,,	ஆகார வரிசை	1	ா
	கூடுதல்	3	ஞ, ண, ரு
,,	இகர வரிசை	1	மேல் விலங்கு
	கூடுதல்	1	டி மட்டும்
,,	ஈகார வரிசை	1	மேல் விலங்கு
	கூடுதல்	1	டீ மட்டும்

உயிர் மெய் உகர வரிசை	—	20	
,, ஊகார வரிசை	—	5	
,, எகர வரிசை	—	1	ெ மட்டும்
,, ஏகார வரிசை	—	1	ே மட்டும்
,, ஐகார வரிசை	—	1	ை மட்டும்
கூடுதல்	—	4	ஊ, ஊ, ஊ, ஊ
ஒகர, ஓகார ஔகார வரிசைகள்		—	இல்லை
ஆய்தம்		1	ஃ மட்டும்
ஆக மொத்தம்		71	

அச்சும், தட்டச்சும்

உயிரும், மெய்யும் ஆக முப்பது எழுத்துகள், உயிர் மெய் யோடு 247 வடிவங்கள் ஆகின்றன. அவற்றை அச்சில் 131 வடிவங் களாகவும் தட்டச்சில் 71 வடிவங்களாகவும் பயன்படுத்துகிறோம். தட்டச்சில் எழுத்துகளை முறிக்கவோ, ஒடிக்கவோ,: ஒட்டவோ தயங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அச்சில் இந்த வசதிகள் இல்லை.

வடிவங்கள் குறைய வேண்டும்.

வளர்ச்சி பெருக வேண்டும்.

செப்பங்களின் தேவை

தமிழ் எழுத்துகளைச் செப்பம் செய்ய வேண்டுவதன் காரணங்களை ஆராய்தல் பொருத்தமாகும்.

சீர்மை (Uniformity)

உயிர் மெய் வரிசையில் சீர்மை இல்லை.

ஆகார வரிசை

அகர நெடில் வரிசையில் எழுத்துடன் கால் சேர்த்து (கா + = கா) நெடிலாக்குகின்றோம். ஆனால் ணு, ணு, ரு என்ற மூன்று எழுத்துகள் மட்டும் தனித்து நிற்கின்றன.

இளம்பிள்ளைகளுக்குத் தமிழ்ப்பாடம் சொல்லிக் கொடுக்கும் பெற்றோர் இந்தச் சங்கடத்தை உணர்வர். நமது பிள்ளைகள் இவை மட்டும் ஏன் மாறியுள்ளன என்று கேட்கும்போது பதில் சொல்ல முடியவில்லை. கூடுதலாக மூன்று வரிவடிவங்களைச் சுமத்தி, இளம்பிள்ளைகளைத் தொல்லைக்குள்ளாக்குகின்றோம்.

ஐகார வரிசை

ஐகார வரிசையிலும் இதே பிழை உள்ளது. எழுத்தின் முன்னால் ை-குறியிட்டு 14 எழுத்துகளை எழுதி விடுகிறோம். லை, ளை, னை, ணை ஆகிய நான்கு எழுத்துகள் மட்டும் ஒழுங்கு பிறழ்ந்து, துதிக்கை முளைத்து உள்ளன. எழுத்துகளில் இவை

நான்கு மட்டுமே, முன்னால் சுழி உள்ளவை; ஓலையில் எழுது வதற்கு வாகானவை. அதனால் அதன் முன்னர் வந்த கொம்பு, துதிக்கையாக மாறிவிட்டது. ஐகார ஒட்டுக் குறி எவ்வாறு வந்ததென்று அறிந்து கொள்ளுதல் நலம் பயக்கும்.

க கா கி கீ கு கூ கெ கை கோ

கா ... கா

கே ... கெ கே

கை ... கை கை

கு ... கு

உகர, ஊகார வரிசைகள்

உகர, ஊகார வரிசைகளில் ஏராளமான வடிவங்கள் உள்ளன. மிக அதிகமாகத் தொல்லை தரும் வரிசைகள் இவையே பண்டைய வடிவங்களில் பல நேர்க்கோடுகளால் ஆனவை. உகர, ஊகார உயிர்மெய்களுக்கு, எழுத்தின் அடிப்பகுதியில் கிடைமட்டத்தில் ஒரு கோடு அல்லது இருகோடுகள் இடுவது வழக்கம்.

நேர்க்கோடு இன்றி அடியில் வட்டமான எழுத்துகளும் இருந்தன. அவற்றில் எழுத்தின் அடியில், செங்குத்தாக ஒரு கோடு இடுவது வழக்கம். அத்தகையவை வேறு வடிவமாக வளர்ந்து விட்டன. எனவேதான் உகர, ஊகார வரிசைகளில் இத்தகைய சிக்கல்கள் அதிகம் நேர்ந்து விட்டன. மகரம் உகரம் ஏற்றுத் திரிதல் நல்ல எடுத்துக் காட்டாகும்.

ம மு வளர்ச்சி

சுமை

தமிழ்ச் சிறார்களின் சுமை குறைவதற்காகவே உயிர்மெய் வரிசைகளைச் சீர்மைப் படுத்துவது மிகவும் இன்றியமையாதது. இவ்விளந்தளிர்கள் மாற்றார் வீட்டுப்பிள்ளைகள் அல்லர்; நமது பிள்ளைகள் என்று எண்ணும்போது சீர்மைக்கான செப்பங்களை எளிதில் ஏற்றுக் கொள்ளலாம்.

எழுத்துப் பரவல்

அச்சில் 131 வடிவங்கள். இது அச்சுத் தொழிலுக்கே பெருஞ் சுமையாக உள்ளது. எண்ணிக்கை குறையக் குறைய அச்சு மலிவாகும்; எழுத்துப் பரவல் கூடும். மொழி வளர்ச்சி மிகும்.

ஆங்கிலம்

ஆங்கிலத்தில் 26 எழுத்துகள். அவற்றில் பெரிய எழுத்து, சிறிய எழுத்து என 52 ஆகிவிடுகின்றன. எனினும் பல வேளைகளில் ஒருவகை எழுத்துகளையே பயன்படுத்துகிறோம். கம்ப்யூட்டர், டெலக்ஸ், பிராட்மா பிரஸ், வங்கிகளில் காசோலை எழுதும் பொறி போன்ற பல இடங்களில் ஆங்கிலத்தின் ஒரு வகை எழுத்துகள் மட்டுமே பயன்படுகின்றன. இரண்டாவது வகை இல்லையானாலும் பொருள் மாறாது.

நன்மைகள்

தமிழிலும் வரிவடிவ எண்ணிக்கையைக் குறைத்தால் பல நன்மைகள், அறிவியல் புலமைப் பெருக்கம், பொருளியல் வளர்ச்சி முதலிய பயன்கள் பெருகும்.

இருமொழித் தட்டச்சு

வரிவடிவக் குறைப்பால் ஏற்படும் நன்மைகள் ஏராளம். அவற்றில் சில வருமாறு :-

ஒரே தட்டச்சுப் பொறியில், ஆங்கிலம், தமிழ் இரண்டையும் வைத்துக் கொள்ளலாம்.

தட்டச்சுப் பொறியில் ஒருவகை ஆங்கில எழுத்துகளை எடுத்து விடலாம். பெரிய எழுத்துகளை மட்டும் வைத்துக் கொள்ளலாம். அல்லது சிறிய எழுத்துகளை மட்டும் வைத்துக் கொள்ளலாம். கோவைக் கலைக்கதிர் அச்சகத்தில் ஏராளமான ஆங்கில நூல்களும் மலர்களும் சிறிய எழுத்தில் மட்டும் அச்சிட்டுள்ளார்கள். அதில் பொருள் மாற்றம் ஏதுமில்லை; பொலி

வாகவும் உள்ளன. தேவையாயின் எழுத்தின் கீழ் ஒரு கோடு அடித்து, பெரிய எழுத்தென அடையாளம் காட்டலாம்.

சாவிப் பலகை

தமிழ் வரிவடிவை 34 ஆகச் சுருக்கலாம். ஆங்கில எழுத்துகள் எடுபட்ட இடத்தில் இவற்றைப் பெய்து கொள்ளலாம். தற்போதுள்ள நிலைவு செய்யப்பட்ட Standardised Key Boards) சாவிப்பலகையை, ஆங்கிலத்திலும், தமிழிலும் அப்படியே வைத்துக் கொள்ளலாம்.

ஆட்சி மொழி

இன்று தமிழ்மொழி ஆட்சிமொழி ஆகிவிட்டதே தவிர அதன் செயலாக்கம் மிகவும் குறைவு. அதற்கான முதன்மையான சாரணம் போதிய தட்டச்சுப் பொறி இல்லாமையே யாகும். சிறிய அலுவலகங்களுக்குக்கூட தமிழ், ஆங்கிலம் என இரண்டு பொறிகள் வழங்குவது அரிதாகும். ஏகப்பட்ட செலவு பிடிக்கும். அதனால் தமிழ்நாடு அரசாங்கம் திணறுகிறது. ஒரே பொறியில் இரண்டு மொழி இருந்தால் எவ்வளவோ சிக்கனம்!

அச்சு விலை குறையும்!

அச்சகத்தில் சென்று பார்த்தால், எழுத்துகள் அடுக்கி வைத்திருக்கும் அஞ்சறைப் பெட்டி போன்ற அடுக்கு மிகப் பெரிதாக இருக்கும். ஆங்கில எழுத்துகள் 14 கிலோ வாங்க வேண்டிய இடத்தில் தமிழ் எழுத்துகள் 28 கிலோ வாங்க வேண்டும்.

அச்சுக் கோர்ப்போர் கை அதிக நீளம் செல்ல வேண்டியதில்லை. அச்சுத் தொழில் எளிதாகும்; மலிவாகும்.

மின்னியல் அச்சுக்கோர்ப்பு

முன்னேறிய நாடுகளில் மின்னியல் (Electronic Composing) முறையில் அச்சுக்கோர்ப்பு நடைபெறுகின்றது. எழுத்துகள் எண்ணிக்கை குறையக் குறைய மின்சுற்றுகள் குறையும். இதனால் அப்பொறியின் விலையும் மின்னியல் தட்டச்சுப் பொறியும் அவ்வாறே மலிவாகும். நான்கில் ஒரு பங்காக விலை குறையும்.



தொலை அச்சு

டெலக்ஸ் எனப்படும் 'தொலை அச்சு' தமிழில் இதுவரை செய்யப் படவில்லை. அதற்கு கூடுதல் வரிவடிவம் ஒரு தடையாக உள்ளது. இந்தியில் மெய் எழுத்துகள் அதிகமாக இருந்த போதிலும், உயிர்மெய் வடிவில் சீர்மை இருப்பதால், வரிவடிவம் தற்போதைய தமிழைவிடக் குறைவு. அதனால் இந்தியில் டெலக்ஸ் உண்டு! எழுத்து வடிவங்கள் குறையும்போது தமிழிலும் தொலை அச்சு சாத்தியமாகும்.

கணிதி (Computer)

கணக்கு அறிவியல் முன்னேற்றத்தின் அடிப்படை. பெருகி வரும் விஞ்ஞானம், வளர்ச்சிக்கு அறிகுறி! அவ்வகையில் கணிதிப் பொறிகள் தமிழில் விடையளிக்க வேண்டாமா? கணக்குகள் மட்டுமல்ல, பல அச்சு வேலைகளையும், கணிதிகள் மூலம் செய்து முடிக்கின்றனர். பள்ளியிறுதிச் சான்றிதழில் மதிப்பெண் அச்சடிப்பதெல்லாம், தற்போது கணிதிகள் மூலமே நடைபெறுகின்றன. அவை தமிழில் நடைபெற வேண்டாமா?

காசோலை எழுதும் பொறி

தற்போது வங்கிகளில் காசோலை எழுதுவதற்கு உள்ள பொறிகளில் பெரிய எழுத்து ஆங்கிலம் மட்டுமே உள்ளது. அது போ

தமிழ் வரிவடிவைக் குறைத்தால் காசோலைப் பொறி தமிழிலும் கை கூடும்.

பிராட்மா அச்சு

காப்புறுதிக் கழக அறிவிப்புகள், பற்றுச் சீட்டுகள் வருவதைக் கண்டிருப்பீர்கள். அவை பிராட்மா என்னும் நிறுவனத்தால் தயாரிக்கப்படும் பொறிகளாகும். தகரத்தில் எழுத்துகளை அழுத்தி, முத்திரை தயாரித்துக்கொண்டு, அதனை, எந்திரத்தில் அழுத்தி அனுப்புவர். பல நிறுவனங்கள் தங்களின் வாடிக்கையாளர் முகவரி எழுத இதனைப் பயன்படுத்துவர். தமிழில் வரிவடிவம் குறைந்தால் இதுவும் இயலும்.

4203/ [illegible] / 78

S Bragadham
11-B, Second Avenue
Indiranagar
MADRAS - 600020

சாவிக் கொத்து

ஒவ்வொரு கண்காட்சியிலும் சாவிக் கொத்தில் மாட்டுகிற பிளாஸ்டிக் தகட்டில் பெயர் வெட்டிக் கொடுப்பார்கள். அங்கும் தமிழ் இருக்காது. அவரோ சிறிய கடைக்காரர்; அதிகப்படி எழுத்துகளை வாங்கி வைக்க இயலாது. அதனால் ஆங்கிலத்தில் மட்டும் வைத்திருப்பார். அவரிடம் காரணம் கேட்டீர்களானால், "யார், சார், தமிழில் கேட்கிறார்கள்?" என்பார்.

இன்றியமையாமை

வரிவடிவம் குறைய வேண்டியதன் இன்றியமையாமையை விளக்க இன்னும் ஏராளமான எடுத்துக்காட்டுகள் தரலாம். எனினும் விரிவு கருதி இத்துடன் நிறுத்தி மேலே செல்லலாம்.

சில செப்பங்கள்

தமிழ் எழுத்துகளுக்குத் தேவைப்படும் சீர்திருத்தங்கள் எவையெவை?

எவையெவை என்று கருது முன்னர், அவற்றுக்கான கொள்கைகளை நாம் உருவாக்கிக் கொள்ளலாம். கொள்கைக் கேற்ற செப்பங்களைப் பரிந்துரைக்கலாம்.

கொள்கைகள்

தொன்று தொட்டு வரும் தமிழ் மொழியின் இலக்கணத் திற்கும், மரபிற்கும் எதிராக இருத்தல் கூடாது.

எழுத்து வரிசைகளில் சீர்மை வேண்டும்.

ஒரு சிறிய மாற்றத்தால் நிறைய வடிவங்கள் குறைய வேண்டும்.

புதிய மாற்றங்கள், ஏற்கனவே அறிந்ததாக இருத்தல் நலம்.

புதிய எழுத்துகளுக்கு மாறுகின்றபோது, இடர் குறைவாக இருக்க வண்டும்.

அச்சு, தட்டச்சு, கணிதி, தொலையச்சு போன்ற வளர்ச்சிப் பணிகளுக்கு உதவும் வகையில் இருக்கவேண்டும்.

ஆகவே, பிறர் சுலபமாக தமிழ்மொழியைக் கற்றுக் கொள்வதற்காகவும், சுலபமாக அச்சுக் கோர்க்கவும் டைப் அடிக்கவும், தமிழ் எழுத்துகளில் சில சீர்திருத்தங்கள் செய்யப்படுவது நலம் என்று நினைக்கிறேன்.

தமிழில் எழுத்துக்கள் அதிகம். மொத்த எழுத்துக்கள் 216 வேண்டியிருக்கிறது. என்றால், இதில் 135 எழுத்து உருவங்கள் தனித்தனி ஞாபகத்தில் வைக்கவேண்டியிருக்கிறது.

தமிழ் எழுத்துக்கள். ஆங்கிலம் முதலிய சில அந்நிய வட மொழி எழுத்துக்களை எழுத்துகூட்டுவதற்கு ஒரு கட்டுப்பாட்டுக்கு அடங்கிய நேர்முறையைகொண்டதானாலும் எழுத்துக்களைக் கற்கவேண்டியது கஷ்டமாயிருக்கிறது. ஆங்கிலத்தில் 26 எழுத்துக்கள் உள்ளன. அவைகளில் உயிர் எழுத்துக்கள் 5 அல்லது 6. மெய் எழுத்துக்கள் 20 எனலாம். எல்லாம் தனி எழுத்துக்களே. உயிர்மெய் எழுத்துக்கள். அதாவது உயிரும் மெய்யும் கூடிய எழுத்துக்கள் கிடையாது. வெகு சுலபமாக எழுத்துக்களைக் கற்றுக்கொள்ளலாம். ஆனால், இலக்கண முறை! உச்சரிப்பு முறை ஒருபொது வரையறைக்குக் கட்டுப்பட்டதல்ல. தமிழ் அப்படியல்ல. எழுத்துக் கூட்டுதலும், உச்சரிப்பும் அதன் இலக்கணமும் பெரிதும் இயற்கையையே அடிப்படையாகக் கொண்டதாகும். அப்படிப்பட்ட மொழியை நாம் ஏன் நவீன முயற்சிக்கு ஏற்றவண்ணம் செப்பனிடக்கூடாது?

← விடுதலை இதழில் ஓர் எடுத்துக் காட்டு.

பரிந்துரை

புதிய செப்பங்களுக்கான பரிந்துரைகளை மூன்று வகைப்படுத்தலாம்.

பெரியார் புழங்கியபடி

லை, ளை, னை, ணை,
னா, ணா,, றா.

இதனால் ஏழு எழுத்துகள் குறைகின்றன. ஆகார வரிசையும், ஐகார வரிசையும் சீர்மை பெறுகின்றன. முன்னும் பின்னும் உள்ள எழுத்துகளோடு ஒட்டிப் போகின்றன. அறிந்த குறியீடுதான். கடந்த அரை நூற்றாண்டாக பெரியார் அவர்களால் புழங்கி வரும் பேறு பெற்றவை. பெரியார் அய், அவ் என எழுதியும் வந்தார்கள். அது பற்றிப் பின்னர் விவாதிக்கப் படும். தற்போது தமிழக அரசு புதிய அரசாணை *ஒன்றின் மூலம் இம் மாறுதல்களை ஏற்றுக் கொண்டது.

உகர, ஊகார உயிர்மெய்களுக்குப் பக்கக்குறி சேர்த்தல்:

எழுத்துடன் ா (கால்) வாங்கினால் அகர நெடில் என எடுத்துக் கொள்கிறோம். கூ-கி ஆகக் கூடுதலாக ஒரு மேல் விலங்கு தான். எகர வரிசைக்கும் ஒரு

*தமிழ் நாடு அரசு, பொது (செய்தி-மக்கள் தொடர்பு)த் துறை, செய்தி வெளியீடு எண் 449; நாள் 19-10-1978.

ஒத்தைச் சுழிக் கொம்பு (ெ) தான் முன்னால் சேர்க்கின்றோம். அதேபோல ஏகாரத்திற்கு இரட்டைச் சுழி கொம்பு (ே).

ஐகார வரிசைக்கு சங்கிலி வடிவம் முன்னால் சேர்க்கின்றோம். அப்படியிருக்க உகர வரிசைக்கு அவ்வாறு ஒரு பக்கக் குறி போட்டுக்கொண்டால் என்ன?

அறிந்த குறி

ஏற்கனவே ஒரு மொழியில் அந்தப் பழக்கம் உண்டு. நீங்கள் அறிந்த மொழிதான் எதுவெனச் சிந்திக்கின்றீர்களா?

வேறு எது? தமிழ்தான். ஜுரம், ஜூலை என்று எழுதுகிறோம். இது எந்த மொழி? முதல் வகுப்புத் தமிழ்ப் பாட நூலை எடுத்துப்பாருங்கள். இல்லை எனக் கூற விழைவோர் வேறு எந்த மொழிப்பாட நூலிலாவது இக்குறியீடுகளைக் காட்ட இயலுமா?

களங்கம்

எனினும் தமிழின் தனித் தன்மையைக் கெடுத்து, கலப்புக்குப் பாதை அமைக்கின்றதென்ற களங்கம் நெஞ்சில் ஒரு முள்ளாகக் குத்துகின்றது. அந்த உறுத்தலைத் தவிர்க்க விழைந்தால், ு, ூ குறிகளைத் தவிர்த்து, தமிழர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய அழகுக் குறி ஒன்றினைத் தாராளமாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம். அதுபற்றி அடுத்து வரும் அத்தியாயத்தில் ஆராயலாம்.

"அகர முுதல எழிுத்தூ" என்று எழுதிப் பார்ப்போம்.

உயிர் நெடில்களுக்குக் கால் சேர்த்தல்

அ இ உ எ ஒ என்பன உயிர்க்குறில்கள். அகர உயிர் மெய் எழுத்துகளை நெடிலாக்கக் கால் வாங்குகிறோம். அதே முறையைப் பின்பற்றி உயிர் எழுத்துகளையும் நெடிலாக்கலாம். இதனால் என்ன நன்மை? ஒரே முறையால் ஐந்து எழுத்துகள் குறைகின்றன. தமிழ் மரபிற்கு இது புறனானதன்று. தொல்காப்பியரும், திருவள்ளுவரும் இவ்வாறு எழுதினார்கள்.

அ ஆ இ ஈ உ ஊ

பண்டைய வழக்கம்

பண்டைத் தமிழ் அ, ஆ, இ, ஈ, உ, ஊ என்ற எழுத்துகளைப் முன்னால் படத்தில் காணலாம்.

அ என்ற எழுத்தின் தலைப்பில் வலப்புறம் நீட்டிய கிடைக் கோடு காண்க.

அதே போன்று உகரத்தின் தலைப்பில் வடபுறம் ஒரு கிடைக் கோடு நீட்டி ஊகாரம் ஆக்கியுள்ளனர். இகரத்தின் நடுப் புள்ளியை நீட்டிக் கோடாக்கினர்.

பக்கக் கோடு

அகரத்தில் இட்ட பக்கக்கோடு அகரத்தோடு சேர்ந்து ஒரே வடிவமாக வளர்ந்துவிட்டது. உகரத்தோடு இட்ட பக்கக்கோடு, பிரிந்து வளர்ந்து, ள என்ற குறியாக வளர்ந்துவிட்டது. பக்கக் கோடு பிரிந்து வளர்ந்து ா (கால்) ஆன வகையை உயிர் மெய் ஆகார வரிசையிலும், ஒகார வரிசையிலும் காணலாம். எனவே உயிர் நெடில்களுக்குக் கால் வாங்குவது பண்டைய முறையோடு ஒக்கும்.

விலக்கு

பண்டைய முறையில் ஏகார, ஓகாரங்கள் மட்டும் இந்த முறைக்கு விலக்காக இருந்துள்ளன. ஏ, ஓ எழுத்துகளை எழுதி அதனுள்ளே புள்ளி வைத்துக் குறிலாக்கியதாகத் தொல்காப்பியர் கூறுகிறார்.

கொடுமுடிக்கு அருகிலுள்ள அறச்சலூர் மலையின் பாறைக் குகையில் உள்ள பண்டைய கல்வெட்டில் எகரத்தின் நடுவில் புள்ளி வைத்துள்ளதைக் கீழே உள்ள எழுத்துப் படத்தில் காண லாம். அதன் வாசகம் வருமாறு:

எழுத்துப் புணருத்தான் மணிய்
வணக்கன் தேவன் சாத்தன்

தற்காலத்தில் அ, இ, உ நெடில்களுக்கு இணையாக, ஏ, ஓ, நெடில்களுக்கும் குறிலோடு கால் வாங்குதல் பொருந்தும்.

ஐ

ஐ என்ற எழுத்தைப்பற்றித் தனியாகக் குறிப்பிடவேண்டும். தந்தை பெரியார் அவர்கள் அய் என எழுதி வந்தார்கள். பண்டைத் தமிழ்க் கல்வெட்டுகளிலும் அவ்வாறு உள்ளன. தொல்காப்பியர்கூட இதனைக் கூட்டெழுத்து என்றுதான் சொல்கின்றார்.

ஆனாலும் காலப்போக்கில் ஐ என்பது தனி எழுத்தாக உருவாகிவிட்டது.

இலக்கண ஆசிரியர்கள் அதனை நெடிலாகக் கருதி, இரண்டு மாத்திரை ஒலிதந்துள்ளார்கள். அய் என்று எழுதினால் ஒன்றரை மாத்திரைதான் ஆகின்றது. ஒலி வேறுபாடு இருந்தாலும் அய் எனப் பிரித்து எழுதுவதில் பிழையில்லை.

எனினும் அதனால் என்ன ஆதாயம்? எத்தனை வரிவடிவம் குறைகின்றது? ஒரே ஒரு வரிவடிவம்தான் குறைகின்றது. அதனால் இலாபம் ஒன்றுமில்லை. எனவே ஒரே ஒரு வடிவக் குறிப்பு கருதி இதனை மேற்கொள்ள வேண்டுமா? ஐ என்ற எழுத்தும் இருந்துவிட்டுப் போகட்டுமே என்று கருதுகிறோம். இதன் இணை எழுத்தான ஔ என்பது ஏற்கனவே உள்ள வடிவங்கள்.

அண்மையில் (15-1-1979) திருவள்ளுவர் தின விழாவில் பேசிய மாண்புமிகு தமிழக முதல்வர் மாண்புமிகு எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள் தமிழறிஞர்களில் ஒரு சாரரது இப் பரிந்துரையை ஏற்று ஐ, ஔ எழுத்துகளை பழையபடியே வைத்துக் கொள்ள சம்மதித்துள்ளது மகிழ்ச்சிதரும் செய்தியாகும்.

மெய்

'மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்' என்பது இலக்கணம். எழுத்துகளின் தலையில் புள்ளியோடு திகழ்வது மெய் வடிவம் ஆகும். தட்டச்சில் இம்முறையால் பாதகம் ஏதுமில்லை. எழுத்துகளைத் தனியாகவும் புள்ளியைத் தனியாகவும் வைக்கலாம். அச்சில் அந்த வசதி இல்லை. எழுத்தையும், புள்ளியையும் ஒன்றன்மீது ஒன்றாக வைக்க இயலாது. அதனால் அச்சில், மெய்ப்புள்ளியை எழுத்திற்கு நேர் மேலே வைக்காமல், அதன் பக்கத்தில் வைக்கலாம். பாகை (Degree)யைக் குறிக்கும் புள்ளிபோல மெய்ப்புள்ளியை வைக்கலாம். இது பெரிய மாற்றம் அல்ல. எழுது முறையில் ஒரு வகை. அவ்வளவே.

இகர, ஈகாரம்

உயிர் மெய் இகர, ஈகார வரிசைகளுக்கு எழுத்தோடு ஒட்டி மேல் விலங்குகள் இழுக்கப்படுகின்றன. ி ீ ஆகியவை சேர்க்கப் படுகின்றன. தட்டச்சில் இவை தனிக்குறிகளாகவே உள்ளன. எழுத்தையும், குறியையும் தனித்தனியாகத் தட்டலாம்! பார்வைக்கு அவை இணைந்த எழுத்தாகத் தோன்றும். அச்சுப் பொறிகளில் இந்த வசதி இல்லை. குறில், நெடில் இரண்டு வகைக் கும் 36 தனி எழுத்துகள் தேவை.

எனவே எழுத்தையும், குறியையும் தனித்தனியே வைத்துக் கொள்ளலாம். ஏற்கனவே தமிழ் நாட்டில் இந்த முறை அறிமுக மாகி உள்ளது. 'சுதேசமித்திரன்' நாளேடு பல ஆண்டுகளாக எழுத்தையும், குறியையும் தனித்தனியாகவே வைத்துக் கொண் டிருந்தது. எனவே இகர, ஈகாரக் குறிகளைத் தனிப் பக்கக் குறி களாகக் கருதுவது புதுமை அல்ல. ஏற்கனவே தமிழ் மக்கள் அறிந்ததுதான். இதனை ஒட்டி டி, டீ என்ற எழுத்துகளையும் பிரித்து ட ி, ட ீ என எழுதவேண்டும்.

சுதேசமித்திரன் இதழ் ஓர் எடுத்துக்காட்டு:

விருந்த உப்புச் சத்தானது மிகுதி யான அளவு மண்ணில் படிந்து விட்டது மேலும் நிலம் கடல் மட் டத்தை விடத் தாழ்ந்ததாகையால் நீர் கசிந்து சத சதப்பாக வேறு இருந்தது. எனவே 100 அடிக்கு ஒன்றாக குறுக்கும் நெடுக்குமான அநேக வடிகால்கள் வெட்டப்பட் டன. இவை நீரைக் கீழே இழுத் துக்கொண்டதால் நிலத்தின் சதுப் புத்தன்மை நீங்கியது. அவ்வப் போது பெய்த மழையினால் உப்புச் சத்துக்கள் அடித்துச் செல்லப்பட் டன. சில மாதங்களில் நிலம் பயி ரிடுவதற்குத் தகுதியானதாயிற்று. என்னும் பொறுக்கி யெடுக்கப் பட்ட சில விளைபொருள்களே முத லில் பயிரிடப்பட்டன.

இவ்வாறு நிலமானது மீட்கப் பட்டதும் மற்ற நிர்மாண வேலை ளாயர். 1945-ம் ஆண்டு ஏப்ரல் 17-ந் தேதி தங்களைத் தாக்கிய நேசத் துருப்புகளின் முன்னேற் றத்தைத் தடுக்க எண்ணி புது நிலத்தைச் சுற்றிக் கட்டப்பட் டிருந்த சுவற்றில் இரு சிறு உடைப்புகளைச் செய்து விட்டனர். நீரின் அரிப்பு வேகத்தால் இச் சிறு உடைப்புகள் சுமார் 200 கஜம் அகன்றிருந்தன. ஆயினும் புது நிலம் முழுவதும் நீரில் மூழ்க 2 நாட்கள் பிடித்தன. உயிர்ச்சேதம் ஏதும் நிகழாமல் தடுக்கப்பட்டது. மூன்று மாதங்கள் கழித்து போர் நிலைமை சாதகமடைந்ததும் மீண் டும் நீர் இறைக்கும் வேலை துவங் கியது. முன்னர் 6½ மாதங்களில் செய்த அதே வேலை இப்போது 4 மாதங்களில் முடிக்கப்பட்டது. பழுதான கட்டிடங்கள் புதுப்பிக்

புதிய வடிவங்கள்

உயிர்	6 அ, இ, உ, எ, ஒ, ஐ
மெய்	18 க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ழ ள ற ன
மெய்ப்புள்ளி	1 °
உயிர்மெய்ப் பக்கக் குறிகள்	8 ா, ி, ே, ு, ூ, ெ, ே, ை
ஆய்தம்	1 ஃ

ஆக மொத்தம் 34 வடிவங்கள்

தெரிந்தவை

இவ்வெழுத்துகளிலும், குறியீடுகளிலும் தமிழ் மக்கள் அறியாதவை எவை? புதிதாகக் கற்றுத் தரவேண்டியவை எவை? ஒன்றுமேயில்லை. அனைத்தும் தமிழ்மக்கள் அறிந்தவை. அதனால் புதிய முறைக்கு மாறுவது மிகவும் எளிது.

படித்தல்

இந்த வடிவத்தில் தட்டச்சு செய்த கட்டுரை ஒன்றை நண்பர் ஒருவரிடம் கொடுத்து வாசிக்கச் சொன்னேன். அவர் தமிழை நன்கு கற்றவர், எழுத்தாளர், கவிஞர். எனினும் அவரால் வேகமாகப் படிக்க இயலவில்லை. முதல் வாசிப்பில் சற்றே தடுமாறத்தான் செய்தார்.

அந்த வேளையில் அங்கு வந்தார் அவரது இளைய மகன்; எட்டாம் வகுப்பில் படிப்பவர். அவருக்கு முதல் வரியை மட்டும் வாசித்துக் காண்பித்தோம். முழுக் கட்டுரையையும், விரைவாகப் படித்துவிட்டார். தடுமாறவே இல்லை.

"தம்மின் மிக்க தன் மகனைக்" கண்டு மகிழ்வெய்தினார் தந்தை.

முதிர்ந்த பழக்கம்

தந்தையின் தயக்கத்திற்குக் காரணம், தம் மகனைவிட ஏராளமாகப் படித்துள்ளார். எழுத்துகள் பழகிவிட்டன. பழக்கம் முற்றிவிட்டது. அதனால் பழைய எழுத்து இருந்த இடத்தில் புதிய எழுத்தை வைத்துப் பார்ப்பது சற்றுக் கடினமாக இருந்தது.

மகனோ இளந்தளிர். விளையும் பருவம். நமது குறிப்பை உணர்ந்து படித்துவிட்டார். உள்ளது உள்ளபடி காணும் தன்மை யால் உடனே படிக்க முடிந்தது.

இளந் தளிர்

புதியவர்களுக்கு எழுத்து மாற்றம் இடராக இருக்காது. பழகிய பெரியோர், இளைய தலைமுறையின்மீது சுமத்தப்படும் பாரத்தைக் குறைக்கச் சற்றே விட்டுக் கொடுத்தல் வேண்டும்.

இளைய தலைமுறை நமது வழித் தோன்றல்கள் அல்லவா? நாம் அவர்களின் சுமையைக் குறைத்துச் சுகத்தைப் பெருக்கு வோம்.

பக்கக் குறிகள்

உகர, ஊகாரத்திற்கான பக்கக் குறிகள்பற்றி ஆராய்வது மிகவும் இன்றியமையாதது. இதில் முதல் வாய்ப்பினைப் பெறு வது ு, ூ குறிகளே ஆகும். இவை முதல் வகுப்பிலேயே மாண வர்களுக்குக் கற்றுத் தருகிறார்கள். இலங்கையில் ஸ, ஜ, ஹ, க்ஷ, ஷ, ஸ்ரீ ஆகியவற்றைத் தவிர்த்து எழுதுவதும் பேசுவதும் எளிய வழக்கமாகிவிட்டது. யங்சன், யூன், யூலை என்று பேச்சுவழக்கில் கூட இலங்கை மக்கள் வழங்குகின்றார்கள். தமிழகத்தில் அத்தகைய தெளிவு இன்னும் பிறக்கவில்லை.

இந்நூலாசிரியர் கிரந்த எழுத்துகளைப் புழங்குவதை வன்மையாகக் கண்டிப்பவர்தான். எழுத்துகளைத் தவிர்த்து விடுவோம். அந்தக் குறிகளை மட்டும் காணுவோம். ு ூ

ு, ூ

இந்தக் குறிகள் வடமொழியில், அதாவது சமத்கிருதத்தில் இல்லை; இந்தியிலும் இல்லை. வடநாட்டிலும் இல்லை. வேறு இந்திய மொழிகளிலும் இல்லை; பிற திராவிட மொழிகளிலும் இல்லை. தமிழ் நாட்டில் மட்டுமே உண்டு. தமிழர்களுக்கு மட்டுமே தெரியும்.

களங்கம்

பல்லவர்கள் காலத்தில் தமிழகத்தில் வடமொழியின் ஊடுருவல் இருந்தது.

மொழியை அனுமதித்த தமிழர்கள் எழுத்தை அனுமதிக்கவில்லை. வடநாட்டில் வளர்ந்த நாகரி எழுத்து தென்னாட்டில் புகுந்து பிரபலமடையவில்லை. சமஸ்கிருதத்திற்கென தமிழர் கிரந்தம் என்ற தனி எழுத்து வகையை உருவாக்கிக்கொண்டனர். அதன் வளர்ந்த வடிவங்களில் இக்குறிகளும் உள்ளன. எனவே இக்குறிகள் தமிழர்களால் தோற்றுவிக்கப்பட்டவை. தமிழர்கள் மட்டுமே பயன்படுத்தியவை. இருந்தபோதிலும் வடமொழிச் சொற்களுக்கும் ஆங்கிலம் போன்ற பிறமொழிச் சொற்களுக்கும் பயன்படுகின்ற களங்கம் மறக்கத்தக்கதல்ல.

கணக்கீடு

மக்கள் மனப்போக்கை ஆராய்வதற்காக ஒரு முயற்சி மேற்கொண்டோம். இந்தக் குறியையும், மேலும் இரண்டு வகைக் குறிகளையும், சிறு விளக்கக் குறிப்புடன் அச்சிட்டுக் கொண்டோம். தமிழகத்தில் பல்வேறு துறைகளில் பணியாற்றும் மக்களிடையே– ஆசிரியர்கள், மாணவர்கள், தமிழாசிரியர்கள், அலுவலர்கள், பொறியாளர்கள் போன்ற பலதரப்பட்ட மக்களிடையே கருத்துக் கணிப்பு எடுத்தோம். சுமார் இரண்டாயிரம் பேர் தமது கருத்துகளைத் தெரிவித்தனர். அதில் சுமார் 80 விழுக்காட்டு மக்கள் இக்குறிகளையே ஆதரித்தனர். ஏற்கனவே அறிந்து புழங்கி வருபவை ஆதலால் இப்பேராதரவு கிடைத்தது.

இவ்விரண்டு குறிகளையும் செங்குத்தாகப் போட்டால் லேலேயுள்ள இரண்டு குறிகளும் கிடைக்கின்றன.

செங்குத்தாக இருப்பதால் அழகாகவும், கம்பீரமாகவும், தனி எழுத்து என்று கருதத்தக்க தகுதியுடனும் உள்ளது.

இதில் முக்கியமான நன்மை உள்ளது. முதற் குறியைவிட மிகக் குறைந்த இடத்தையே அடைக்கின்றது

கேரள அரசாங்கம் மலையாள மொழிக்கு இவற்றையே தேர்ந்தெடுத்துள்ளது.

இந்நூலாசிரியர் இக்குறிகளையே பரிந்துரைக்கின்றார்.

தமிழகப் புலவர் குழுவின் முன்னோடிப் பரிந்துரைக்குழு இக் குறிகளைப் பயன்படுத்துமாறு பரிந்துரை செய்தது. ஆனால் முடிவு எடுக்கப்படவில்லை. மேலே கண்ட ஆய்வின்போது, இக் குறிகள் பற்றித் தெரியாதாகையால், அதில் இது சேர்க்கப்பட வில்லை.

இலங்கைப் பல்கலைக் கழகத்துப் பெரதேனியா வளாகத்தின் தமிழ்த்துறைத் தட்டச்சர் திரு. கோவிந்தப்பிள்ளையின் பரிந் துரை இவை. உ எழுத்தைத் தலைகீழாகப் போட்டுக்கொண்டு நெடிலுக்குச் சுழித்தும் குறிலுக்குச் சுழிக்காமலும் விட்டுவிடுகிறார்.

வேறு சில பரிந்துரைகள்

உகர, ஊகாரப் பக்கக் குறிகளுக்கு கொங்கு வாசகர்கள் சில குறியீடுகளை, ஏராளமான கருத்துகளை அனுப்பி வைத்துள்ளனர்.

அவற்றில் சில குறியீடுகளை மேலேயும் பக்கத்திலேயும் காணலாம்.

இவற்றில் எழுதும், வாகு, இடம், தோற்றப்பொலிவு கருதி நல்லதைத் தேர்ந் தெடுக்கலாம்.

முடிவாக

ˉ, ˜ ஆகிய இரண்டு குறிகள் ஏற்கனவே தமிழ் எழுத்து முறையில் விரும்பியோ, விரும்பாமலோ வந்துவிட்டன. அவற்றை ஏற்றுக் கொண்டால் மாறுதல் காலத்தில் எளிமை இருக்கும்.

முன் குறிப்பு ஏதுமில்லாமலேயே தமிழ் படித்த எல்லோரும் முதலில் தடுமாறினாலும் பின்னர் எப்படியும் படித்து முடித்து விடுவர்.:புதிய வார்ப்புகள் தேவையில்லை. புதியமுறை ஏதுவுமில் லாமல் எல்லோரும் அறிந்த முறையாகிவிடுகின்றது. என்றாலும் இது பற்றிய முடிந்த முடிபு ஒன்று தேவை.

தட்டச்சுப் பொறி

உலக மொழி

தமிழ் ஓர் உலக மொழி! இந்தியா தவிர இலங்கையிலும், சிங்கப்பூரிலும், மலேசியாவிலும் அரசாங்க மொழியாகப் பயன் படுகிறது. இருந்தபோதிலும் அவை அனைத்தும் தமிழ்மொழி பற்றிய சீர்திருத்தங்களில் தமிழ் நாட்டையே எதிர் நோக்கி இருக்கின்றன.

ட்டச்சு

தமிழ்த் தட்டச்சுப் பொறிகளின் வரலாறு நீண்ட கால கட்டங்களில் பரவியுள்ளது. தட்டச்சுப் பொறிக்கு மூன்று வெவ் வேறு சாவிப் பலகைகள் இருந்தன. அதனால் ஓரளவு தடுமாற்றம் நிலவியது. ஒரு பொறியில் பழகியவர் அடுத்த பொறியில் அடிக்க இயலாது. அரசாங்கமும் விலை விகிதம் ஒப்பிடும்போது ஒரே விசைப் பலகையைத் தேடவேண்டியிருந்தது.

நிலைவு செய்தல்

சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னர், தமிழ் நாட்டு அரசாங்கம் இதற்கென மூன்று தட்டச்சர்கள் கொண்ட குழுவிடம், தமிழ்ப் பலகையை நிலைவு செய்யும் பொறுப்பை ஒப்படைத்தது. அதில் இருவர், தமிழ் நாடு அரசாங்கத்தின் சட்டப்பேரவைச் சுருக்கெ ழுத்தாளர். இன்னொருவர் தட்டச்சுப் பள்ளியின் முதல்வர். இவர் ள் அ ி நி ர ழ ா ர் ழ ு நி ப சா.வி அமைப்பை உருவாக்கினர். பல

பேருக்குப் பயிற்சி அளித்து, சோதனைகள் நிகழ்த்தி அதன் மேன்மையைக் கண்டறிந்தனர். அதனையே நிலை (Standardise) செய்து தமிழ் நாட்டு அரசாங்கம் உத்தரவிட்டது. இப்போது உலகமெங்கும் உள்ள எல்லா அரசுகளும் இதனையே ஏற்றுக் கொண்டன.

ஏலாமை: நிலைவு செய்த பலகை சரியானதன்று எனக் கருதி இலங்கைப் பல்கலைக் கழகப் பெரதேனியவளாகத் தமிழ்த் தட்டச்சர் வி. கோவிந்தப்பிள்ளை என்பவர் The Tamil Typewriting System—A Critique of Existing Key Boards and a proposal என்று 1971 ஆம் ஆண்டிலேயே ஒரு நூல் வெளியிட்டுள்ளார்கள். அது இலங்கையில் வெளியாயிற்று.

குறைகள்

பொதுவாகத் தமிழ்த் தட்டச்சுப் பொறிக்குச் சில குறைகளைச் சொல்வார்கள். அதில் முதலாவது நகராச் சாவிகள் Dead Keys என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். சாதாரணமாக எல்லாத் தட்டச்சுப் பொறிகளும் ஒரு அடிக்கு ஒரு டிகிரி நகரும். இந்த நகராச் சாவியைத் தட்டினால் பொறி நகராது. அப்படியே நிற்கும். அடுத்த சாவியை அடித்த பின்னரே நகரும்.

நகராச் சாவிகள்

மெய்யெழுத்துகளை அடிக்க வேண்டுமானால் முதலில் மெய்ப்புள்ளிக்கான நகராச் சாவியை அடிக்க வேண்டும். புள்ளி தாளில் விழுந்துவிடும். அடுத்தாற்போல் எழுத்தை அடித்தால் அது புள்ளியின் கீழே அமரும். ஆகத் தாளில் விழுந்த எழுத்து மெய்யெழுத்தாக இருக்கும்.

மொத்தம் மூன்று நகராச் சாவிகளில் ஆறு வடிவங்கள் உள்ளன. அவை வருமாறு:

1. மெய்ப்புள்ளி
2. மு, டு, ரு ஆகியவற்றை நெடிலாக்க, அதன் முனையில் இடும் சுழி.
3. இகரக் கொம்பு
4. ஈகாரக் கொம்பு
5. பு, யு, ஙு ஆகியவற்றின் அடிக்கோடு
6, பூ, யூ ஆகியவற்றின் அடிச்சுழி

இவை பொதுவாகக் குறையாகப்பட்டாலும், தவிர்க்க இயலாததாகும். மெய்ப்புள்ளிபடும் இடங்களில் தாள் பொத்தலாகி விடுகின்றது. சில பொறிகளில் இவ்வாறு பொத்தலாகாமல் நல்ல முறையில் செய்துள்ளனர்.

வேகம்

தட்டச்சு செய்வதில் வேகம் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் ஆகும். ஆங்கிலத்தில் சொற்கள் கணக்கிடப்படுகின்றன. ஆனல் தமிழில் தட்டுகளைக் கொண்டே கணக்கிடவேண்டியுள்ளது. இது ஒரு பழுதாகத் தோன்றவில்லை. ஏனெனில் ஆங்கிலச் சொற்களில் உயிர்மெய் கிடையாது. மெய்யும் உயிரும் சேர்ந்துதான் எழுதப்படுகின்றன. அதனால் தமிழில் ஒரு எழுத்து என்பது ஆங்கிலத்தில் இரண்டு எழுத்துகளுக்குச் சமம்.

தமிழ்த் தட்டச்சில் பெரும்பாலும் உயிர்மெய்க்கு இரண்டு தட்டுகள் வந்துவிடுகின்றன. இது மொழியின் அமைப்பால் நேர்வது. பிழையெனக் கருதுதல் கூடாது.

உந்துதல்

தமிழ்த் தட்டச்சுப் பொறியில் செப்பம் வேண்டுமென நூலாசிரியருக்குத் தோன்றியதில் ஒரு குறிப்பிடத்தக்க நோக்கம் உண்டு. பொருளாதாரச் சிக்கனமே இதன் அடிப்படை. கொங்கு என்ற திங்கள் ஏட்டினை நடத்தி வந்தபோது, அதன் கடிதப் போக்குவரத்திற்காகவும் கட்டுரைகளைத் தட்டச்சு செய்து அச்சகத்தில் சேர்ப்பதற்காகவும் தட்டச்சுப் பொறி தேவையாயிற்று. கடைகளில் சென்று தட்டச்சு செய்யும் கூலி மிகுதியாக இருந்ததால் சொந்தமாக வாங்கி வைத்துக்கொள்ள நேர்ந்தது. தானே தட்டச்சு செய்த அனுபவம், புதிய கண்டு பிடிப்புகளுக்கான உந்துதலாக இருந்தது.

இருமொழி

தமிழ்நாட்டில் எந்த நிறுவனமும் தமிழ் ஒன்றில் மட்டும், எல்லாக் காரியங்களையும் நிறைவேற்றிவிட இயலாது ஆங்கிலம் கட்டாயத் துணைமொழியாகத் தேவைப்படுகிறது. பத்திரிகைத் தொழிலில் நடுவண் அரசோடு பல கடிதத் தொடர்புகள் உண்டு. அவற்றிற்கு ஆங்கிலப் பொறி தேவையாயிற்று. கொங்கு போன்ற மிகச் சிறிய நிறுவனங்கள் இரண்டு பொறிகள் வாங்க முடியும் என்று எதிர்பார்க்க இயலாது. இதே அனுபவத்தை அரசாங்கமும் உணர்ந்திருக்கிறது.

ஆட்சி மொழி

தமிழ்நாட்டு அரசாங்கத்தின் ஆட்சி மொழி தமிழ்தான் என்று அறிவித்தாயிற்று. ஆனால் போதிய முன்னேற்றம் இந்தப் பதினைந்து ஆண்டுகளில் நிகழவே இல்லை. அதன் முக்கியமான காரணம் போதிய தமிழ்த் தட்டச்சுப் பொறிகள் இல்லாமையே ஆகும். 'ஒவ்வொரு சிறிய அலுவலகத்திற்கும் இரண்டு பொறிகள் வழங்குவதானால், பணத்திற்கு எங்கே போவது?' என அரசாங் கமே விழிக்கின்றது.

ஏட்டுச் சுரைக்காய்

ஒரே பொறியில் தமிழும் ஆங்கிலமும் இருக்க வேண்டு மெனக் கருதுவது இதனாலேயே ஆகும். இருமொழிப் பொறி யால் அதிகப் பயன் அரசாங்கத்திற்கேயாம். தமிழே ஆட்சி மொழி என்பது ஏட்டுச் சுரைக்காயாக இல்லாமல், செயவிலும் காணலாம்.

உற்பத்திக் கூடங்கள்

தட்டச்சுப் பொறியின் உற்பத்திக் கூடங்கள் இதன் முன் னேற்றத்தில் ஆர்வம் காட்டுவது இயற்கை. அதற்குத் தடையாக இருப்பதும் அரசாங்கத்தின் கொள்கைகளே. தமிழ்த் தட்டச்சுப் பொறிகளைப் பொருத்தவரையில், அரசாங்கமே அதிகப் பொறி கள் வாங்குகின்ற, மிகப் பெரிய வாடிக்கையாளர். அதனால் விலை நிர்ணயிக்கப்பட்டுவிடுகிறது. தட்டச்சுப் பொறியில் எந்த முன்னேற்றம் செய்வதாயினும் அதன் விலை கூடும். கூடுதல் விலைக்கு அரசாங்கத்தின் ஒப்புதல் பெறுவது எவ்வளவு இன்னல் தரத்தக்கது என்பதை உணர்ந்தவர்கள் அந்த முயற்சியே மேற் கொள்ளார். அதனால் உற்பத்திக் கூடங்கள் இதில் அக்கறை காட்டுவதில்லை.

முதல் முன்னேற்றம்

தமிழ்த் தட்டச்சுப் பொறிக்கு இந்நூலாசிரியரின் முதல் பரிந்துரை, அதன் பொலிவு பற்றியது. லை, ளை, னை, ணை, எழுத்து களின் துதிக்கை வடிவம் 'ரெமிங்ட்டன்' பொறியில் சற்று குண் டாக ஒரு டிகிரி இடத்தை அடைத்துக்கொண்டு இருக்கும் அதே சாவியில் உள்ள இன்னொரு வடிவம் நு, து எழுத்துகளை நெடி லாக்கும் காலின் பாதி வடிவம்.

'ஆல்டா' பொறியில் இவை பாதி இடத்தையே அடைக்கும். அதனல் தட்டச்சு செய்த தாளில் ஒரு சொல்லின் இடையே

ஸ 1	" 2	% 3	ஜ 4	ு 5	ு 6	ீ 7	/ 8	(9	) 0	ஸ்ரீ /	
ஞு ஞ	று ற	நு ந	சு ச	கூ வ	லு ல	ரு ர	ஜ ை	டீ டி	ே ா	? /	T ?
ரு ய	ளு ள	னு ன	கு க	ழு ப	ழு ா	து த	மு ம	டு ட	: :	ஙு ங	¼ ½
ணு ண	ஓ ஒ	ஊ உ	ஏ எ	ஐ ெ	ஃ ே	ஆ அ	ஈ இ	? ,	- .	∴	

நிலைவு செய்த பலகை

இடைவெளி அமைந்துவிடும். அ ஊ என்று அடித்தால், இவ்விரண்டு எழுத்தின் இடையில் இடைவெளி வரும். இந்த இடைவெளியைக் குறைக்க துதிக்கை வடிவத்திற்கு, அரை டிகிரி நகர்த்தம் கொடுக்கலாம். அப்போதைய தமிழ் வளர்ச்சிக் கழக இயக்குநரிடம் பரிந்துரை விண்ணப்பம் அளிக்கப்பட்டது.

அரை டிகிரி நகர்த்தம் கொடுக்க, பொறியில் கூடுதலாக ஒரு பல்சக்கர அமைப்பு தேவைப்படும். அது பொறியின் விலையை உயர்த்திவிடும். அதனால் அந்தப் பரிந்துரை எடுபடவில்லை.

தமிழ்த் தட்டச்சு- சாவிப்பலகை

தற்போது நகராச்சாவிகளுக்கு இவ்வாறு கூடுதலாக ஒரு பல்சக்கரம் உள்ளது. நகராச் சாவிகளை எடுத்தால், அப் பல்சக்கர விலையைக் குறைக்கலாம்.

தமிழ்த் தட்டச்சுச் சாவி அமைப்பினை முன் பக்கப் படத்தில் காண்க. ஒவ்வொரு சாவியிலும் இரண்டு எழுத்துகள் உள்ளன. உள்ளவாறே சாவியை அழுத்தினால் கீழ் வரிசை எழுத்துகள் விழும். மாறு (Shift) சாவியை அழுத்திக்கொண்டு, எந்தச் சாவியைத் தட்டினாலும் அதில் மேலுள்ள எழுத்து விழும்.

சாவிகள்

இதில் மொத்தம் 46 சாவிகள் உள்ளன. 92 வடிவங்களை உருவாக்கலாம். ஏற்கனவே பாடப்பகுதியில் விளக்கியவாறு தமிழ் எழுத்து வடிவங்களுக்கு மட்டும் 71 எண்ணம் செலவாகின்றது. மீதியுள்ளவை எண்களுக்கும், கிரந்த எழுத்துகளுக்கும், பிற குறியீடுகளுக்கும் ஆகும்.

கிரந்தம்

இதில் அசல் தமிழ் எழுத்துகள் தவிர கிரந்த எழுத்துகளான ஸ, ஜ, ஸ்ரீ ஆகிய மூன்றும் முழுதாக உள்ளன. டி என்ற குறி ஷ என்ற எழுத்தை உருவாக்கப் பயன்படுகிறது. உ அடித்து டி அடித்தால் ஷ கிடைக்கும். ஹ கிடைப்பதற்கு உ எழுத்தையும் ற எழுத்தையும் தட்டவேண்டும். அதை உற என்று படிக்காமல் ஹ என்று படிக்கவேண்டும். கிரந்தத்தின் உயிர்மெய் உகர, ஊகார உயிர்மெய் ஒட்டுக் குறிகளான ு, ூ என்பவையும் உள்ளன. எனவே கிரந்தத்திற்கென ஆறு எண்ணங்கள் செலவாகின்றன. ஆக 71+6=77 இடங்கள் எழுத்துகளுக்கே செலவாகின்றன. இவற்றுள் டி என்ற குறியை & (and) என்ற ஆங்கிலக் குறிக்கு மாற்றாகவும் பயன்படுத்துகிறோம்.

மேல் வரிசை

தமிழ்ச் சாவி அமைப்பைப் பெரும் போக்காக இல்லாமல் நுணுகி ஆராய்ந்தால், சாவிகளின் மேல் வரிசைகளில் உள்ளவை பெரும்பாலும் உயிர்மெய் உகரங்களும், உயிர் நெடில்களும் ஆகும். எனவேதான் அவற்றிற்கான மாற்று ஏற்பாடுகள் ஆலோசனை செய்யப்பட்டது. உகர, ஊ கார வரிசையை எடுப்பதால் 25 இடங்களும், உயிர் நெடில்களை எடுப்பதால் 5 இடங்களும் ஆக 30 இடங்கள் மிஞ்சுகின்றன. அந்த இடங்களில் ஆங்கிலத்தைப் பெய்தால், ஒரே பொறியில் ஆங்கிலமும் தமிழும் கிடைத்து விடும்.

ஆங்கிலப் பொறியின் சாவிகள்

ஆங்கிலப் பொறியின் சாவி அமைப்பை அடுத்த பக்கத்தில் காண்க. ஆங்கிலப் பலகையில் 42 சாவிகள் உள்ளன. தற்காலப் பொறிகளில் மேலும் பல அறிவியல் குறிகளைப் பெய்து ஒரு சில சாவிகள் கூடுதலாக இருக்கும். இருந்தாலும் படத்தில் உள்ள சாவி அமைப்பையே ஆராயலாம். 42 சாவிகளுக்கு 94 வடிவங்கள் இதில் 52 வடிவங்கள் போக, 42 வடிவங்கள் எண்களுக்கும் பிற குறியீடுகளுக்கும் பயன்படுகின்றன.

மேலை மொழிகள் பல

ஆங்கில எழுத்துகளைக் கொண்டு பல மேலை நாட்டு மொழிகளைத் தட்டச்சு செய்யலாம். உருசியா தவிர பிற ஐரோப்பிய மொழிகளெல்லாம் ஆங்கிலத்திற்கான ரோமன் வடிவினையே பயன்படுத்துகின்றன. எனவே ஆங்கிலத்தைத் தமிழ்ப் பலகையில் சேர்த்துக் கொண்டால், அதனை இருமொழித் தட்டச்சு என்பதைவிடப் பலமொழிப் பொறி என்பது பொருந்தும்.

பெரியதும் சிறியதும்

ஆங்கிலத்தைப் பொறுத்தவரை 26எழுத்துகளிலும் பெரியது, சிறியது என இருவகை உண்டு. ஒரு வாக்கியத்தின் முதலெழுத்து பெயற் சொற்களின் முதலெழுத்து, கடவுளைக் குறிக்கும் சொற்களின் முதலெழுத்து ஆகியவற்றைப் பெரிய எழுத்தில் போடுகிறோம். அவ்வாறு பெரிய எழுத்தைப் போடாமல் சிறிய எழுத்தையே போடுவதால், பொருளில் எந்த மாறுபாடும் ஏற்படுவதில்லை. அவ்வாறு வேறுபடுத்திக்காட்ட வேண்டிய இன்றியமையாத இடங்களில் முதலெழுத்தின் அடியில் கோடிட்டுக் காட்டலாம்.

ஆங்கிலப் பலகை

*	"	%	@	£	_	&	'	(	)
1	2	3	4	5	6	7	8	9	0

Q	W	E	R	T	Y	U	I	O	P	¼
q	w	e	r	t	y	u	i	o	p	/

A	S	D	F	G	H	J	K	L	:	½
a	s	d	f	g	h	j	k	l	;	Rs

Z	X	C	V	B	N	M	?	:	¾
z	x	c	v	b	n	m	,	.	-

ஒரே எழுத்து

சிறிய எழுத்தில் மட்டுமே அச்சிட்ட நூல்கள் ஏராளமாக வெளிவந்துள்ளன. கோவைக் கலைக்கதிர் அச்சகம் அதில் முன்னணியில் உள்ளது. பெரிய எழுத்து மட்டுமே பயன்படும் இடங்கள் பலவுண்டு. தொலை அச்சு, கணிதி (Computter) வங்கிகளில் காசோலை எழுதும் பொறி போன்றன அவற்றில் குறிப்பிடத்தக்கன. எனவே முழுதும் பெரிய எழுத்துகளையோ, முழுதும் சிறிய எழுத்துகளையோ பயன்படுத்தலாம்.

தனிப் பொறி

இருமொழிப் பொறி வந்து விடுவதால் தனி ஆங்கிலப் பொறி இல்லாது போய்விடாது. அரசாங்கம், தனது வெளி உறவுகளுக்கு ஆங்கிலம் மட்டும் உள்ள பொறியைப் பயன்படுத்தலாம். ஒன்றுக்குமேல் தட்டச்சுப் பொறிகள் உள்ள அலுவலகங்களில் ஆங்கிலம் மட்டுமே உள்ள பொறி ஒன்று வைத்துக் கொள்ளலாம்.

இணைப்பு


ஆங்கிலம்–தமிழ் கொண்ட கூட்டுப் பலகையில் சில கொள்கைகள் கடைப் பிடிக்கப்பட்டுள்ளன.

1. ஆங்கில எழுத்துகளின் அமைப்புமுறை மாறக்கூடாது. தனி ஆங்கிலப் பொறியின் தட்டச்சர் கூட்டுப் பொறியையும் இயக்குமாறு அமையவேண்டும்.
2. தற்போதைய தமிழ்ப் பொறியின் சாவி அமைப்பு பெரும் பாலும் புதிய பொறியில் அமையவேண்டும். அன்றேல், பணிபுரியும் தட்டச்சர்களுக்குப் புதிய பொறியில் பயிற்சி அளிக்க ஏராளமான பொருட் செலவு பிடிக்கும்.
3. பழைய பொறிகளைப் புதிய பொறிகளாக மாற்றத்தக்கதாகவும், மாறுதலுக்கான செலவு குறைந்த அளவிலும் இருக்க வேண்டும்.

இணைந்த சாவிப் பலகை

இருமொழிகளும் இணைந்த அமைப்புடைய சாவிப் பலகையினைப் பின் பக்கத்தில் காணலாம். இதனை ஒரே நாளில் உருவாகிய தாகயாரும் எண்ணிவிடல் ஆகாது. கடந்தஐந்து ஆண்டுகாலம்

கொங்கு பலகை



ஸ 1
" 2
% 3
ஜ 4
+ 5
= 6
7
8
(9
) 0
ஸ்ரீ /
Q ழ
W ற
E ந
R ச
T வ
Y ல
U ர
I
O ை
P
½
÷
A ய
S ள
D ன
F க
G ப
H
J த
K ம
L ட
;
¾ ஙு
¼ ஞ
Z ண
X ஒ
C உ
V எ
B ெ
N அ
M இ
? ,
:
*

இதனை மாற்றி மாற்றி அமைத்துக் கொண்டே வந்து இந்த அமைப்புக்கு வந்துள்ளது.

முனைவர் சாலை இளந்திரையன், முனைவர் ந. சஞ்சீவி கொண்டல் சு. மகாதேவன், வே. தில்லை நாயகம், முனைவர் வா. செ. குழந்தைசாமி, முனைவர் இரா. நாகசாமி, முனைவர் வேங்கட சுப்பிரமணியம் போன்ற பல பெருங் கல்வியாளர் களைச் சந்தித்து உரையாடி வந்தபோதெல்லாம், சிறுசிறு முன் னேற்றம் கண்டுள்ளது.

இனிப் புதிதாக யாரேனும் ஒன்றைச் சிந்தித்தால், அது போன்றதொரு படிவம் ஏற்கனவே ஆராயப்பட்டு நூலாசிரியரின் கோப்புக் கட்டில் தூங்கும் என்பது திண்ணம்.

எனவே இவ்வமைப்பை மிகச் சிறந்தது, உயர்ந்தது என்றால் அது மிகையாகாது. உயர்ந்தது என்ற பொருளுக்கு கொடுமுடி என்பது நேர்ச்சொல். எனவே இதனைக் கொடுமுடிப் பலகை (Kodumudi's Board) எனப் பெயரிட்டு அழைப்பது சாலப் பொருந்தும்.

கொடுமுடிப் பலகையின் சிறப்புகள்

1. நகராச் சாவிகள் எடுக்கப்பட்டுவிட்டன.

2. மெய்ப்புள்ளியை, எழுத்தின் மேலே இடாமல் வெப்ப அளவு டிகிரியைக் குறிப்பது போல எழுத்தின் வலது பக்க மேல் மூலையில் வைக்கப்படுகிறது.

3. மெய்ப்புள்ளிக்கான சாவிக்கு அரை டிகிரி நகர்த்தம் கொடுக்கலாம். இடைவெளி மிகாமல் அழகாக இருக்கும்.

4. இகர, ஈகார ஒட்டுக்குறிகள் எழுத்தின் வலது பக்கத்தில் அமையும். அவற்றை ஒட்டுக் குறிகள் போல் இடாமல், தனி எழுத்துப் போன்று பருமனாக வடிவமைத்துக் கொள்ளலாம். அரை டிகிரி நகர்த்தம் அமைக்கலாம்.

5. உகர, ஊகார உயிர்மெய் வரிசைக்கு ு, ூ குறிகள் தற்காலிகமாகப் போடபட்டுள்ளன. அரசாங்கமோ, தமிழ்கூறு நல்லுலகமோ மாற்றுக்குறி பரிந்துரைத்தால் அவற்றைப் பெய்து கொள்ளலாம்.

கொடுமுடிப் பலகை

ஸ / 1	” / 2	% / 3	ஜ / 4	+ / 5	— / 6	[illegible] / 7	, / 8	(/ 9	) / 0	ஸ்ரீ / /

Q / ஐ	W / ற	E / ந	R / ச	T / வ	Y / ல	U / ர	I / ை	O / ு	P / ூ	= / 7	÷ / c

A / ய	S / ள	D / ன	F / க	G / ப	H / ா	J / த	K / ம	L / ட	: / .	½ / ஙு	¼ / ஞ

Z / ண	X / ஒ	C / எ	V / ள	B / ெ	N / ே	M / அ	? / இ	’ / .	— / ழ	* / ஃ

குறிப்பு : அரை டிகிரி நகர்த்தம் அனுமதித்தல், c = ஆகிய குறிகளை இடம் மாற்றக்கொள்ளலாம்;
இரண்டாம் வரிசை II-ஆம் சாவியும்,
மூன்றாம் வரிசை 10-ஆம் சாவியும் அரை டிகிரி நகர்த்தம் பெறும்;

6. பக்கக் குறிகள் தவிர மீதி எல்லா எழுத்துகளும் பழைய பலகையில் உள்ளவாறே அமைந்துள்ளது.

7. ஆங்கில எழுத்துகளும் இடம் மாறாமல்உள்ளன. பெரிய எழுத்துகள் பெய்தால், தனி ஆங்கிலப் பொறிக்கும் கொடுமுடிப் பலகைக்கும் எந்த வேறுபாடும் இல்லை.

8. பழைய தமிழ்ப்பொறியில் இல்லாத சில கணக்கியல் குறியீடுகள் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. +, =, ×, ÷, ½, ¼ ஆகியவை சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன.

9. (Under line) அடிக்கோடு இடும் குறி சேர்க்கப்பட்டுள்ளது.

10. புதிய இடங்களில் அமைந்துள்ள எழுத்துகள் புழங்கு முறைக் கணிப்பிற்கேற்ப (Freguency Analysis) அமைக்கப்பட்டுள்ளன.

சில விளக்கங்கள்

உகர, ஊகாரப் பக்கக் குறிகள் இருப்பது போலவே, இகர ஈகாரப் பக்கக் குறிகளும், எழுத்தின் பக்கத்தில் போடுவதாக எடுத்துக் கொள்ளப்பட்டது. சுதேசமித்திரன் நாளிதழ் சில காலம் இவ்வாறு அச்சிட்டு வந்தது. இகர, ஈகார மேற்சுழிகள் ட எழுத்தில் ஒட்டி நிற்கா. எனினும் அவற்றை எழுத்தின் பக்கத்தில் போடும் மரபைப் பின்பற்றுவதால் ட எழுத்தின் பக்கத்திலும் போடுவதற்குப் பரிந்துரைக்கப்படுகிறது.

ர எழுத்தின் வர்க்கமான, ர், ரி போன்ற எழுத்துகளுக்கு மூல எழுத்தாக ா (கால்) பயன்படுகிறது. அதற்குப் பதிலாக ரகர வர்க்கத்தின் எல்லா இடங்களிலும் ர-வையே பயன்படுத்தப் பரிந்துரைக்கின்றோம்.

குறை

ஆங்கிலப் பொறியில் நான்காவது வரிசையில் ஒன்பதாம் சாவியில், மேல், கீழ் ஆகிய இரண்டு இடங்களிலும் முற்றுப்புள்ளி உண்டு. சிக்கனம் கருதி மேலே இருந்த ஒரு முற்றுப்புள்ளியை எடுத்துவிட்டு, அங்கு காற்புள்ளி போட்டுக் கொண்டோம்.

நிறை

மிகக் குறைந்த புழக்கம் பெற்ற இகர, உகர நெடில்கள் ழ, ங, ஞ மட்டுமே வலது சுண்டு விரலில் கூடுதலாக உள்ளன.

வலது சுண்டு விரல்

பழைய நிலைவு செய்த தமிழ்ப் பொறியில் வலது சுண்டு விரலில்தான் மெய்ப்புள்ளி மூன்றாவது வரிசையில் இடம் பெற்றிருந்தது. அதே இடத்தில்தான் இப்போதும் அமைக்கப்பட்டுள்ளது. எனினும் மெய்ப்புள்ளியின் புழக்கம் மிக அதிகமாகையால் சுண்டுவிரல் வலியெடுப்பதாக நூலாசிரியர் உணர்ந்தார். இது பற்றிப் பல தொழில் முறைத் தட்டர்களிடம் கலந்துரையாடிய போது, அவர்கள் அதனைக் குறையாகக் கருதவில்லை. பழக்கம் காரணமாக இருக்கலாம். தட்டச்சு மின்சாரத்தில் இயங்கும் போது, அந்தக் குறை மறைந்துவிடும் என்றனர்.

புழக்க முறைக் கணிப்பு

தட்டச்சின் சாவிப் பலகையில் சாவிகளின் அமைவுக்கான முக்கியக் கரணி எழுத்துப் புழக்கம் ஆகும். ஒரு தமிழ்க் கட்டுரை அல்லது கதை போன்ற பகுதியை எடுத்துக் கொண்டு, அதில் வரும் எழுத்துகளை எண்ணிக் கணக்கெடுத்து, ஒவ்வொரு எழுத்தும் எத்தனை முறை புழங்கி வருகின்றது எனக் கணிப்பதாகும். நூலாசிரியர் பல கணிப்புகளை மேற்கொண்டிருந்த போதிலும் அவைகளைத் தவிர்த்துவிட்டு, ஏற்கனவே இலங்கையில் வெளியான நூலில் உள்ள பகுதிகளை இங்கு தருகிறார்.

கோவிந்தப் பிள்ளை கணித்தபடி

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் பெரதேனியாவளாகத்தின் தமிழ்த் துறைத் தட்டச்சர் கோவிந்தப்பிள்ளை 1971-ஆம் ஆண்டில் வெளியிட்ட "தமிழ்த் தட்டச்சு முறை—தற்போதைய சாவி அமைப்புகளின் திறனாய்வும், ஒரு முன்மொழிவும்" (The Tamil Typewriting system A critique of Existing key Boards and a proposal) என்ற நூலில் உள்ளபடி புழங்குமுறைக் கணிப்பு இங்கே தரலாகின்றது.

அவர் பல்வேறுவகைப் பகுதிகள் பத்தினை எடுத்துக்கொண்டு அவைகளைக் கூட்டிப் போட்டுள்ளார், அந்தக் கூட்டுத் தொகையினையே இங்கு தந்துள்ளோம்.

நிலைவு செய்யப்பட்ட விசைப் பலகைக்கும் கொடுமுடிப் பலகைக்கும் உள்ள எண்ணிக்கை அடுத்தடுத்து தரப்பட்டுள்ளது

இலங்கையில் கிரந்த எழுத்துகளைப் பெரும்பாலும் தவிர்ப்பதால் ஸ, ஸ்ரீ போன்றவை அவர் எடுத்துக் கொண்ட கட்டுரைப் பகுதிகளில் இடம் பெறவில்லை.

எழுத்துப் புழக்கம்

வடிவங்கள்	நிலைவுப் பலகை	கொடுமுடிப் பலகை
அ	713	899
ஆ	176	இல்லை
இ	506	525
ஈ	19	இல்லை
உ	304	326
ஊ	22	இல்லை
எ	418	475
ஏ	57	இல்லை
ஐ	8	8
ஒ	262	274
ஓ	12	இல்லை
க	3547	4276
ங	289	299
ச	889	962
ஞ	51	51
ட	1006	1782
ண	551	575
த	2924	3812
ந	950	970
ப	2427	2927
ம	2480	2801
ய	1821	1856
ர	410	1118
ல	1766	1890
வ	2040	2040
ழ	320	443
ள	1059	1193
ற	1471	2022

வடிவங்கள்	நிலைப் பலகை	கொடுமுடிப் பலகை
ன	1729	2003
ஹ	9	இல்லை
ஞ	141	இல்லை
ரூ	125	இல்லை
டி	321	இல்லை
டீ	1	இல்லை
கு	729	இல்லை
ஊ	55	இல்லை
டு	454	இல்லை
ஞு	15	இல்லை
து	888	இல்லை
நு	20	இல்லை
மு	321	இல்லை
ரு	708	இல்லை
லு	124	இல்லை
ளு	134	இல்லை
மூ	123	இல்லை
று	426	இல்லை
னு	133	இல்லை
கூ	98	இல்லை
சூ	8	இல்லை
மெய்ப்புள்ளி	9455	9455
கால் (ா)	3574	4135
இகரம் (ி)	2939	3360
ஈகாரம் (ீ)	106	107
உகரம் குறில் அடிக்கோடு	535	இல்லை
உகரம் நெடில் அடிச்சுழி	14	இல்லை
மேல் சுழி	45	இல்லை
கொம்பு	22	இல்லை

வடிவங்கள்	நிலைவுப் பலகை	கொடுமுடிப் பலகை
உகரக் குறி (ு)	—	4665
ஊகாரக் குறி (ூ)	—	187
எகர, ஒகரக் கொம்பு	948	948
ஏகார, ஓகாரக் கொம்பு	998	998
துதிக்கை (ீ)	489	இல்லை
சங்கிலி (ை)	1408	1897
ஜ	1	1
முற்றுப்புள்ளி	642	642
காற்புள்ளி (,)	470	470
கேள்வி (?)	37	37

கணக்கிட்ட முறை

கொடுமுடிப் பலகையின் குறிகள் கீழ்க் கண்டவைகளைக் கூட்டிக் கணக்கிடப் பட்டுள்ளன.

1. கால் (ா) = ஆ, ஈ, ஊ, ஏ, ஓ, ண, ன, ரு
2. இகரம் (ி) = (ி), டி
3. ஈகாரம் (ீ) = ீ, டீ
4. உகரம் (ு) = அடிக்கோடு, கு, சு, டு, ணு, து, நு, மு, ரு, லு, ளு, ழு, று, னு மற்றும் உகரக் கீழ்க்கால்.
5. ஊகாரம் (ூ) = அடிச்சுழி, மேற்சுழி, நெடில்கால், கூ, சூ.
6. சங்கிலி (ை) = ?, ை.

மேற்கண்ட புழங்கு முறைக் கணிப்பு எண்களை ஒவ்வொரு விரலுக்கானவற்றையும் கூட்டிச் சேர்த்து, அந்தந்த விரல்களின் பாரத்தை அறியலாம். நிலைவு செய்யப்பட்ட பலகையில் பல குறைகள் இருப்பதாகக் கருதி, கோவிந்தப்பிள்ளை புதிய பலகை முறை ஒன்றை வகுத்துக் காட்டியள்ளார். எனினும், நிலைவு செய்யப்பட்ட பலகையே மிகச் சிறந்ததென்று தோன்றுகிறது.

பெரியார் பலகை

கொடுமுடிப் பலகைக்கு மாற்றாக ஒரு சாவி அமைப்பைக் காட்ட விழைகின்றோம். இதனைப் 'பெரியார் பலகை' என

பெரியார் பலகை

ஸ	"	%	ஜ	+	—	ீ	'	(	)	ஸ்ரீ
1	2	3	4	5	6	7	8	9	0	/

Q	W	E	R	T	Y	U	I	O	P	¢	÷
ழ	ற	ந	ச	வ	ல	ர	ை	ு	ு	ூ	x

A	S	D	F	G	H	J	K	L	:	½	=
ய	ள	ன	க	ப	ா	த	ம	L	.	ங	ஞ

Z	X	C	V	B	N	M	?	,	—	*
ண	ஓ	உ	எ	ெ	ே	அ	இ	.	ஐ	∴

இரண்டாம் வரிசை பதினோராம் சாவியும்
மூன்றாம் வரிசை பத்தாவது சாவியும் நகராச் சாவிகள்.

விளிக்கலாம். இகர, ஈகாரக் குறிகளைத் தனித்து இடுவதற்கும், மெய்ப்புள்ளியை, எழுத்தின் தலைமீதன்றிப் பக்கத்தில் வைப்பதற்கும், தமிழுலகம் ஒப்புதல் தரவில்லையென வைத்துக்கொள்வோம். அப்போது பெரியார் பலகையைப் பயன்படுத்தலாம். பலகை அமைப்பைப் படத்தில் காண்க.

இதில் ?, ூ ஆகிய குறிகளுக்கு நகராச்சாவி கொடுத்து, அமைக்கப்பட்டுள்ளது. அதே போன்று மெய்ப்புள்ளிக்கும் நகராச்சாவி கொடுக்கப்பட்டுள்ளது. மெய்ப்புள்ளி உள்ள சாவியின் மேல் பகுதியில் அமைந்துள்ள முக்கால் புள்ளியை எடுத்துவிடல் வேண்டும். ஆக இரண்டு நகராச்சாவிகள், மூன்று வடிவங்கள் ஆகின்றன. நகராச் சாவிக்கேற்ப இரண்டாம் வரிசையில், மிகச் சிறிய மாற்றம் உள்ளது. இது ஒரு பொருட்டல்ல. இடைக்காலத்தில் பெரியார் பலகையைப் பயன்படுத்திக் கொண்டாலும் இறுதியில் கொடுமுடிப் பலகையை மேற்கொள்வதே சிறப்பாகும்.

கொங்குப் பலகை

கொடுமுடிப் பலகை, பெரியார் பலகை இரண்டிற்கும் முன்னோடி கொங்கு பலகை. இது சனவரி 1974 இல் வெளி வந்ததாகும். இருமொழி கொண்ட முதல் பலகை இதுவேயாகும்.

உழைப்பு

இச்சாவி அமைப்புகளை உருவாக்க, ஐந்து ஆண்டுகள் தொடர்ந்து முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கடுமையான உழைப்பின் விளைவுகளே இவை. இவற்றின் உரிமைகள் அனைத்தும் ஆசிரியரையே சாரும். இவற்றைப் பயன்படுத்த விழைவோர், ஆசிரியரின் முன் அனுமதியைப் பெறுவது உழைப்பிற்கு அளிக்கும் மதிப்பாகும்.

எழுதிடம்

புதிய எழுத்து முறையில் ஒரு சிறு இடரும் உள்ளது. பிற நன்மைகள் கருதி இதனைப் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

உகர, ஊகார, பக்கக் குறிகளால் இவ்வெழுத்துகள் முன்பு ஒரு டிகிரி இடத்தை அடைத்தவை, இப்போது இரண்டு டிகிரி இடத்தை அடைக்கும். எழுதிடத்தில் மொத்தம் 5 சதவீத இடம் கூடுதலாகத் தேவைப்படும்.

இகர, ஈகாரக் குறிகளைத் தனி எழுத்தாகக் கொண்டால், கொடுமுடிப் பலகையின்படி 6 சதவீதம் கூடும். இதில் மூன்றில் ஒரு பங்குதான் அச்சில் கூடும். பெரியார் பலகையின்படி இடம் ஏதும் கூடாது.

சில ஆதரவுகள்

தமிழகப் புலவர் குழுவின் எழுத்துச் சீர்திருத்தம் பற்றிய பரிவுரைகள்.

1. உயிர்மெய் எழுத்துகளின் 'ஆகார' வரிசையில் எல்லா எழுத்துகளும், ஒரு சீராக கால் (ா) பெறும். சிறப்பாக ணா, றா, னா, ஆகிய மூன்று எழுத்துகளும் எழுதப்பெறும்.

2. உயிர்மெய் எழுத்துகளில் 'ஐகார' வரிசையில் எல்லா எழுத்துகளும் 'ை' குறியீடே பெறும். தும்பிக்கை வளைவுகள் நீக்கப்படும். இதன் விளைவாக ணை, னை, லை, ளை ஆகிய நான்கு எழுத்துகளும் இவ்வாறு எழுதப்பெறும்.

3. உயிர்மெய் எழுத்துகளில் உகர, ஊகார வரிசையில் முறையே ʊ, ʊ இடம் பெறும். இதனால் எல்லா எழுத்துகளும் ஒரு சீரான மாற்றம் பெறும்.

(ஒப்பம்) ந. சஞ்சீவி

5-2-75

டாக்டர் வ. சுப. மாணிக்கம்
தமிழ்ப் பேராசிரியர்
ஆட்சிக்குழு உறுப்பினர்
முதன்மையர் இந்தியமொழிப்புலம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலைநகர்
11.4.75 வெ

அன்புடையீர்

நலம். உங்கள் 7.4.75 மடல் வந்தது. தமிழின் அடிப்படையையும் அடக்கமாகவும் மெய்யானவற்றைச் செம்மையாகக் கூறுவதாயும் உங்கள் தொண்டு சிறந்தது; என் உள்ளத்தைத் தொடுவது தமிழ்ப் புலவர்களின் எழுத்துச் சீர்திருத்த [illegible] நாடும் நடுவண். உலக உணர்ச்சியிலேயே இவ்வாறு புதுவழியை [illegible] வெளியிடலாம் கருத்தைக் கூறினேன். ஒரே உண்மைப்படி. பழைய இலக்கணம் இதுவரை கொள்ளப்பட வேண்டுமென விரும்புகிறேன். நம் வழக்கம் பல வைத்து எழுதுவாரது தமிழ்த் தொன்மை வடமொழியாவும் தமிழ் வடமொழியாகிய வாசித்துமெனவும் வடமொழியினின்றும் தமிழ் இயற்கை எனவும் தமிழ் வரிவடிவங்கள் பிராமியிலிருந்து வந்தனவெனவும் சொல்லும் தமிழர் உளர். இந்நிலையில் தனித்தன்மையுடைய தமிழுக்கு உரிமையுடைய தனித் தன்மையான [illegible] வேண்டுமென்று கருதியும் ஒன்றியபடியே [illegible] செயலைக் கருதியும் [illegible] வழிவகையைப் புலவர் ஒத்துக் கொண்டது.

அன்பன்
வ. சுப. மாணிக்கம்

பேராசிரியர் டாக்டர் வ. சுப. மாணிக்கம் அவர்களின் கடிதம்.

டாக்டர் வ. சுப. மாணிக்கம்
தமிழ்ப் பேராசிரியர்
ஆட்சிக்குழு உறுப்பினர்
முதன்மையர், இந்திய மொழிப்புலம்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்
அண்ணாமலை நகர்,

11—4—75வெ

அன்புடையீர்,

நலம். உங்கள் 7—4—75 முடங்கல் வந்தது. தமிழுக்கு அடிப் படையாகவும் அடக்கமாகவும், மெய்யான பற்றோடும் செய்து வரும் உங்கள் தொண்டு சிறந்தது. என் உள்ளத்தைத் தொடுவது. தமிழகப் புலவர் குழுவின் எழுத்துச் சீர்மைக் குழுவில் நானும் ஒருவன்.

உகர, ஊகாரக் குறியீடுகள் இவ்வாறு புதுவதாக இருக்கவேண்டும் என்ற கருத்தைக் கூறினேன். குழு உடன் பட்டது. பழகிய கிரந்தக் குறியீடுகளைக் கொள்ளலாம் என்று சிலர் விரும்பியதுண்டு. நம்மொழி மனப்பான்மைக்கு ஒத்து வராது. தமிழ்ச் சொற்களை வடசொற்களெனவும், தமிழ் வட மொழியிலிருந்து வந்தது எனவும் வடசொல்லின்றி தமிழ் இயங்காது எனவும் * தமிழர் உளர் இந்நிலையில் தனித் தன்மையுடைய தமிழுக்கு உட்குறியீடுகளும் தனித்தன்மையாக இருப்பது நல்லது என்று கருதியும், முன்குறியீடுளோடு ஒப்புமை கருதியும் [illegible]) என்ற வடிவங்களைப் புலவர் குழுமேற் கொண்டது.

அன்பன்,

வ. சுப. மாணிக்கம்

---

* தமிழ் வரிவடிவங்கள் பிராமியிலிருந்து வந்தது எனவும் சொல்லும்

பின்குறிப்பு: பேராசிரியரின் குறிப்பைப் பெரும்பாலான தமிழர்கள் பிரதிபலிக்கின்றனர். இந்த உணர்வைக் கட்டாயம் கருத வேண்டியுள்ளது.

கேரள அரசின் கடிதம், அரசாணை.

GOVERNMENT OF KERALA

No. 29298/H3/74/H.Edn.
Higher Education (H) Depart.
Trivandrum, Dated 25-9-1974.

From

The Special Secretary to Government.

To

Mrs. S. Bragadham,
Publisher of "Kongu"
Indira Nagar.
Madras.

Madam,

Sub : Introduction of modiflication to the script of Malayalam - Copy of the Act demanded.

Ref : Your letter dated 30-8-1974.

Referring to the letter cited I am directed to forward herewith copies of G. O. (P) 37/71/Edn. dated 23-3-1971 and G. O. (P) 51/73/H. Edn. dated 13—3—1973.

Yours faithfully.
P. SOUMINI.
Under Secretary.
For Special Secretary to Govt.

GOVERNMENT OF KERALA

abstract

Malayalam script–Adoption of new script for use-Order Issue

EDUCATION 'P' DEPARTMENT

G.O.(P) 37/71|Edn. Dated, Trivandrum
23rd March 1979

Read: G.O.(P) 329/68/Edn Dated 11.7-1968

ORDER

The question of reducing the unwieldy number of alphabets and signs in Malayalam which consume much time and labour in the process of printing and typewriting, has been under consideration of Government for some time. In 1967 Government appointed a Committee with Shri Soornad P. N. Kunjan Pillai, Editor, Malayalam Lexicon as convenor to advise them on the question of reformation of Malayalam script. The Committee in its report has made recommendations to reduce 75% of the total number of exsisting characters in printing and typewriting. The reformed Malayalam Script recommended by the above Committee was revised with slight modification by another committee appointed in 1969 to expedite the adoption of the new script for use. The recommendations of the above two Commitees in the matter of reformation of the Malayalam script are in brief as follows:

(i) உ ஊ ரு ற என்னிவையுடெ மாத்ரகள் வியஞ்சனங்களில் நின்னும் விடுவிக்கும்

[உ ஊ ரு ற என்பவைகளின் அடையாளக் குறியீடுகளை மூல எழுத்திலிருந்து பிரித்துவிடுக.]

(ii) பிரச்சாரங் குறஞ்ச கூட்டட்சரங்களெ சந்திரக்கலை உபயோகிச்சுப் பிரிச்சு எழுதுக.

[மிகக் குறைந்த அளவே புழங்கும் கூட்டெழுத்துகளை, இடையில் பிறைக் குறி இட்டுத் தனித்தனியாக எழுதுக]

2. In January 1971 a conference of Managing Editors of important newspapers in the State was convened to discuss the question of adoption ef the new Malayalam script for use. The conference has recommended that the reformed script as revised by the Committee might be adopted for use with effect from 15th April 1971 (Vishu day.

3. Government have considered the question in detail and are pleased to accept the reformed Malayalam script as revised by the Committee for use, The new cript will be adopted for all official purposes with effect from 15th April 1971 (Vishu Day) A booklet "LIPI VARICHAKARANAM" containing the details of the new script accepted by Government is appended to this G.O.

4. All newspapers and periodicals in Malayalam are requested to cooperate with Government in the implimentation of the scheme and to adopt the new script from the stipulated date.

5. The Superintendent of Government Presses is requested to take necessary steps for implementing the above order in time. The Government gazette and other Government publications will be printed in the new script from the above date.

6. The Director of Public Relations is requested to give wide publicity to the scheme and to publish an advertisement in all newspapers about the programme for the change over of the script.

7. Government advertisements from 15-4-1971 will be in the new script. As far as possible, advertisement will be given in stereo-Blocks.

(By order for the Governor)

PADMA RAMACHANDRAN,
Education Secretary.

GOVERNMENT OF KERALA

Abstract

Malayalam Script – Adoption of new script in writing–Orders issued.

EDUCATION (H) DEPARTMENT

G.O. (P) No. 51/73/Edn. Dated : Trivandrum 13th March 1973

Read :
1. G. O. (P) No. 37/71/Edn. dated 23-3-1971 and
2. Letter No. A1-19/73/TBO dated 17-2-1973 frok the Director of Public Instruction (Text Bool Branch)

ORDER :

In the G.O. read above. Govt. ordered that the new Malayalam Script will be adopted for use from 15th April, 1972. The Director of Public Instruction was also directed to examine the question of printing of copy books in the new script. The Director of Public Instruction has now requested clarification whether the new script need be adopted in actua writing also.

2. Govt. have considered the question and they are pleased to order that the new script will be adopted in actual writing also from 1973 - 74 The Director of Public Instruction will take necessary action in the matter.

(By Order of the Governor)

S. VARADACHARY,
Joint Secretary to Government.

அரசின் ஆணை

தமிழக அரசு 19—10—78 அன்று 1875 எண்ணில் பிறப்பித்துள்ள ஆணையின் விளக்கத்தைச் செய்தித்துறை பின்வருமாறு தருகின்றது.

தமிழ்நாடு அரசு

பொது (செய்தி-மக்கள் தொடர்பு)த்துறை செய்தி வெளியீடு
எண். 449 நாள் 19—10—78

பெரியார் மேற்கொண்ட தமிழ் எழுத்துச்சீர்திருத்தம் தமிழ்நாடு அரசு அமுலாக்குகிறது

பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் மேற்கொண்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைத் தமிழக அரசு ஏற்று, அதனை நடைமுறைப்படுத்த ஆணை பிறப்பித்துள்ளது.

தமிழ்மொழி எழுத்துத் தொகுதி எளிதில் கையாள முடியாதபடி அதிகமாக உள்ளதால், அச்சிடுதல், தட்டச்சு செய்தல் போன்றவற்றில் அதிக நேரம் விரயம் செய்யப்படுவதைத் தவிர்க்கும் வகையில், தமிழ் எழுத்துத் தொகுதிகளில் சீர்திருத்தம் தேவை என பெரியார் ஈ.வெ. இராமசாமி அவர்கள், தமது வாழ்நாளில் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைக் கையாண்டு வந்ததுடன் அதனை அனைத்துத் துறைகளிலும் நடைமுறைப்படுத்த வேண்டுமென்று மிகவும் வலிபுறுத்தி வந்தார். அதனை நடைமுறைப் படுத்த தக்க ஆணை வெளியிடவேண்டி பெரியார் நூற்றாண்டு விழாக் குழுவினர் அரசைக் கேட்டுக் கொண்டனர்.

பெரியார் நூற்றாண்டு விழாவினை, 18—9—78 அன்று ஈரோட்டில் தொடங்கிவைத்து, பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் மேற்கொண்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தைத் தமிழக அரசு செயற்படுத்துமென தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்திருந்தார்கள். தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநரும் பெரியார் மேற்கொண்ட தமிழ் எழுத்துச் சீர்திருத்தங்களை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவர தக்க நடவடிக்கை எடுக்கவேண்டி பரிந்துரை செய்துள்ளார்.

தமிழக முதல்வர் அறிவிப்பிற்கிணங்கவும், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநரின் பரிந்துரையை ஏற்றும், சீர்திருத்திய எழுத்துக்களை உடனடியாக மேற்கொள்ள வேண்டுமென அரசு ஆணை பிறப்பித்துள்ளது. சீர்திருத்திய தமிழ் எழுத்து வடிவங்கள்

அனைத்து அரசு அலுவலகங்களிலும், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளிலும், உள்ளாட்சித் துறை வரம்பிற்குட்பட்ட நகராட்சி, மாநகராட்சி, ஊராட்சி ஒன்றியங்களிலும், தமிழக அரசின் வரம்பிற்குட்பட்ட வாரியங்கள், கழகங்கள், நிறுவனங்களிலும் பின்பற்ற வேண்டும்,

தமிழ்மொழியில் வெளிவரும் நாளிதழ்களும், பருவ ஏடுகளும் தமிழ்ப்புத்தகம் வெளியிடுவோரும், அச்சிடுவோரும், சீர்திருத்திய தமிழ் எழுத்து வடிவங்களைக் கையாள வேண்டுமென அரசு பரிந்துரை செய்துள்ளது. தமிழக அரசு வெளியீடுகளிலும், அரசிதழ்களிலும், மற்றும் தமிழ் அச்சிடப்படும் எல்லா இனங்களிலும் சீர்திருத்திய எழுத்து வடிவங்கள் கையாளப்படும்.

நடைமுறையில் உள்ள எழுத்துக்கள்	சீர்திருத்திய எழுத்துக்கள்
ஐ	அய்
ஔ	அவ்
ஹ்ணா	ணா
ஹ்றா	றா
ஹ்னா	னா
ணை	ணை
லை	லை
ளை	ளை
னை	னை
ணொ	ணொ
றொ	றொ
ணோ	ணோ
னொ	னொ
றோ	றோ
னோ	னோ

வெளியீடு :

செய்தி—மக்கள் தொடர்புத்துறை இயக்குநர்,

சென்னை—9.

பின்குறிப்பு: 1979-ஆம் ஆண்டு வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற பொங்கல்விழாக் கூட்டத்தில் பேசிய தமிழக முதல்வர் மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்தினார், ஐ ஔ வடிவங்களை மாற்றாமல் பழைய வடிவிலேயே வைத்துக்கொள்ள ஒப்புக் கொண்டுள்ளார்.

தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் பரிந்துரை

நாடு விடுதலை பெற்ற பிறகு சென்னை அரசு நியமித்த எழுத்துச்சீர்திருத்தத் குழுவில் பணிபுரிய அறிஞர் தெ. பொ. மீ. நியமிக்கப்பட்டார். அந்தக் குழுவின் அறிக்கை வெளிவராவிட்டாலும், அவருடைய கட்டுரை மூலம் (முதலில் 1952–இல் Tamil culture என்ற பத்திரிக்கையிலும், அதே கட்டுரை Colleted Papers of T. P. Meenakshisundaram என்ற அண்ணாமலைப் பல்கலைக் கழக வெளியீட்டிலும் அவருடைய கருத்துகள் நமக்குக் கிடைத்தன.

அவர் உயிர் எழுத்துகளில் பன்னிரண்டையும் ஏற்றுக் கொண்டு, அவற்றின் வரிவடித்தில் சீர்திருத்தங்களைத் தெரிவித்துள்ளார்.

1. இன்றைய இகரம், ஈகாரம் ஒலி உறவு உடையதாயினும் வடிவ ஒற்றுமை இல்லாமல் இருப்பதால் ஈகாரத்தை மட்டும் மாற்றலாம். அதுவும் முன்னரே C. R. நமச்சியவாய முதலியார் குழந்தைகளுக்காக எழுதிய நூலில் செய்த சீர்திருத்தத்தை ஏற்றுக் கொள்ளலாம் என்பதே அவரது கருத்து. எனவே, ஈ, என்பதை இகரத்தின் மேல் வளைவில் ஒரு சுழி சேர்த்து எழுத வேண்டும்.

2. ஔகாரம், ஒகரமும், ளகரமும் இணைந்து ஒரே வடிவு உடையதாக இருப்பதால், முன்னதை ளகரத்தின் வலது கால் அடியில் சாய்வுக்கோடு சேர்த்து எழுதலாம் என்பது அவருடைய யோசனை. அதையொட்டி, உயிர்மெய் வரிசையிலும் இறுதி எழுத்தைமேலே உள்ளது. போலவே மாற்றி அமைத்துக் கொள்ள வேண்டும் என்பது அவரது கருத்து.

3. ஆகார ஐகார உயிர்மெய் வரிசையில் பெரியாருடைய கருத்தை ஏற்கவேண்டும் என்பதும் அவரது கருத்து.

4. இகர, ஈகார வரிசையிலும் முறையே ?, (என்ற மாற்று வடிவத்தை மெய்யோடு இணைக்காமல் தனியே சேர்த்து எழுதுவதன் மூலம், தட்டச்சிலும் அச்சிலும் எண்ணிக்கையைக் குறைக்கலாம் என்பது அவருடைய சிபாரிசு.

5. உகர ஊகார உயிர்மெய் வரிசையிலும் முறையே ு, ூ என்ற கிரந்த எழுத்துக்களின் பழக்கப்பட்ட வடிவத்தை எல்லா மெய்யோடும் தனியே சேர்த்து எழுதுவது எளிது என்று திருத்தத்திற்கு வழி கோலியுள்ளார்.

தனி மெய்யில் புள்ளியை இணைப்பதால் அச்சுப் பொறியில் உள்ள சிக்கலும் (அச்செழுத்தின் எண்ணிக்கை மிகுதியும், தட்டெழுத்தில் நிறுத்தச்சாவியும் தேவைப்படுதல்), எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகிய உயிர்மெய்களில் உயிருக்குவடிவம் முன்னும்பின்னும் இணைந்து வருவதால் கல்வி நோக்கில் உள்ள சிக்கலையும் சுட்டிக் காட்டிவிட்டு, அவற்றையெல்லாம் திருத்தப் புகுந்தால் இன்று ஓரளவு கல்வி கற்றவர்களையும் தற்குறிகளாக்கிவிடுமோ என்ற அச்சத்தால் திருத்தத்தைக் கண்டு அஞ்சுவதாகவும், குறிப்பிட்டுள்ளார்.

இவருடைய கருத்துப்படி தமிழ் எழுத்துகளின் எண்ணிக்கை:

உயிர்	12	(ஔ என்பதற்குப் புதியகுறி இடுவதால் ஏனைய 11 + 1 புதிய எழுத்து)
மெய்	18	
அகரத்தோடு கூடிய மெய்	18	
உயிர்க் குறிகள்	8	(ா, ி, ீ, ு, ூ, ெ, ே, ை)
ஆய்தம்	1	
	57	

---

* Any remedy will be only worse than the disease; because there is the great danger of making the handful of our literates in Tamil, illiterate by introducing revolutionary changes. It is this overpowering consideration that stands on the threshold of our enquiry preventing the acceptance of Roman alphapet.

T.P. MEENAKSHI SUNDARAM,

—" The Tamil Script Reforms", P. 159

பக் 34-36, செ. வை. சண்முகம்

எழுத்துச் சீர்திருத்தம்

திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் கருத்து

...எழுத்து வடிவத்தைக் குறைத்து ஒரு சீரான குறியீடுகளை அமைக்கவேண்டுமென்ற முயற்சி பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. உயிர்மெய்யில் கி ஙி முதலிய இகரம் இணைந்த எழுத்துக்களுக்குத் தனியே பதினெட்டு அச்சுக்கள் தேவைப்படுகின்றன; அப்படியே உயிர்மெய் ஈகாரங்களுக்கும் பதினெட்டுத் தனித்தனி அச்சுக்கள் தேவைப்படுகின்றன. அந்த இரண்டு குறியீடுகளையும் உயிர் மெய்யோடு ஒட்டாமல் காலைப் போலவும் இரு சுழிகளைப் போலவும் தனியே அமைத்தால் இரண்டே குறியீடுகள் இருந்தால் போதும். 34 வடிவங்கள் குறைந்துவிடும்.

இரண்டு எழுத்துக்களின் குறியீடுகளாகிய விசிறிகளைத் தனியாக்கி அச்சுவார்க்கச் செய்து சுதேசமித்திரன் வாரப் பதிப்பில் பயன்படுத்தினர், சுதேசமித்திரன் ஆசிரியர் அமரர் ஸி. ஆர். ஸ்ரீநிவாசன். சில ஆண்டுகள் அந்த முறையை அவர் நடைமுறையில் பயன்படுத்தினலும் படிப்பவர்களுக்கு அதில் நாட்டம் எழவில்லை. அது மட்டும் அன்று; மற்றவர்களும் அந்த முறையைப் பின்பற்றவில்லை. அச்சுக்கலையும், தட்டெழுத்துத் துறையும் அறிந்த வல்லவர்களுக்கு அதனல் உண்டாகும் நலம் தெரியும். அவர் பெரியார் அல்லவே! ஆகவே அவர் கொண்டு வந்த திருத்தம் நாளடைவில், ஆதரிப்பார் இல்லாமல் மறைந்துவிட்டது.

உயிர் மெய் உ கரத்தில் ஒரே சீரான குறியீடுகள் இல்லை. அவை மூன்று வேறு வடிவங்களைப் பெறுகின்றன. கு, டு, மு, ரு, ழு ளு என்னும் ஆறும் ஒருவகை; ஙு, சு, பு, யு, வு, என்னும் ஐந்தும் ஒரு வகை; ஞு, ணு, து, நு, லு, று, னு என்னும் ஏழும் ஒருவகை. இவை வெவ்வேருக இருப்பதோடு பிரிக்கமுடியாமல் ஒட்டியுள்ள குறியீடுகளை உடையவையாக இருக்கின்றன. இந்தக் குறியீடுகளிலும் ஒரு சீராகவும் ஒட்டாமல் தனியே அமைவதாகவும் ஒன்று இருந்தால் பதினேழு வடிவங்கள் குறையும்,

இனிமேல் புதிய குறியீட்டை உண்டாக்காமல் உயிர்மெய் ஆகாரத்துக்கும், உயிர்மெய் ஐ காரத்துக்கும் முன்பே இருக்கும் ா, ை என்ற குறியீடுகளைப் போடுவதுபோல இருந்தால் படிப்பவர்களுக்கும் சிரமம் இராது; புதிய எழுத்தச்சை மேற்கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை. உயிர்மெய் ஊ காரமும் இத்தகையதே.

அப்படி ஒரு குறியீட்டை நாம் நடைமுறையில் ஆண்டு வருகிறோம்; ஆனல் தமிழ் எழுத்துக்களில் அல்ல. தமிழில் இணைந்து

போன வடமொழி எழுத்துக்களுக்கு அந்தக் குறியீடுகளைப் பயன் படுத்துகிறோம்.

விஷ்ு, ஹுமாயூன், ஜும்மா மசூதி, பிக்ஷுணி என்று வருவன வற்றில் உ கரத்தைக் குறிக்க ு என்ற அடையாளத்தை எழுதுகி றோம்.

அப்படியே ஜூன், ஜூலை, முஹூர்த்தம் என்பவற்றைப் போன்ற வார்த்தைகளில் ஊகாரத்தைக் குறிக்க ூ என்ற அடை யாளத்தைப் போடுகிறோம். இவை உயிர் மெய்யோடு ஒட்டாமல் தனியே உள்ள குறியீடுகள். கிரந்த லிபியில் இந்தக் குறியீடுகளைப் பயன்படுத்துகிறார்கள்.

தமிழ் உயிர்மெய் உகரத்துக்கும் ஊகரரத்துக்கும் இந்தக் குறி யீடுகளை அமைத்து கு, ஙு, சு ஞு என்று வழக்கத்தில் வந்துவிட் டால் அச்செழுத்துப் பெட்டியிலும், தட்டச்சுப் பலகையிலும் பின்னும் சிக்கனம் ஏற்படும். ஆனால் இவை வடமொழிக் குறியீடு என்ற எண்ணமும், அது காரணமாக இவற்றில் வெறுப்பும் தோன் றினால் அவை சீர்திருத்த முயற்சிக்கு இடம் கொடுக்காது. வழக்கம் இல்லாமல் இருப்பதைப் புதியதாகக் கொண்டு வருவதில் நான் அதிகச் சிரமம் இருக்கும். கல்வெட்டுக்களிலும், இன்றைய அச்சிலும் எழுத்திலும் இந்த இரண்டு குறியீடுகளும் வழக்கத்தில் வந்துவிட்டன. அவற்றை மற்ற எழுத்துக்களுக்கும் இணைத்தால் எழுத்து வடிவச் சிக்கனம் அமையும்.

உணர்ச்சி காரணமாக இந்தக் குறியீட்டை எதிர்ப்பவர்கள் இருப்பார்கள். அதேபோல மற்ற இரண்டு எழுத்து மாற்றங்களை யும் உணர்ச்சி காரணமாக ஏற்றுக் கொள்ளாதவர்களும் இருக்கத் தான் இருப்பார்கள். ஒருவகையினர் உணர்ச்சியைப் போற்றி மற்றொரு வகையான உணர்ச்சியைப் புறக்கணிப்பது நேர்மை ஆகாது...

—'கலைமகள்', ஜனவரி 1979

பனை ஓலை

பெரியார் பலகையில் தட்டச்சிட்ட கட்டுரை எவ்வாறு தோன்றுமென்பதற்காக இக்கட்டுரை இங்கு அச்சிட்டுக் காட்டப்படுகிறது.

மாதவி

எண்ணெண் கலைஞானத்தின் கொடˉமˉடியாய் விளங்கˉபவள் மாதவி. சங்ககாலத்தில் மேல் நிலைக் கˉடிமகள். அவளதˉ வாழ்க்கை வசதிகளில் மˉன்னேறிய அறிவியல் விளைவˉகளைக் காணˉகின்றோம். வளமான வாழ்க்கை வசதிகளை அறிந்தˉ கொள்ளˉகிறோம்.

இரண்டˉ கடிதங்கள்

அவள் கோவலனˉக்கˉ இரண்டˉ கடிதங்கள் எழˉதˉகிறாள். அவை இரண்டˉம் தற்போதˉ எந்த அரˉங்காணகத்திலˉம் இல்லை. உங்களில் யாரிடமˉம் இரˉக்க மˉடியாதˉ.

மˉதல் கடிதம்

அடடா, அதன் நேர்த்தியை என்னென்பதˉ; தற்காலத்தில் வாழ்த்தˉப்பாக்கள் அணி செய்யப்படˉவதˉ போன்றˉ, சண்பகம், மாதவி, தமாலம், கரˉமˉகை, வெண்பூ, மல்லிகை, கழˉநீர், பித்திகை மலர்கள் கொண்டˉ இயைந்த கதம்பச் சரத்தால்

சூழப்பட்டுள்ளது. நடுவில் முற்றிய பூந்தாழை மடல் தன் வெண்மை நிறம் காட்டிப் பளிச்சிடுகிறது. அதில் கொழுஞ்சேறு கொண்டு எழுதப்பட்டுள்ளது. இறகுப் பேனாவால் மை தோய்த்து எழுதுவதுபோல எழுதப் பட்டுள்ளது. இறகுப் பேனாவிற்குப் பதிலாக “பித்திகைக் கொழுமுகை” ஆணியால் எழுதப்பட்டுள்ளது. என்ன எழுதியிருந்ததென்பதைப் பின்னர் காணலாம். எப்போது எழுதினாள் என்பது குறிப்பிடத் தக்கது.

இந்திர விழாவின் போது கடற்கரை மணலில் கானல் வரி பாடுகின்றனர். சொற்குற்றம் நேர்வதால் பிரிவு நேர்கின்றது. தன்னைவிட்டுப்பிரிந்த கோவலனை அழைத்துவர எழுதுகிறாள் முடங்கல். இனிய தோழி வசந்தமாலை எடுத்துச் செல் கின்றான.

இரண்டாம் கடிதம்

கோசிகமாணி மூலமாக, மதுரைப் புறஞ்சேரியில் கோவல னிடம் சேர்க்கப்படுகின்றது, இரண்டாவது கடிதம். குலப் பிறப்பாட்டியோடு கூடி பெயர நேர்ந்ததில் தன் பிழை பொருத்தருளக் கேட்கும் இறைஞ்சல் கடிதம். ‘மண்ணுடை முடங்கல் என இரண்டு இடங்களில் இளங்கோ அடிகள் குறிப் பிடுகிறார். ‘அலங்கரிக்கப்பட்ட ஓலை’ எனப் பொருள் கொள்ளலாம். ஓலையைக் கையில் பெற்றதும், கோவலன்தான் அவளுடன் வாழ்ந்த காலத்தில் நுகர்ந்த நெய்மணம்–கூந்தலில் பூசிய நெய் மணம் உணருகிறான். ஓலையைக் கீழே வைக்க மனம் வரவில்லை. ஏட்டகம் விரித்துப் படித்துப் பார்க் கின்றான்.

சில சொற்கள்

இரண்டு கடிதங்களும் முடங்கல் எனப்படுகின்றன. முதலதை எவ்வாறு, எதில் வரையப்பட்டதென்ற விவரம் கிடைத்துள்ளது. பின்னதை ‘ஓலை’ என்று அழைக் கின்றார். ஏட்டகம் விரித்துப் படித்தனன் என்றும் குறிப் பிடுகின்றார்.

முடங்கல் என்ற சொல்லிற்கு “தாழை” என்றும் ஒரு பொருள் உண்டு, புத்தம் புதிய தாழை மடல் பளீரென வெண்மை ஒளி வீசும். சில நாட்கள் வாடாமல் இருக்கும், வாடிய பின்னர் பழுப்பு நிறம் அடைந்து விடும்.

ஓலை என்ற சொல் தென்னோலை, பனைஓலை ஆகிய வற்றைச் சுட்டும். பனை ஓலையே எழுதுவதற்குப் பயன் படுவது. வாடுவதற்கு முன் பச்சை வண்ணத்திலும் வாடிய பின்னர் வெண்மை நிறத்திலும் இருக்கும். பனை ஓலையில் வண்ண மைகளில் ஓவியம் தீட்டலாம்; எழுதலாம். ஆணி கொண்டு கீறியரிம் எழுதலாம். பனை ஓலையில் எழுதப்பட்ட வண்ண ஓவியங்களைத் தில்லி அருங்காண கத்தில் காணலாம். அண்மைக் காலத்தில் கதர் கைத்தொழில் வாரியம் திருக்குறளை பனை ஓலையில் அச்சடித்து வழங்கு வதை அறிவீர்கள்.

ஏடு என்பது மலரிதழைக் குறிக்கும். வாழையில் மரத் திலேயே வாடி விடுகின்ற இலையையும் ஏடு (பனி ஏடு) என்பர். உணவு கொள்ளுவதற்காகத் திரட்டிச் சேமித்து வைக்கப்படும்.

ஏடு, ஓலை, முடங்கல் ஆகியவை ஒவ்வொன்றும் தனித்தனிப் பொருள் கொண்டதாயினும், எழுதுவதற்குப் பயன் பட்டபின் எழுதப்பயன்படும் எல்லாவற்றையும் குறிக் கலாயின. அண்மையில் காகிதத்தையும் ஏடு என வழங்கு கிறோம்.

எழுதும் முறை

பண்டைக்காலத்தில் எழுதும் முறை எவ்வாறு இருந்த தென்பதைக் காணவே மாதவியை நாடிச் சென்றோம். வண்ண மை கொண்டு தோய்த்து எழுதப்பட்டனவா? எழுத்தாணி கொண்டு கீறி எழுதப்பட்டனவா?

கீறி எழுதப்பட்ட ஓலைகளும், தோய்த்து எழுதப்பட்ட ஓலைகளும் தற்போது கிடைத்துள்ளவையாயினும் அவை சங்ககால அளவுக்குப் பழமையானவை அல்ல இதில் ஒரு முடிவு எடுக்க, அக்கால எழுத்து வகையை ஆராயலாம்.

இலக்கணம்

சங்க காலத்தில் ஆட்சியில் இருந்த இலக்கண நூல் தொல் காப்பியம் ஆகும். எழுத்துக்களின் வடிவத்திற்குச் சில குறிப்புகளை மட்டும் எழுத்ததிகாரத்தில் 14 முதல் 17 வரை ஆன நூற்பாக்களில் காட்டப்பட்டுள்ளன.

14. மெய்யின் இயற்கை புள்ளியோடு நிலையல்
15. எகர ஒகரத்து இயற்கையும் அற்றே

16. புள்ளி இல்லா எல்லா மெய்யும்

உருவு உருவு ஆகி அகரமொடு உயிர்த்தலும்

எனை உயிரோடு உருவு திரிந்து உயிர்த்தலும் ஆயீர் இயல—உயிர்த்தல் ஆறே.

கீறல் எழுத்து

ஓலைச் சுவடிகள் படிப்போர் நன்கு அறிவர்—கீறல் எழுத்துள்ள ஓலைகளில் மெய்க்குப் புள்ளி வைப்பதில்லை. புள்ளி வைத்தால் ஓலை கிழிந்துவிடும். மெய் யெழுத்துக்களுக்குப் புள்ளியிடும் முறை தற்போதும் உண்டு. சங்க காலத்திலும் இருந்தது, ஓலையில் எழுதுகிற பழக்கத்தை ஒட்டி இடைக்கால கல்வெட்டுகளிலும் புள்ளி இல்லாமல் எழுதுகிற பழக்கம் வந்துவிட்டது. புள்ளி இல்லாதிருந்தாலும் பழக்கத்தின் காரணமாக சொற்றொடர்களைப் படித்துப் புரிந்து கொண்டனர். எனினும் இதனை ஒரு மாற்று முறையாகத்தான் கொண்டிருப்பார்களே அன்றிச் செம்மாந்த முறையாக இருந்திருக்க முடியாது என்பது வெள்ளிடைமலை.

எ, ஒ என்ற எழுத்துக்களுக்கு நடுவில் புள்ளி வைத்து எழுதும் முறை அக்காலத்தில் இருந்தது. பழந்தமிழ் கல்வெட்டுக்களில் இதைக் காண்கின்றோம். இக்காலத்தில் இம்முறை இல்லை.

பதினேழாம் நூற்பாவின்படி மெய்யெழுத்தின் புள்ளியை எடுத்துவிட்டால் அது அகரம் எறிய உயிராக இருக்கும். இது தற்போதும் பொருந்தும். அக்காலத்திலும் பொருந்தும். ஆனால் அடுத்து வருகிற செய்தி இக்காலத்திற்குப் பொருந்தாது அக்காலத்திற்கு மட்டுமே பொருந்தும். பிற உயிர்கள் எறி வருகிற உயிர்மெய் தன் உருவு திரிந்து காட்சி தரும் பழந்தமிழ் எழுத்து எனின் படத்தைக் கண்டு அறியலாம். ஒவ்வொரு உயிர் வரிசைக்கும் ஒரு சிறு அடையாளம் முதல் எழுத்தோடு ஒட்டிக் கொண்டு இருக்கும், இதனால் ஏற்படுவதே உருமாற்றம் ஆகும் இதே அடையாளங்கள் காலப்போக்கில் வளர்ந்து, தனியாகப் பிரிந்து தற்போதைய உருவை அடைந்து விட்டன.

தமிழ் எழுத்து முப்பதில் நேர் கோட்டால் ஆன எழுத்துகளே மிகுதி...வளைவுகளைக் கொண்ட எழுத்துக்கள் மிகவும் குறைவு, காலப்போக்கில் நேர்கோட்டால் ஆன

எழுத்துக்களும் வளையத் தொடங்கி மிகுதியான வளைவு களைப் பெற்று விட்டன,

பனை ஓலையில்கீறி எழுதுவதற்கு வளைந்த எழுத்துக் களே உகந்தவை. நேர்கோட்டால் ஆன எழுத்துக்கள், வசதி யானவை அல்ல. பனை ஓலையின் நரம்புகள் கிடைமட்ட மானவை. அவற்றைக் கீறிக் குழி செய்வதன் மூலம் எழுத்து வடிவங்கள் பனை ஓலையில் இறங்குகின்றன.

தாழை மடலில் வண்ணக் குழம்பு தோய்த்து எழுத வேண்டியதன் இன்றியமையாமை தற்போது நன்கு புலனா கும். அக்காலத்தில் எழுத்துக்களின் மயக்கம் இன்றி தெளிவு காட்ட விழைந்தோர் மை தோய்த்து எழுதும் பழக்கத்தையே மேற்கொண்டனர். மாதவியின் கடிதம் இதற்குச் சான்று. கல்லில் எழுதுவது மைதோய்த்து எழுதுவது போன்றதே ஆகும்; அதனால் எவ்வாறு வேண்டுமாயினும் எழுதலாம்.

தமிழ் நெடுங்கணக்கு வரலாற்றில் கிறித்துவ ஆண்டு முறையின் தொடக்க காலம் குறிப்பிடத்தக்கதாகும். அதற்கு முந்திய காலங்களில் மையில் தோய்த்து எழுதும் பழக்கம் விஞ்சியும், பிந்திய காலங்களில் கீறி எழுதுகிற வழக்கம் மிகுதி யாகவும் இருந்துள்ளது. நேர்க்கோடாக இருந்த எழுத்துக் கள் வளைவு பெறுவதற்கான காரணங்களில் ஓலையில் கீறி எழுதுகின்ற முறைக்கு அதிகமான பொருப்பு உண்டு.

பண்டைத் தமிழ் எழுதுமுறை

பண்டைத் தமிழ் எழுத்துக்கள் நேர்கோடுகள் மிக்கவை. தாழை மடல் ஏடுகளும், அவையொத்தவையும் எழுது பொருளாகப் பயன்பட்டன. அவற்றில் மையால்—வண்ணக் குழம்பால் தோய்த்த ஆணியால் எழுதினர். மை நன்கு பிடிப்பதற்காக முதலில் கீறல் போட்டு அதன்மீது மையால் எழுதினர். காலப்போக்கில் வெறும் கீறலோடு நிறுத்திக் கொண்டனர். காய்ந்த பனை ஓலை போன்ற எழுது பொருட்கள் புழக்கம் பெற்று ஆட்சிக்கு வந்தன. கீறல் எழுத்தும் பனையோலையும் அதிகமாக அதிமாகத்தமிழ் எழுத் துக்கள் வளையத் தொடங்கி விட்டன. காலங்காலமாக சிறுகச் சிறுக வளர்ந்து தற்போதைய நிலையை அடைந் துள்ளன.

(இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்கில் அரங்கேறிய கட்டுரை)

அச்சுத் தொழில்

முதல் அச்சுநூல்

இந்தியாவிலேயே முதன் முதலில் அச்சு வாகனம் ஏறிய மொழி தமிழ்தான். அச்சிடப்பட்ட இடம் கோவா, தமிழின் மீது அவ்வளவு பற்றா, என்ன? இல்லை. இந்திய மொழிகளிலெல்லாம் எளிமையான வரிவடிவம் கொண்டது தமிழே என்ற உண்மை தான்.

வடிவம்

காலங்காலமாக வளர்ந்து வந்த எழுத்துகளை ஓலையிலிருந்து படித்துப் பார்த்து அதன் வடிவங்களை அச்சிற் கேற்ப அமைத்தார்கள். குழப்பங்கள் இருந்த இடத்தில் சில மாற்றங்கள் செய்து தெளிவு படுத்தினர். ஓலையில் எகர உயிர்மெய் வரிசைக்கான ஒற்றைச் சுழிக் கொம்பே நெடிலுக்கும் பயன்பட்டது. இடமறிந்து பொருள் கொள்ள வேண்டும். பெஸ்கி பாதிரியார் இதில் முன்னணியில் நின்றார்.

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் நாயக்கர் ஓவியத்திற்குக் கீழ் உள்ள சொற்களில் இவ்வேறுபாடு காணப்படுகிறது. பெஸ்கியார் அதனைக் கண்டு அச்சில் மேற்கொண்டிருப்பார் என டாக்டர் நாகசாமி கருதுகிறார்.

அச்சுக்கலை நன்கு வளர்ந்த பின்னர் கூட ர-எழுதுவதற்கு ா-குறியையே பயன்படுத்தினர். 'வாராயோ' என்பது அச்சிட்ட பழைய நூல்களிலும் 'வாாயோ' என்றுதான் இருக்கும்.

கூட்டெழுத்துகள்

எழுதுகிறபோது கூட்டெழுத்துகளும் சுருக்கெழுத்துகளும் ஏராளமாகப் பயன்படுத்தினர். மாதம் என்பதை மீ என்றும் தேதி என்பதை உ என்றும் ஆண்டு என்பதை ஹு என்றும் எழுதினர். க்கு, போன்ற கூட்டெழுத்துகள் நிரம்ப இருந்தன. நல்ல வேலையாக யாருடைய தீவிர முயற்சியும் இல்லாமல், போராட்டம் ஏதுமில்லாமல் அவை புதிய தலைமுறையினருக்குத் தள்ளப்படாமல் மறைந்து ஒழிந்து விட்டன.

மணிப் பிரவாளம்

அச்சுக்கலை தோன்றிய காலத்திலும், பின்னர் தொடர்ந்தும் மணிப்பிரவாள நடை தமிழகத்தில் உச்சநிலையில் இருந்தது. அப்போது தமிழ் எழுத்துகளினூடே கிரந்த எழுத்துகளைக் கலந்து எழுதும் பழக்கம் இருந்தது. தமிழகத்தில் தோன்றிய புதிய உணர்வுகளால் மணிப்பிரவாள நடை ஒழிந்தது. கிரந்தக் கலப்பும் ஒழிந்தது. ஸ, ஜ, ஷ, ஹ, ஸ்ரீ ஆகியவை மட்டும் இன்னும் கொஞ்சம் உயிர் பிடித்து நிற்கின்றன. புதிய தலை முறையினரின் எழுத்து நடையில் அவையும் மறைந்து வருகின்றன.

ஆங்கில மாதங்களை எழுதும் போது ஜனவரி, ஜூன், ஜூலை யால் ஜகரமும், ஆகஸ்டால் ஸகரம் உயிர்வாழ வேண்டியதாகி விட்டது. இலங்கைத் தமிழர்களின் தெளிவு இந்தியத் தமிழர் களுக்கு இல்லை. சனவரி, யூன், யூலை, ஓகத்து என்றுதான் இலங்கையில் எழுதுகிறார்கள்; பேசுகிறார்கள். ஆங்கிலம் மெத்தப் படித்தவர்கள் கூட ''யங்சன் (ஜங்ஷன்) வரை சென்று வருகிறேன்' எனக் கூறுவதைக் கேட்கலாம். ஜ வுக்கு ய போட்டுப் பேசுவார்கள். யப்பானியர் என்றுதான் பேசுவர்.

ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தில் ஹாலந்து மக்களின் ஆட்சி இருந்தது. ஹாலந்து மக்களை ஒல்லாந்தர் என்றுதான் கூறுவர், பேசுவர், எழுதுவர்.

மொழித் தெளிவு இலங்கையில் அதிகம். அதனால் ஏற்பட்ட நன்மை, தமிழை எழுதும்போது இடையிடையே கிரந்த எழுத் துகள் வருவது ஒழிந்தது.

கோர்ப்பு அச்சு (Letter press)

அச்சுக்கலையில், ஒவ்வொரு எழுத்தும், ஒரு ஈயக்கட்டையின் முனையில் இருக்கும். அவற்றை ஒன்றுடன் ஒன்று அடுக்கி

அச்சுக்கோர்ப்பர். ஒன்றுடன் ஒன்று பக்கவாட்டில் தான் வளரும் அதில் ஒன்றின் மேலோ, கீழோ எதையும் அடுக்க முடியாது. அதனால் க ஒரு தனி எழுத்தாகவும், க் ஒரு தனி எழுத்தாகவும் உள்ளது. க மீது தனியாக மெய்ப்புள்ளியை ஒட்ட இயலாது. அச்சில் தமிழ் வரிவடிவம் கூடுவதன் காரணம் இதுதான். தட்டச்சில் ஒன்றின் மீது ஒன்றை தனித்தனியாகத் தட்டமுடியும். அதனாற்றான் அச்சில் 131 வடிவங்களின் தேவையை தட்டச்சில் 71 இல் அடக்க முடிந்தது.

எழுத்துகளை ஒன்றோடு ஒன்று அடுக்குவதால் இதனை Letter Press என்பர். இதன் வளர்ந்த நிலைகளே, மானோ டைப், லைனோ டைப் என்பன.

அஞ்சறைப் பெட்டி

தமிழ் அச்சுக் கோர்ப்பார் முன்னால் இந்த 131 வடிவங்களுடன், எண்கள், பிறகுறிகள் எல்லாவற்றையும் வைத்துக் கொள்ளப் பெரிய அஞ்சறைப் பெட்டி இருக்கும். வலது கை நீளத்திற்கு மேலேயே இதன் நீளம் அமைந்து விடுவதுண்டு. எழுத்தெண்ணிக்கை குறைந்தால், அஞ்சறைப்பெட்டியின் பரப்பு குறையும்.

தேய்மானம்

எழுத்துகள் ஈயத்தால் ஆனவை. அதனால் அச்சடிக்க, அச்சடிக்க எழுத்து முனைகள் மழுங்கி, அதன் பொலிவு குறைந்து விடும். ஏராளமான பிரதிகள் தேவையான புத்தகங்கள் அச்சிடும் போது பிற்பகுதிப் புத்தகங்கள் பொலிவின்றி இருக்கும்.

Wanting types (பற்றாக்குறை எழுத்துக்கள்)

அச்சுக் கோர்க்கும் போது, கட்டுரையில் எழுத்துப் புழக்கத்தைப் பொருத்து, சில குறிப்பிட்ட எழுத்துகள் தீர்ந்துவிடும் அவற்றிற்குப் புதிய எழுத்துகள் வாங்கிவர வேண்டும். அல்லது அச்சுக் கோர்த்த பகுதியை அச்சடித்துவிட்டு, அதிலிருந்து தேவையான எழுத்துக்களை உருவிப் போட வேண்டியிருக்கும்.

மோனோடைப், லைனோடைப்

மோனோடைப் எந்திரம் இக்குறையை ஈடு செய்கின்றது. அச்சுக் கோர்க்கும் பொறியிலேயே, அச்சு வார்க்கும் பகுதியும் உள்ளது. ஒரு பக்கம் ஈயம் காய்ந்து கொதித்துக் கொண்டிருக்கும். எந்த எழுத்து தேவையோ அது அங்கேயே வார்க்கப்பட்டுக்

குளிர்ந்து வரியில் வந்து சேர்ந்து கொள்ளும். அதனால் Wanting டைப் பிரச்சினை இல்லை. புதிய எழுத்து வார்க்கப்படுவதால் தெளிவாக இருக்கும்.

மோனோடைப் ஒவ்வொரு எழுத்தாக வார்த்துச் சேர்க்கின்றது. பிழை வந்தால் அந்த எழுத்தை மட்டும் எடுத்துவிட்டு வேறு எழுத்தைப் பெய்துகொள்ளலாம்.

லைனோ டைப்பில், ஒருவரி முழுதும் ஒரே கட்டையாக வார்த்து வரும். பிழை நேர்ந்தால் அந்த வரி முழுவதும் மாற்ற· வேண்டும்.

இவ்வகைப் பொறிகளில் எழுத்துகளின் எண்ணிக்கை குறைவதால் அமைக்க வேண்டிய வார்ப்புகளின் எண்ணிக்கைகுறை யும் அதற்கேற்பப் பொறியின் விலையும் குறையும்.

அச்சுக் கோர்ப்பு அட்டை

இவ்வகைப் பொறிகளுக்கு அச்சுக் கோர்ப்பது தனி விதம்· தட்டச்சுப் பொறி போல சாவிகள் இருக்கும். அதில் மாறுசாவி (shigt key) இருக்காது. தட்டத் தட்ட ஒரு நாடா போன்ற நீள அட்டையில் பொத்தல்களாகப் பதிவாகும். இந்த அட்டை நாடாவைப் பிரித்து எடுத்து எந்திரத்தில் அதற்கென உள்ள இடத்தில் பொருத்தி விட்டால், அச்சு வடிவம் தேவைக் கேற்ப வார்க்கப்பட்டு வந்து சேரும்.

இங்கும் எழுத்து எண்ணிக்கை குறைந்தால், சாவி அமைப்பு குறைந்து எளிமையும், விலை மலிவும் உண்டாகும்.

வடிவங்கள்

இங்கு மீண்டும் வடிவக் குறைப்பைப் பற்றி நினைவூட்ட வேண்டியது அவசியம்,

1. பெரியார் புழங்கியபடி:

   லை, ளை, னை, ணை, னா, ணா, றா உடைக்கப்பட்டு ை, ா, குறிகள் முன்னாலும் பின்னாலும் சேர்த்து எழுதுதல்.

2. உகர, ஊகார வரிசைகளுக்குப் பக்கக்குறி இட்டு எழுதல்·

3. உயிர் நெடில்களுக்குக் கால்வாங்குதல்

அா, இா, உா, எா, ஓா என்றவாறு இம் மூன்று முறைகளால் தட்டச்சில் எண்ணிக்கை குறைந்தன. ஏற்கனவே கூறியதுபோல க மேல் புள்ளிவைக்க இயலாததால் மெய் வரிசைக்கு 18 எழுத்துகள் தேவையாகின்றன. இகர, ஈகாரக் குறிகளும் எழுத்தோடு ஒட்டி இருப்பதால் 18 + 18 = 36 வடிவங்கள் தேவைப்படுகின்றன.

நிலையான ஏற்பாடு

1. மெய்ப்புள்ளியை, எழுத்தின் தலைமேல் வைக்காமல், வலது பக்கம் சற்றே நகர்த்தி வைத்தல்.
   இப்புள்ளி வெப்ப அளவுகளைச் குறிக்கும் 'டிகிரி'போல அமைந்திருக்கும்.

2. இகர, ஈகாரச் சுழிகளை எழுத்தோடு ஒட்டிப் போடாமல், பக்கத்தில் சேர்த்துக் கொள்ளுதல்.

இந்த முறை ஏற்கனவே தமிழகத்திற்கு அறிமுகமான முறை. சுதேசமித்திரன் இம்முறையைப் பலகாலம் பின்பற்றியது. இதற்கு எந்தவித எதிர்ப்பும் இல்லை.

மேலே கூறிய இரண்டு மாற்றங்களும் எழுத்தின் அழகு வடிவங்கள்போல அமைந்துவிடும், புதிய வடிவங்கள் போலத் தோன்றா. அதனாற்றான் இந்த மாற்றங்களுக்கு யாருடைய அனுமதியும் தேவையில்லை; அச்சுத் தொழில்வல்லார் முனைந்து நின்றால் போதும். சுதேசமித்திரனில் இகர, ஈகாரக் குறிகள் ஒட்டுக் குறிகளாக அமைத்தமைக்கு, எந்த அரசாங்கத்தையும் நாடவில்லை. எனவே மேற்கண்ட ஐந்து குறிப்புகளால் தமிழ் நெடுங் கணக்கின் வரிவடிவம் 131ஆக இருப்பவை 34 ஆகக் குறைந்து விடுகின்றது.

தற்காலிக ஏற்பாடு

எண்ணற்ற மாறுதலால் குழப்பம் ஏற்படும் என்று கருதினால், அதற்கும் ஒரு இடைக்கால வழியுண்டு. எழுத்துகளின் வார்ப்பிலேயே இதைச் செய்துவிடலாம்.

நாகரி எழுத்துகளின் வலது பக்க மூலையில் ஒரு பள்ளம், முக்கோண வடிவில் இருக்கும். அடுத்து வரும் எழுத்தில், இம் முக்கோணப் பகுதிமட்டும், எழுத்திலிருந்து நீட்டிக் கொண்டிருக்கும்.

இகர, ஈகாரக் குறிகளையும், மெய்ப்புள்ளியையும் இந்த நீட்டல் இன எழுத்தாக வார்த்து விட்டால், புதிய எழுத்துகள், தோற்றத்தில் பழைய எழுத்துகள் போலவே காட்சி அளிக்கும்.

டி, டீ என்ற இரண்டு மட்டும் கூடுதலாகச் செய்துகொள்ள வேண்டும். அப்போது மொத்த வரிவடிவம் 36 ஆக இருக்கும்.

நாகரி அச்சகம் ஒன்றில் நுழைந்து, அந்த எழுத்துக் கட்டையைக் கையில் எடுத்துப் பார்த்தால் இவ்வுண்மை தெள்ளிதின் புலனாகும். எனினும் எழுத்தையும், குறியையும், பிரிப்பதே நல்லது. நாகரி எழுத்து முறை நன்றன்று; தவிர்க்கவேண்டும்.

அச்சுக்கலை பற்றிக் கூற வேண்டியது ஏராளமாக இருந்தாலும் எழுத்துச் சீர்மைக்கும் வடிவக் குறைப்புக்கும் இவ்வளவு போதுமென்பதால் விரிவாகக் கூறாமல் விடுகிறோம்.

செய்திப் பரவல்

அச்சு எழுத்துகளின் தேவை தமிழுக்கும் ஆங்கிலத்திற்கும் வேறுபடுகிறது. 14 கிலோ கொண்ட அளவை 'பாண்ட்' (Font) என்பர். ஆங்கில எழுத்துகள் அரை பாண்ட் போதுமான இடத்தில் தமிழ்எழுத்துகள் ஒரு பாண்ட்டு வேண்டும். தமிழில் எழுத்துப் புழக்கம் சீராக இல்லாமல் எழுத்தாளன் நடையைப் பொறுத்து மாறும். அதனுல் (Wanting Types) தேவையான எழுத்துகள் இல்லை என்கிற தொல்லை மிகுதி. எனவேதான் வடிவக் குறைப்பை மீண்டும் மீண்டும் வற்புறுத்துகிறோம்.

அச்சுத் தொழிலில் மலிவு ஏற்பட்டு, செய்திப் பரவல் கூடுவதால், அறிவுவளர்ச்சியும் மொழிவளர்ச்சியும் கூடும். மொத்தத்தில் புரட்சிகரமான மாறுதல் ஏற்படும்.

சீர்மை முயற்சிகள்

புதியன புகுதல்

'புதியன புகுதலும், பழையன கழிதலும் வழுவல, காலவகை யினானே' என்று கூறிவைத்தனர் ஆன்றோர். இருந்தபோதிலும் மாற்றங்களை ஏற்றுக் கொள்ளத் தமிழகம் தயாராக உள்ளதா?

முயற்சிகள்

எழுத்துச் சீரமைப்புக்கான முயற்சிகள் கடந்த அரை நூற்றாண்டாகத் தமிழகத்தில் முனைப்புக் கொண்டுள்ளது.

தமிழன்பர் மாநாடு

1933 திசம்பரில் சென்னையில் நடைபெற்ற தமிழன்பர்கள் மாநாடு தமிழெழுத்துச் சீர்மைபற்றி ஆராய்ந்து ஒரு தீர்மானம் நிறைவேற்றியது.

பெரியார் மட்டுமே அதனைத் தமது ஏடுகளிலும், இதழ்களிலும், கையாண்டு வந்தார். பெரியாரைப் பின்பற்றியோர் மட்டுமே அதனைத் தொடர்ந்து பயன்படுத்தினர். அவர்களும் பெரியாரை விட்டு விலகியபின் அப்பழக்கத்தை விட்டு விட்டார்கள்.

தமிழ் இலக்கிய மாநாடு

1941-ஆம் ஆண்டில் மதுரையில் நடைபெற்ற தமிழ் இலக்கிய மாநாட்டிலும் எழுத்துச் சீர்மை பற்றிய தீர்மானம் நிறைவேறியது.

அகிலத் தமிழர் மாநாடு

. 1948-இல் சென்னையில் நடைபெற்ற அகிலத் தமிழர் மாநாட்டிலும் இதுபற்றி ஆராய்ந்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அரசாங்க முனைப்பு

நாடு விடுதலை பெற்றதும் ஓமந்தூர் இராமசாமி ரெட்டியார் அவர்கள் முதலமைச்சராகவும் திரு. அவினாசிலிங்கம் அவர்கள் கல்வி அமைச்சராகவும் இருந்த போது அரசாங்கமே ஒரு குழு அமைத்தது. தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரும் அக் குழுவில் ஒருவர். குழுவின் அறிக்கை அரசின் கையில் கிடைத்தது. ஆனால் அது வெளியிடப்படவில்லை. தொடர்ந்த முயற்சி இல்லாததாலும், ஆளும் தலைவர்களை வேறு கவலைகள் சூழ்ந்து கொண்டதாலும் முன்னேற்றம் எதுவும் நிகழவில்லை.


உலகத் தமிழ் மாநாடு

1974-இல் இலங்கையில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் எழுத்துச் சீர்மைபற்றி மூன்று கட்டுரைகள் வந்திருந்தன.

இலங்கையைச் சேர்ந்த தட்டச்சர் திரு. கோவிந்தப் பிள்ளை சில செப்பங்களைப் பரிந்துரை செய்தார். இலண்டன் மாநகரைச் சேர்ந்த இலங்கைத் தமிழர் மின்னியல் பொறியாளர் திரு தில்லைநாயகம் மின்தமிழ்த் தட்டச்சுப் பொறிபற்றிய தன் கட்டுரையில் எழுத்துச் சீர்மையின் இன்றியமையாமையை விளக்கித் தனது பரிந்துரைகளை அளித்திருந்தார். இந்தியத் தமிழகத்தைச் சேர்ந்த பொறியாளர் கொடுமுடி சண்முகனார் ஒரே தட்டச்சுப் பொறியில் ஆங்கிலம் – தமிழ் ஆகிய இருமொழிகளையும் வைத்துக் கொள்வது பற்றிய கட்டுரையில் எழுத்துச் சீர்மை வேண்டியிருந்தார்.

இலங்கையின் பாராட்டு

இலங்கை நாளிதழ்களும், கிழமை இதழ்களும், இக்கட்டுரைச் சுருக்கங்களைப் பிரசுரித்துத் தலையங்கங்களும் எழுதியிருந்தன. வழக்கம்போல இந்தியத் தமிழ் ஏடுகள் பாராமுகமாகவே இருந்தன. மாநாட்டின் இறுதி நாளில் ஏழு தமிழர்கள் உயிர்துறவாது இருந்திருந்தால், அப்படி ஒரு மாநாடு நடந்த செய்தியே நமது தமிழ் ஏடுகளில் வந்திருக்காது. இது புனைந்துரையல்ல; தலைக்குனிவுக்குரிய அப்பட்டமான உண்மை.



இலங்கையில் நடந்த உலகத் தமிழ் மாநாடு
கொடுமுடியார் பேசுகிறார்

இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம்

1975-ஆம் ஆண்டு புதுச்சேரி தாகூர் கல்லூரியில் நடைபெற்ற இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் கருத்தரங்கில் பேராசிரியர்கள் அனைவரும் கலந்து கொண்ட தனி அரங்கில் சாலை இளந்திரையனார் தலைமையில் எழுத்துச் சீர்மைபற்றி ஆராயப்பட்டது. அதனைத் தீர்மானமாக வெளியிட வேண்டுமென்று சாலை இளந்திரையனார் வற்புறுத்தினார். அம்மன்றத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றுவதில்லை என்ற மரபு கருதி அது தீர்மானமாக வரவில்லை. எனினும் அதன் வெளியீடான 'ஆய்வுக்கோவை'யில் வரும் கட்டுரைகளை அவை எந்த எழுத்தில் வருகின்றனவோ, அதே

எழுத்தில் வெளியிடுவதென அதன் செயலாளர்கள் உறுதியளித்தனர். உறுதிமொழி 1977 வரை தொடர்ந்து காப்பாற்றப் பட்டது. 1978–ஆம் ஆண்டு அவர்களும் பின்வாங்கிவிட்டனர். இரண்டு கட்டுரைகள் பெரியார் எழுத்திலும், ஒரு கட்டுரை இந் நூலில் சுட்டிக்காட்டிய எழுத்திலும், பழைய ஆய்வுக்கோவை நூல்களில் இருப்பதை எல்லோரும் அறிவர்.

கொங்கு - தேனோலை

கொங்கு எனும் திங்களிதழ் இவ்வகையில் மிக உறுதியாக இருந்து, தொடர்ந்து கட்டுரைகள் எழுதி அவ்வப்போதைய முயற்சிகளை அறிவித்து வந்தது. தலையங்கத்தைப் புதிய எழுத்திலேயே தொடர்ந்து எழுதி வந்தது. இதழ் முழுவதையும் பெரியார் எழுத்தில் வெளியிட்டது. அதன் துணை இதழான ‘தேனோலை’ காலாண்டிதழும் பெரியார் எழுத்தில் வருகின்றது.

தமிழகப் புலவர் குழு

எழுத்துச் சீர்மைபற்றிய ஆர்வம் தமிழகப் புலவர் குழுவின் துடிப்பு மிக்க இளைஞர்களைக் கவ்விக் கொண்டது. 1975-இல் அலுவல்குழு, உகர வரிசைச் சீர்மையை ஆராய்ந்து, ¬, ூ குறிகளுக்குப் பதிலாக இரண்டு புதிய ‿ ‿ குறிகளைப் பரிந்துரை செய்தது. ஆனாலும் புலவர் குழுவின் முதியோர்களிடம், இளைஞர்களின் முயற்சி வெற்றிபெறவில்லை.

சென்னைப் பல்கலைக் கழகம்

சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ்த்துறை தனது வெளியீடுகளுக்கும் அறிக்கைகளுக்கும் பெரியார் எழுத்துகளைச் சில காலம்பயன்படுத்தி வந்தது. இதனை வெளி உலகமோ, தமிழறிஞர்களோ, அல்லது தமிழர்களோ உணரவேயில்லை. இந்திய அரசியல் வானில் தோன்றிய “நெருக்கடி காலம்” என்ற இருண்ட நாட்களில் அம்முயற்சியின் முதுகெம்லுபு ஒடிக்கப்பட்டது.

எழுத்துகளைப்பற்றிய வரலாற்றைச் சொல்லும்பொழுது நெருக்கடி காலத்தைப்பற்றி இழுக்க வேண்டிதில்லைதான். எனினும் சில அப்பட்டமான உணர்வுகளைக் கூறாமல் இருக்க முடியவில்லை. தமிழ்நாட்டு அரசாங்கத்தின் சார்பு நிறுவனமான தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், ‘நெருக்கடி காலம்’ அறிவித்த சில நாட்களிலே, “இனிமேல் பொறியியல் நூல்களைத் தமிழில் வெளியிட வேண்டியதில்லை” எனத் தீர்மானம் நிறைவேற்றியது. ஏற்கனவே அச்சிடத் தயாரான நிலையில் இருந்த

நூல்களையும் முடக்கிப் போட்டது. அந்த நூல்களை எழுத அறிஞர்கள் பட்ட அல்லல்களையோ, அதற்குப் படம் வரைந்து கொடுத்த ஏழை ஓவியர்களையோ எண்ணிப் பார்க்க அக்குழு வினர் முயலவில்லை. தற்போதும்தமிழ்நாட்டில் தொழில் நுட்பக் கல்லூரிகளில் (Polytechnic) இரண்டு பாடங்களில் தமிழ் போதிக் கப்படுகின்றது என்ற உண்மையைக்கூட மறந்துவிட்டனர். பாட நூல் நிறுவனத்தின் தீர்மானம் இன்னும் மாற்றப்படவில்லை.

இன்னொன்றும் குறிப்பிடத் தக்கது. 1974-ஆம் ஆண்டு சனவரியில் இலங்கை யாழ்ப்பாணத்தில் நடந்த உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் செய்திப்படத்தினை, தமிழ்நாட்டு அரசாங்கத்தின் அனுமதியோடு, திரைப்பட நிதியுதவிக் கழ கத்தின் மூலமாக இறக்குமதி செய்து வைத்துள்ளோம். அதனைத் தமிழ்நாட்டுத் தொலைக் காட்சி நிறுவனம் முக்கி யத்துவம் (Topicality) இல்லை என்ற போலிக்காரணம் காட்டி, நெருக்கடி காலத்தில் வெளியிட மறுத்து விட்டது. மாநாடு நடைபெற்று நீண்ட நாட்களாகி விட்டன என் பதும் ஒரு காரணம். எவ்வளவு நாட்களோ, ஆண்டு களோ ஆனாலும், அந்த மாநாட்டு நிகழ்ச்சிகளைத் தமிழ் மக்கள் (இந்திய நாட்டுத் தமிழ் மக்கள்) காண்பதில் என்ன பிழை நேர்ந்துவிடப் போகின்றது? இன்னும் அடுத்த மாநாடு நடை பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

நெருக்கடி காலத்தில், தமிழ், தமிழர் என்று சொல்வதற்கு அஞ்சுகின்ற சூழ்நிலை தமிழகத்தில் நிலவியதைப் பெரும்பாலா னோர் உணர்ந்திருந்தனர். நிலவியது என்று சொல்வதைவிட, தோற்றுவிக்கப்பட்டது எனறு கூறுவது பொருந்தும். நெருக்கடி காலத்தை விடுத்து மேலே தொடருவோம்.

இவ்வரலாற்றில் தனிமனிதர்களின் பெயர்களைச் சேர்க்க வில்லை. தனிமனிதர் முயற்சிகள் ஏராளம்! அத்தனையும் காட் டிலே காய்ந்த நிலவாக வீணாகிப் போவது பெரு வருத்தத்திற் குரியது. அமைப்புகள் மூலமான முயற்சிகள் மட்டும் இங்கு குறிக் கப்பட்டன. பெரியார் பாதையில் இல்லாத ஏடுகளும் ஏன், எதிர்ப் புப் பாதையில் உள்ள ஏடுகள்கூடப் பெரியாரின் எழுத்து முயற்சியை ஏற்று எழுதி வருகின்றன.

மக்கள் மனம்

மக்களிடையே, மாறுதல் காலத்தில் ஒரு தயக்கம் இருக்கும். ஒரே பாதையில் சென்று கொண்டிருப்போர், அதைவிட நல்ல

பாதையாக இருந்தாலும் புதிய பாதையில் முதலில் செல்லத் தயங்குவது இயற்கை.

பேருந்துகள் முதன் முதலாக அறிமுகப்படுத்திய போது, அதில் ஏறிப் பயணம் செய்ய யாரும் முன்வரவில்லை. பல தூண்டு தல்களின் பின்னரே பழகத் தொடங்கினர். இன்றோ இன்றி யமையாத் தேவையாகிவிட்டது.

ரூபாய் அணா பைசா நடைமுறை மாறி ஒரு ரூபாய்க்கு நூறு காசுகள், தொடர்ந்து அறிமுகமான மெட்ரிக்முறை அளவு இவைகளின் நன்மையையும் அறிவோம்.

அரசாங்கத்தின் பணி

தந்தை பெரியாரின் நூற்றாண்டு விழாவின் சிறப்புகளில் ஒன்றாகக் கருதி, தமிழகஅரசு பெரியார் புழங்கிய சீர்திருத்தங் களை ஏற்றுக்கொண்டு அரசாணை பிறப்பித்துள்ளது. லை, ளை, னை, ணை, றா, னா, ணா, என எழுத அனுமதி வழங்கு கின்றது. இது ஒரு மாபெரும் முன்னேற்றம். தேக்க நிலையி லிருந்து விடுதலை கிடைத்துள்ளது. இனி முன்னேற்றம் தோன்றுமென்பதில் ஐயமில்லை.

சில எதிர்ப்புகள்

எழுத்துச் சீர்மைக்குத் தோன்றுகிற எதிர்ப்புகள் நான்கு வகைப்படும்.

உள்ளது உள்ளபடி

ஒன்று, தமிழ் வடிவங்கள் இப்போது இருப்பதுபோலவே எப்போதும் இருந்த தென்ற தவறான எண்ணத்தால் தோன்றியதாகும். மாற்ற முனைவது தமிழுக்குச் செய்கின்ற துரோகம், என்ற கருத்தால் வருவது. தமிழ் எழுத்துகளின் கடந்த 3000 ஆண்டு கால வளர்ச்சியை அறிந்து கொண்டோர் புதிய மாற்றத்தைப் பொறுத்துக் கொள்வர்.

உயிருள்ள மொழியானதால் வளர்ச்சியும் மாற்றமும் அவ்வப்போது நிகழ்வன; தவிர்க்க முடியாதன; வரவேற்கத்தக்கன. (எழுத்து மாற்றங்களை அடுத்த பக்கத்திலும் காணலாம்.)

இலக்கணம்

இரண்டாவது எதிர்ப்பு, இலக்கணம் இடர்ப்படும் என்பது. இதுவரை கூறிய மாற்றங்களால் எழுத்துகளில், அதுவும் ஒரு சில உயிர்மெய் எழுத்துகளில் மட்டுமே மாற்றம் உண்டாகின்றது. எந்த விதத்திலும் இலக்கணம் பாதிக்கப்படுவதில்லை.

புகழூர்க் கல்வெட்டு - தமிழி
கி. பி இரண்டாம் நூற்ருண்டு

கோ ஆதன் சே(ர)ல்லிரும்பொறை மகன்
பெருங்கடுங்கோன் மகன் (இ)ளங்
கடுங்கோ (இ)ளங்கோ ஆக அறுத்த கல்



அறச்சலூர்க் கல்வெட்டு – தமிழி
கி. பி. இரண்டாம் நூற்றாண்டு
ஈரோட்டுப் புலவர் இராசு கண்டுபிடிப்பு

எழுத்துப் புணருத்தான் மணிய
வண்ணக்கன் தேவன் சாத்தன்



தொண்டை மண்டலம்

தமிழி எழுத்திலும்—வட்டெழுத்திலும்

தமிழ் இலக்கணங்கள் வரிவடிவத்தை பொருட்படுத்துவதே இல்லை. அவை ஒலி வடிவத்திலேயே உயிரை வைத்துள்ளன.

வழக்கம்

மூன்றாவது, புழக்கத்தில் உள்ளவற்றை மாற்றுவதற்குப் பொதுவாக ஏற்படும் எதிர்ப்பாகும். 'மாமூல்' வழக்கத்தை மாற்றுவதற்கானது. அதனாற்றான் மிகக் குறைந்த மாற்றங்களை மட்டுமே பரிந்துரைக்கின்றோம். தற்போது வழக்கில் உள்ள 247 எழுத்துகளில் மாற்றம் 43 எழுத்துகளில் மட்டுமே ஆகும். வடிவங்களை உரு மாற்றவில்லை. உருமாறிய எழுத்துகளை எளிதாக்குகிறோம்.

மிகவும் கற்றறிந்த பேராசிரியர்கள்கூட, "இருக்கிறதே இருந்துவிட்டுப் போகட்டுமப்பா! ஏன் ஒவ்வொன்றையும் மாற்றிக் கொண்டிருக்கவேண்டும்? பின்னால் வருபவனெல்லாம் கை வைத்துக் கொண்டேயிருப்பான்" என்பது போன்று பேசுவதைக் கேட்கலாம்; அது உண்மையேயாயினும் முன்னேற்றம் கருதிச் சீர்மையை ஏற்றலே சிறப்புடைத்தாகும்.

பழைய நூல்கள்

பழைய நூல்களையெல்லாம் என்ன செய்வது? அத்தனைக்கும் புதிய பதிப்பு செய்ய இயலுமா? இது குறிப்பிடத்தக்க ஐயம். ஐயம் களைதல் இன்றியமையாதது. எல்லாப் புத்தகங்களும் காகிதத்தால் ஆனவையே என்றாவது ஒரு நாள் அழிவது திண்ணம். மிக நல்ல தாளில் அச்சடிப்பவைகூட ஐம்பது ஆண்டு களில் தானாகப் பொடிந்துவிடுகிறது. எனவே அதுபற்றிக் கவலைவேண்டா.

பழைய புத்தகங்களைப் படிக்கவும் எளிய வழிகள் பலவுண்டு. புதிதாக அச்சிடுகின்ற பின்னட்டையில் பழைய வடிவத்தை அச்சிட்டுக் கொண்டால் போதும். புதிய மாணவர்கள் அதனையும் பழகிக் கொள்வர். அது எளிதே ஆகும். பழைய வடிவத்தை எழுதிப் பயிற்சிபெறத்தான் சற்று இன்னலாகத் தெரியுமே அன்றி படிப்பது எளிதாகத்தான் இருக்கும். இப்போதும் பலபேர் அடுத்த மொழி ஏடுகளைப் படிக்கத் தெரிந்தவராக இருப்பதையும், எழுதப் பயிற்சியில்லாததையும் கண்டு கொண்டிருக்கிறோம். எனவே பழைய புத்தகங்களைப் படிப்பது எளிய செயலே யாகும்.

கல்லிலே உள்ள எழுத்துகளையெல்லாம் படித்துப் புரிந்து கொள்கிறோம். பதிற்றுப் பத்துச் செய்தியைக் கூறும் கரூர் அருகில் .உள்ள புகழூர்க் கல்வெட்டைப் படிக்கின்றோம். இசை வளம் காட்டும் அறச்சலூர்க் கல்வெட்டைப் படிக்கின்றோம். மற்றும் பல்லவர்கள், பாண்டியர்கள், சோழர்களின் கல்வெட்டு களைப் படிக்கின்றோம். பேரரசன் இராசராசன் எழுதிவைத்த வற்றையெல்லாம் படிக்கிறோம். நாம் எழுதியதை நமது பிள்ளை களோ, பேரன்களோ, படித்திடவா முடியாது?

□

ஓமலூர், கேத்தநாய்க்கன்புதூர்
பெரிய சக்கிலிச்சி ஏரிக் கல்வெட்டு
எட்டாம் நூற்றாண்டு-வட்டெழுத்து
கொடுமுடியார் கண்டுபிடிப்பு

ஸ்ரீ கிடங்கல் புலியார் ம
க னல்லி ஓட்டை கண்டது

ஸ்ரீ கிடங்கல் — ஏரியின் பெயர்
மதகு வைத்தவன் — நல்லி
அவன் தந்தை — புலியார்

சில கருத்துகள்

எண்ணங்கள் கோடி

தமிழ் வடிவங்களின் எண்ணிக்கை குறைப்பதுபற்றி ஏராள மானவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். நல்ல முடிவு எடுப்ப தற்குமுன் அவற்றையெல்லாம் கருதிப்பார்க்கவேண்டியது மிகவும் இன்றியமையாதது.

உயிர் வரிசை

மெய் எழுத்தை மூல எழுத்தாக வைத்துக்கொண்டு, ஏதாவது அடையாளம் சேர்த்து உயிர் மெய் எழுத்துகளைத் தோற்றுவிக் கின்றோம். இதே கொள்கையில், உயிர் வரிசைக்கும் ஒரு மூல எழுத்தை வைத்துக் கொண்டு பிற உயிர்க்கான அடையாளங் களைச் சேர்த்துக் கொண்டால் என்ன?

இதன்படி 'அ' மூல எழுத்தாக இருக்கும். பிற குறியீடுகள் அதனோடு இணையும்! கீழ்க் கண்டவாறு அவை இருக்கும்.

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ

அ அா அி அீ அு, அூ, ெஅ ேஅ ைஅ ெஅா ேஅா அள

இது நல்ல யோசனைதான். இதனை ஏன் ஏற்றுக் கொள்வ தற்கில்லை என்பதைக் காண்போம்.

நன்மை : இதனால் பத்து வடிவங்கள் குறைகின்றன,

நெடிலுக்குக் கால் வாங்குவதில் ஐந்து குறைந்து விடுகிறது.

எனவே நிகரக் குறைப்பு ஐந்து ஆகும். ஆக மொத்தம் 29 குறிகளே ஆகும்.

தீமை : தமிழ் மொழியில் உயிர் எழுத்துகளின் புழக்கம். மிக அதிகம். உயிர் எழுத்தின் தனித்தன்மை போய்விடுகிறது. அதனால் இப்புதிய தோற்றத்தால் மாறுதல் காலத்தில் மிகுதியான குழப்பம் ஏற்பட்டு, மாறுதலையே அச்சுறுத்தும் என்று தோன்றுகிறது.

நன்மை, தீமைகளை ஆராயும்போது இம்முறையைத் தவிர்த்தலே நலம் என்று தோன்றுகிறது.

இலண்டன் மின்னியல் பொறியாளர் தில்லைநாயகம் அவர்கள் இதனைப் பரிந்துரைக்கின்றார்.

வலது பக்கம் குறியிடுதல்

மெய்யெழுத்துடன் உயிர் வந்து ஒட்டுவதால், முதலில் மெய்யும், பின்னர் ஒட்டுக்குறியும் அமையவேண்டும் என்று சிலர் கருதுவர்.

க்+ஆ =கா
அல்லது க்+ ஐ =கை

இதே போன்று எல்லா எழுத்துகளும் வர வேண்டும் என்பதாகும். இகர, உகர உயிர் மெய்கள் இதற்கேற்ப உள்ளன.

எகர ஒகர ஐகார உயிர் மெய்களில் முன்னால் ஒரு குறியீடு வருகின்றது. அது சிலருக்குப் பொருத்தமாகப் படவில்லை. ஆங்கிலத்தை எடுத்துக் கொண்டால் a e i o u என்ற உயிர் எழுத்துகள் எப்போதும் பின்னேதான் வருகின்றன.

இடது பக்கம் குறியிடுதல்

தொல்காப்பியர் காலத்தில் மெய் யெழுத்துகள் அடிப்படை உருவம் கொண்டவையாக உள்ளன. உயிர் ஏறுவதனைக் குறிக்க ஒரு சிறு கோடு எழுத்தோடு சேருகிறது. அதனால் உயிர்மெய் வடிவம் உருவாகின்றது.

வலது மேல் பக்கக் கிடைக்கோடு ஆ
வலது மேல் பக்கம் ஒரு குத்துக்கோடு இ
வலது மேல் பக்கம் இரு குத்துக்கோடு ஈ
வலது கீழ் அல்லது அடியில் ஒருகோடு உ
வலது கீழ் அல்லது அடியில் இரு கோடு ஊ
இடது மேல் ஒரு கோடு ஏ
இடது மேல் இரு கோடுகள் ஐ

இடது மேல் ஒரு கோடு }
வலது மேல் ஒரு கோடு } ஓ

இடது பக்கம் உள்ள கோடுகள் வளர்ந்து ெ ே ை ஆகிவிட்டன. அதனால் தமிழ் எழுத்து மரபுப்படி முன்னால் குறியீடு அமைதல் பழுதல்ல.

க கா கி கீ கு கூ கெ கை கோ

கா ... கா

கே ... கெ கே

கை ... கை கை

கு ... கு

பக்கக் குறி

அகரத்தை முதலாக வைத்துக் கொண்டு பிறவற்றிற்குப் பக்கக்குறி அமைத்தல் இதில் உண்டு. குறியீடுகள் பெரும்பாலும் கணக்குக் குறியீடுகள் போல அமைந்துள்ளன. அவை வருமாறு: பொது நூலக இயக்குநர் திரு. வே. தில்லை நாயகம் அவர்களும் உயிர் மெய்யின் உயிர் அடையாளம் எழுத்தின் வலப்பக்கம் வருவதைப் பரிந்துரைக்கின்றார். ('எழுத்துச் சீர்மை—அறிஞர் கருத்து', — சேகர் பதிப்பகம் வெளியீடு.)

பண்டைய மரபு போகட்டும்! புதிதாக வலது பக்கம் குறியீடு அமைத்துக் கொண்டால் என்ன? தாராளமாக அமைத்துக் கொள்ளலாம். அப்போது என்னவாகும்? ஐ காரம், எகரம், ஏகாரம், ஒகரம், ஓகாரம் ஆகிய எல்லா வரிசைகளும் மாறும். தமிழ் வரிவடிவம் முழுக்க மாறிவிடும். தற்போதைய எழுத்து முறைக்குப் பதில், முழுக்கப் புதிய முறையை அறிமுகப்படுத்தியது போலாகிவிடும். முனைவர் வ. செ. குழந்தைசாமி அவர்கள் (கலைக்கதிர்-சனவரி, 1978) இதனைப் பரிந்துரைக்கின்றார்கள்.

புதிய குறியீடுகள்

அகரத்திற்கு வெற்றுப் புள்ளியையே வைத்துக் கொள்வது, பிற உயிர்களுக்கும் சில புதிய குறியீடுகளை அமைத்துக் கொள்வது மெய்யுடன் இக் குறியீடுகளைச் சேர்த்து உயிர். வரிசை தோற்றுதல். அந்த வடிவங்கள் வருமாறு:

புதியஉயிர்	┤	ா	˥	∂	ு	ூ	எ	ര	ஞ	ே	ஓ	ய
புதிய இணைப்பு	க┤	கா	க˥	க∂	கு	கூ	கஎ	கര	கஞ	கே	கஓ	கய

இம்முறை பற்றிய விரிவான கருத்தோட்டத்தை 'விடுதலை பெரியார் மலர்' 1975, பக் 113—119இல் காணலாம். பொது நூலக இயக்குநர் வே. தில்லை நாயகம் இதுபோன்ற பரிந்துரையையும் தருகின்றார்கள்.

மெய் + உயிர்

இன்னொரு முதன்மையான கருத்து மெய்யையும் உயிரையும் உள்ளபடியே பெய்து எழுதுவதாகும். மெய்யெழுத்தின் தலைப் புள்ளியை எடுத்துவிடுவது, அகர உயிர் மெய்களுக்கு எழுத்துடன் அ எழுத்தைச் சேர்த்துக் கொள்வது.

"மஉரஉகஅன வஅநதஆன" என்றவாறு வாசகம் அமையும். இதன்படியும் 31 வடிவங்களே உள்ளன. இம்முறையினை ஆங்கில மொழியின் எழுத்துகளோடு ஒப்பிடலாம், மாறுதல் காலத்துக் குழப்பம்தான் இதில் தலையானது; இடர்போல உள்ளது. தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் கொண்டல் சு. மகாதேவன் அவர்கள் இதனைப் பரிந்துரைக்கின்றார்.*

* 'எழுத்தும் கருத்தும்'—சேகர் பதிப்பக வெளியீடு.

ரோமன் வடிவம்

தமிழுக்கு ஆங்கில வரிவடிவையே வைத்துக் கொள்ளலாம் என்பதுவும் ஒரு கருத்தாகும். மேலே கூறியதுபோல, தமிழ் எழுத்துகளுக்குப் பதிலாக ஆங்கில வரிவடிவைப் பெய்வதாகும். கடந்த 300 ஆண்டுகளாகத் தமிழை ஆங்கிலத்தில் எழுதிக் கொண்டுதானே இருக்கின்றோம். ஆட்களின் பெயர்கள், ஊர்களின் பெயர்கள் எல்லாம் எழுதுகிறோம். முழுப் பத்திகூட எழுதப்படுகின்றது. ஆங்கிலத்தில் எழுதப்படுகின்ற தமிழ் பற்றிய கட்டுரைகளில் பல வேளை சங்கப் பாடல்களைக்கூட எழுத்துப் பெயர்த்து எழுதக் காண்கிறோம். புதிதாகக் கண்டு பிடிக்கப் படும் கல்வெட்டுகளைத் தொல்லியல் துறையினர் ஆங்கில எழுத்திலேயே வெளியிடுவர்.

இதனை எழுத்துப் பெயர்ச்சி (Transliteration) என்பர். திரு. வே. தில்லைநாயகம் அவர்களும், திரு. வ.செ. குழந்தைசாமி அவர்களும் இவற்றைப் பரிந்துரைக்கின்றனர்.

சிந்தனை ஒன்று

தமிழ் நம்முடைய மொழி. அதன் ஏற்றத்திலும் இறக்கத்திலும் முழுப்பொறுப்பு நமக்கே. எனவே எல்லாச் சிந்தனைகளையும் கருதிப் பார்த்து, கூட்டிக் கழித்து, நல்ல முடிவினை எடுக்கலாம்.

எண்ணித் துணிக கருமம்; துணிந்தபின்
எண்ணுவம் என்ப திழுக்கு!

முன்னோடிகளும் முனைப்பாளர்களும்

தமிழ் எழுத்துச் சீர்மைக்கான முன்னோடி தந்தை பெரியார் என்பதில் எந்த ஐயமும் யாருக்கும் இருக்க முடியாது.

அவர் கும்பகோணம் அரசினர் கலைக் கல்லூரியிலும், சென்னைப் பச்சையப்பன் கல்லூரியிலும் "மொழி—எழுத்து" என்ற தலைப்புகளில் ஆற்றிய உரைகளைத் தொகுத்து திருச்சி –17, பெரியார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீட்டார் பதிப்பித்துள்ளனர். முதற்பதிப்பு 1948-இல் வெளிவந்தது. இரண்டாம் பதிப்பு 1973-இல் 75 காசு விலையில் வெளியிட்டுள்ளனர்.

இந்தக் கட்டுரையில் தந்தை பெரியார் அவர்கள் எல்லா யோசனைகளையும் வெளியிட்டு விட்டார்கள் பின்னால் பலர் தாமாக நினைத்து. கண்டுபிடிப்பவை யெல்லாம், முன்னாலேயே இந்தச் சுவடியில் அச்சாகியுள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

பெரியார் அவர்கள் கருத்துத் தெரிவித்ததோடல்லாமல், தொடர்ந்து தனது வெளியீடுகளில் திருந்திய எழுத்துகளையே இறுதி வரைப் பயன்படுத்தினார். லை, ளை, னை, ணை, னா, ணா, றா, அய், அவ் ஆகியவை ஆகும்,

1973 ஆம் ஆண்டு வெளியிட்ட சிறு நூலில் டாக்டர் மு. வரதராசனார், தெ. பொ. மீனாட்சி சுந்தரனார், கொண்டல் சு. மகாதேவன், அ. ச. ஞானசம்பந்தன், டாக்டர் ந. சுப்பு ரெட்டியார் ஆகியோர் கட்டுரைகள். இடம் பெற்றுள்ளன. அவர்கள் எழுத்துச் சீர்மையை வேண்டி விழைகின்றனர்.

பெரியாரைத் தொடர்ந்து அவரது தளபதி 'குத்தூசி' எஸ். குருசாமி அவர்களும் அக்காலத்தில் பல எதிர்ப்புகளைச் சந்தித்துள்ளார்கள் புதிய வடிவங்களைப் பரப்பி விளக்கிய பெருமை இவரைச் சாரும்.

முனைப்பாளர்களில் அடுத்து வருபவர் புலவர் குழந்தை ஆவார்கள். அவரது கருத்துகள் கொண்ட நூல் ''தமிழெழுத்துச் சீர்திருத்தம்'' என்ற தலைப்பில் 1968 - ஆம் ஆண்டு வெளியாயிற்று. அதனை ஈரோடு வேலா பதிப்பகத்தார் வெளியிட்டுள்ளனர். புலவர் குழந்தை விரிவான ஆராய்ச்சி மேற்கொண்டு, தீவிர சீர்திருத்தங்களைப் பரிந்துரை செய்துள்ளார்கள். அவரது கணக்கில் வரிவடிவம் 39.

ஆங்கில, வடமொழி எழுத்துகளை எழுதுவதற்கும் புதிய குறி முறைகளைப் புலவர் குழந்தையவர்கள் யாத்துத் தந்துள்ளார்கள்.

ஓமந்தூரார் காலத்தில் எழுத்துச் சீர்மைக்காக அரசே குழு நியமித்தது. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் போன்றோர் அக் குழுவில் இடம் பெற்றிருந்தனர். அவர்தம் அறிக்கையை அரசாங்கம் வெளியிடவில்லை.

'கொங்கு' 73 அக்டோபர் இதழில் வந்த 'தமிழ் நெடுங் கணக்கு' என்ற கட்டுரை தொடங்கி, பல ஆராய்ச்சிகளையும், முயற்சிகளையும் தொடர்ந்து மேற்கொண்டவர் கொடுமுடி. சண்முகன் என்ற பொறியாளர் ஆவார். இவர் 1974 சனவரியில் இலங்கை யாழ் நகரில் 1974இல் நடைபெற்ற நான்காவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில், 'இருமொழித் தட்டச்சு' என்ற கட்டுரை வாசித்தார். தட்டச்சின் விசைப் பலகை 1974 சனவரி 'கொங்கு' இதழில் வெளியாயிற்று. பல புள்ளி விவரங்களை அவ்வப்போது வெளியிட்டார்.

இலங்கை மாநாட்டில், இலண்டன் நகரிலிருந்து கட்டுரை அனுப்பியிருந்தார் மின்னியல் பொறியாளர், வி. கே. தில்லை நாயகம் அவர்கள். 'தமிழ்த் தட்டச்சுப் பொறி' என்பது கட்டுரைத் தலைப்பு. மின்னியல் தட்டச்சு செய்வதில் பயனும், தேவையும் குறித்துக் கூறி, எழுத்துச் சீர்மை வேண்டியிருந்தார். தட்டச்சு விசைப் பலகையும் வரைந்திருந்தார்.

இலங்கைப் பல்கலைக் கழகத்தின் பெரதேனியா வளாகத் தமிழ்த் தட்டச்சர் கோவிந்தப்பிள்ளை அவர்களும் எழுத்துச் சீர்மை வேண்டிப் பரிந்துரைகள் அளித்திருந்தார்.

தமிழ் வளர்ச்சித் துறைத் தலைவர் கொண்டல் சு. மகா தேவன் அவர்கள் தமது சீர்மைப் பரிந்துரையை 1975 சனவரி கொங்கு இதழில் வெளியிட்டிருந்தார். அது தொடர்பாகப் பல கட்டுரைகள் வரைந்தும், சொற்பொழி வாற்றியும் முனைப்புக் காட்டி வருகின்றார்கள்.

தமிழகப் பொது நூலகத் துறை இயக்குநர் வே. தில்லை நாயகம் அவர்கள் எழுத்துச் சீர்மைக்கான தமது பரிந்துரையை 1975 ஆம் ஆண்டு பெரியார் பிறந்தநாள் விடுதலை மலரில் வெளி யீட்டுள்ளார்கள்.

மதுரைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் வ. செ. குழந்தை சாமி அவர்கள் கலைக்கதிர் இதழில் தமது கருத்துக் களை ஒவ்வொரு ஆண்டும் வெளியிட்டு வருகிறார்கள். அண்மை யில் 1978 சனவரி இதழில் பெருத்த கட்டுரையாகப் பலபட ஆராய்ந்து, தமது பரிந்துரைகளை வெளியிட்டுள்ளார்கள்.

முனைவர் சாலை. இளந்திரையன் அவர்கள் ஒவ்வொரு தமிழாசிரியர் கூட்டத்திலும் எழுத்துச் சீர்மையை வற்புறுத்து வார்கள். அவரது துணைவியார் சாலினியார் தாமே தட்டச்சு செய்யும் வல்லமையாளர். உரத்த குரலில் எழுத்துச் சீர்மைக்கு வாதாடுவார். இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் கருத் தரங்கில் எழுத்துச் சீர்மைக்குத் தீர்மானம் வேண்டி வற்புறுத் தினார். பொது அரங்கில் கூட்டம் போட்டு, பொறியாளர் கொடுமுடி சண்முகன் அவர்களைப் பேசவைத்து, தமிழ்ப் பேராசிரியர் எல்லோருடனும் கலந்துரையாடச் செய்தார். அவரது வற்புறுத்தலில், புலவர் குழுவும் இதுபற்றிச் சிந்தித்தது.

முனைவர் ந. சஞ்சீவி அவர்கள் தமிழகப் புலவர் குழுவின் செயலாளர். 5-3-75 அன்று கையெழுத்திட்டு அனுப்பிய அறிக் கையில் புலவர் குழுவின் முன்னோடிக் கூட்டத்து முடிவுகளை அறிவித்துள்ளார்கள். லை, ளை, னை, ணை, ஞு, ஞூ, ரு எழுத்துகளின் ஒழிப்பும், உகர, ஊகார உயிர்மெய் வரிசைக்குப் புதிய பக்கக் குறி யும் பரிந்துரை செய்யப் பட்டுள்ளது. சீர்மையின் முதற்படியாகச் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பெரியார் எழுத்துகளைத் தமிழ்த்துறை மட்டும் கடந்த மூன்றாண்டுகளாகப் புழங்கி வந்தது.

மலேசியா நாட்டைச் சேர்ந்த மு. பரமானந்தம் அவர்கள் அந்நாட்டின் உதயம் என்ற அரசாங்க ஏட்டில், தமிழ் எழுத்துச் சீர்மை பற்றி மூன்று இதழ்களில் கட்டுரை எழுதியுள்ளார்கள்.

தினமலர் நாளேட்டில் எழுத்துச் சீர்மை பற்றிப் பல்வேறு அறிஞர்களின் கட்டுரைகளைத் தொடர்ந்து வெளியிட்டதன்றி

குறிப்பாக அவர்களின் கருத்தையும் 13–2–75 ஆம் நாள் இதழில் தந்துள்ளார்கள். அதன் ஆசிரியர் கிருஷ்ணமூர்த்தி சிறுநூல் ஒன்றும் வெளியிட்டுள்ளார்.

கலைக்கதிரில் இரண்டு ஆண்டுகளாக எழுத்துச் சீர்மை பற்றிய கட்டுரைகளை அவ்வப்போது வெளியிட்டு வருகின்றனர்.

எழுத்துச் சீர்மை முயற்சிகளில் ஈடுபட்டவர்களை ஏழுவகையாகப் பிரிக்கலாம்.

1. எழுத்துச் சீர்மையின் தேவையை உணர்ந்து, வற்புறுத்திய சிந்தனையாளர்கள்.
2. சீர்திருத்தும் எண்ணத்தை வரவேற்று ஆதரவு தந்தவர்கள்.
3. புதிய வடிவங்களை எண்ணி எடுத்துரைத்த பரிந்துரையாளர்கள்.
4. புதிய யோசனைகளுக்குத் திருத்தங்கள் கூறிச் செப்பம் செய்தோர்.
5. புதிய வடிவங்களை மக்களிடையே எடுத்துக் கூறி விளக்கம் அளித்தோர்.
6. நடைமுறையில் புதியவடிவங்களை அறிமுகப்படுத்தித் தொடர்ந்து நடைமுறைப் படுத்தியவர்கள்
7. எழுத்துச் சீர்மை பற்றி எல்லா முயற்சிகளையும் பாராட்டுபவர்கள்.

1933-ஆம் ஆண்டு முதல் கடந்த அரை நூற்றாண்டாகத் தமிழ் மக்கள் பலர் எடுத்துக் கொண்ட முயற்சிகள் எல்லாம் வலுப் பெற்று வருவது கண்கூடு.

முதல் முன்னேற்றம் 19-10-78 அன்று தமிழக அரசு வெளியிட்ட சீர்மைக்கான ஆணை ஆகும் பெரியார் கையாண்டவை இதில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. அரசாங்கம் "போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து'' என இத்துடன் நின்று விடாமல் அறிஞர் குழுவையும், அச்சுத் துறையில் முன்னேறிய நிலையில் உள்ளவர்களையும் கலந்து ஆராய்ந்து நல்ல முடிவு எடுக்க வேண்டும்.

செயலாக்கம்

மீண்டும் ஒரு பார்வை!

எழுத்து வடிவங்களின் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டியதன் இன்றியமையாமையை அறிந்துள்ளோம். எந்த வகையான மாற்றங்களை ஏற்றுக் கொள்ளலாம் எனவும் அறிந்தோம். புதிய வடிவங்களை மீண்டும் காண்போம்.

உயிர்

1. உயிர் எழுத்துகள் 12.

2. குறில் 5. அவை : அ, இ, உ, எ, ஒ இந்த வடிவங்களில் மாற்றம் இல்லை.

3. நெடில் 7 அவற்றில் ஐ, ஔ ஆகிய இரண்டு நீங்கலாக மீதி உள்ள (ஆ, ஈ, ஊ, ஏ, ஓ) ஐந்தும் குறிலின் நீட்டல்களே. குறிலுடன் கால் (ா) சேர்ந்து நெடிலாகும். அா, இா, உா, எா, ஒா

4. ஐ : இதில் மாற்றமில்லை.

5. ஔ: இதிலும் மாற்றமில்லை.

மெய்

1. மெய் எழுத்துகள் 18.

மெய் எழுத்துகளின் தலையில் ஒரு புள்ளி உள்ளது அந்தப் புள்ளியை, தலையின் நேர்மேலே வைக்காமல், எழுத்தின் வலதுபுறம் மேற்பகுதியில் வைக்கப்படுகிறது. கோணங்களின் பாகை (degree)யைக் குறிக்கும் புள்ளிபோல இருக்கும்.

அவை வருமாறு : க° ங° ச° ஞ° ட° ண° த° ந° ப° ம° ய° ர° ல° வ° ழ° ள° ற° ன°

உயிர்மெய்

உயிர்மெய் வடிவங்களை ஒவ்வொரு உயிர் வரிசையாகப் பகுத்துக் கொண்டு, ஒவ்வொன்றையும் தனித்தனியாகக் காணலாம்.

அகர வரிசை

இவை தமிழ்எழுத்துகளின் அடிப்படை வடிவங்களாகும் இவற்றில் மாற்றம் ஏதுமில்லை. அவை : க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ழ ள ற ன

ஆகார வரிசை

குறில் எழுத்துகளுடன் கால் (ா) சேர்த்து எழுதுவது பெரும்பாலான எழுத்துகளுக்குப் பொருந்தும். ணா னா றா ஆகிய மூன்று மட்டும் தனிவடிவங்களாக உள்ளன. சீர்மை கருதி அவற்றிற்கும் கால் (ா) சேர்த்து, ணா, னா, றா என எழுதலாம்.

புதிய வடிவங்கள் : கா, ஙா, சா, ஞா, டா, ணா, தா, நா, பா, மா, யா, ரா, லா, வா, ளா, ழா றா, னா.

இகர வரிசை

அகர வரிசை எழுத்துகளுக்கு ? மேல் விலங்கு மாட்டி, புதிய வடிவம் உருவாக்கப்படுகிறது. மேல் விலங்கை எழுத்துடன் ஒட்டி எழுதாமல் தனித்து எழுதலாம். சுதேசமித்திரன் நாளிதழில் இம்முறை நெடுங்காலம் பயன்பட்டது. இந்த வரிசையில் டி மட்டும் தனித்து நிற்கும். மேல் விலங்கை எழுத்துடன் ஒட்டாமல் தனித்து எழுதுவது போல ட எழுத்தின் பக்கத்திலும் எழுதப்படுகிறது. ரி எழுதும் போது ர போட்டு சுழி (?) இணைக்க வேண்டும்.

புதிய வடிவங்கள் : கா முதல் னா வரை.

ஈகார வரிசை

இகர வரிசையில் கூறியது போன்று நெடிலுக்கான மேல் விலங்கு தனியாக எழுதப்படுகிறது. டீ எழுத்திற்கும், மேல் விலங்கைத் தனியாக ட என்றவாறு வைக்கப்படுகிறது.

புதிய வடிவங்கள் ; கீ முதல் னீ .வரை

உகர வரிசை

உருமாற்றம் அதிகமாக உள்ளது இந்த வரிசையிலேயே யாகும். அகர வரிசை எழுத்துடன் ஏதாவது ஒரு பக்கக் குறி சேர்த்துக் கொண்டு புதிய வடிவங்கள் உருவாக்கப்படுகிறன. அதற்கான பக்கக் குறியாக எதனைப் பயன்படுத்தலாம் என்பதை ஒரு உயர்மட்டக் குழு நிர்ணயிக்கவேண்டும்.

தமிழில் பயன்படும் கிரந்த எழுத்து வடிவங்களில் பயன்படும் குறியை இங்கே பயன்படுத்திப் புதிய வடிவங்கள் எழுதிக் காட்டப்படுகின்றன. எழுத்துடன் ஒட்டாமல் குறியினைத் தனித்து எழுத வேண்டும்.

புதிய வடிவங்கள் : கு ஙு சு ஞு டு ணு து நு பு மு யு ரு லு வு ழு ளு று னு

ஊகார வரிசை

குறில் வரிசைக்குக் கூறியது போன்று நெடிலுக்கான குறியினை எழுத்தின் வலது பக்கத்தில் இடவேண்டும்.

புதிய வடிவங்கள்

கூ, ஙூ, சநி ஞூ, டூ, ணூ, தூ, நூ, பூ, மூ, யூ,ரூ, லூ, வூ, ழூ, ளூ, றூ, னூ

எகர வரிசை :

இந்த வரிசையில் எழுத்தின் முன்னால் ஒரு கொம்பு சேர்க்கப் படுகிறது எந்த மாற்றமும் இந்த வரிசையில் இல்லை.

புதிய வடிவங்கள் :

கெ, ஙெ, செ, ஞெ, டெ, ணெ, தெ, நெ, பெ, மெ, யெ, ரெ, லெ, வெ, ழெ, ளெ, றெ, னெ.

ஓகார வரிசை :

குறில் வரிசையில் கூறிய, அதே கொள்கைப்படி, ஒற்றைச் சுழிக் கொம்பிற்குப் பதிலாக இரட்டைச் சுழிக் கொம்பு பயன் படுத்தப் படுகிறது. இதிலும் எந்த மாற்றமும் இல்லை.

புதிய வடிவங்கள் :

கே, ஙே, சே, ஞே, டே, ணே, தே, நே, பே, மே, யே, ரே, லே, வே, ழே, ளே, றே, னே.

ஐகார வரிசை

அகர வரிசை எழுத்துகளின் முன்னால் சங்கிலி (ை) சேர்த்து, உயிர்மெய் ஐகாரம் தோற்றுவிக்கப்படுகிறது, லை, ளை, னை, ணை ஆகிய நான்கு எழுத்துகள் மட்டும் தனி வடிவம் கொண்டு, முன்னால் ஒரு துதிக்கை பெற்றுத் திகழ்கின்றன. அவற்றையும் பிற எழுத்துகளோடு இணையாகப் பிரித்து எழுதலாம்.

புதிய வடிவங்கள் :

கை, ஙை, சை, ஞை, டை, ணை, தை, நை, பை, மை, யை, ரை, லை, வை, ழை, ளை, றை, னை.

ஒகர வரிசை

ஒகர வரிசையில் எழுத்தின் முன்னால் ஒற்றைச் சுழிக் கொம்பு பெற்றுள்ளது. கொம்புக் கடுத்து எழுத்தின் அகர நெடில் வடிவம் அமைகிறது. ஆகார வடிவத்தில் கூறியபடி கொம்புடன் புதிய வடிவத்தை எழுதலாம்.

புதிய வடிவங்கள் :

கொ, ஙொ, சொ, ஞொ, டொ, ணொ, தொ, நொ, பொ' மொ, யொ, ரொ, லொ, வொ, ழொ, ளொ, றொ, னொ.

ஓகார வரிசை

ஒகர வரிசையில் உள்ளபடியே, ஒற்றைச் சுழிக்கொம்பிற்குப் பதிலாக இரட்டைச் சுழிக் கொம்பு பயன்படுத்தப் படுகிறது. ஞோ, ணோ, ரோ ஆகிய எழுத்துகள் மட்டும் மாறிவரும்.

புதிய வடிவம்

கோ, ஙோ, சோ, ஞோ, டோ, ணோ, தோ, நோ, போ, மோ, யோ, ரோ, லோ, வோ, ழோ, ளோ, றோ, னோ.

ஔகார வரிசை

ஔகார வரிசையில் ஒகர வரிசையில் கடைசிக் காலு (ா)க்குப் பதிலாக ள வடிவம் போட வேண்டும். இந்த வரிசையில் மாற்றம் ஏதுமில்லை.

புதிய வடிவங்கள் :

கௌ, ஙௌ, சௌ, ஞௌ, டௌ, ணௌ, தௌ, நௌ, பௌ, மௌ, யௌ, ரௌ, லௌ, வௌ, ழௌ, ளௌ, றௌ, னௌ.

ஆய்தம் :- ஃ

முப்பால் புள்ளி அப்படியே இருக்கும்; மாற்றமில்லை.

ரகர வரிசை :

ர என்ற எழுத்து தனித்து வரும்போது கால் (ா) வடிவத்துடன் அடியில் சாய்வுக் கோடு பெற்றும், கூட்டாக வரும்போது அடிக்கோடு இல்லாமலும் வருகிறது. சீர்மை கருதி எல்லா இடங்களிலும் அடிக்கோட்டுடன் எழுதுவதே முறை. ர, ரா, ரி, ரீ, ரு, ரூ, ரெ, ரே, ரை, ரொ, ரோ, ரௌ.

அறிஞர் பணி :

தமிழ் மொழிக்கான எழுத்து வடிவங்களில் சில செப்பங்கள் ஏன் தேவை, எவ்வாறு இருக்க வேண்டும் என்பது பற்றிய விளக்கங்கள் தர வேண்டியது அறிவாளிகளின் பணியாகும். கடந்த அரை நூற்றாண்டாக இப்பணி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

எந்த ஒரு திட்டத்திற்கும் பல மாற்றுத்திட்டங்கள் முன் மொழியப்படுவது இயற்கை. அதற்கொப்ப ஏராளமான முன் மொழிவுகள் தற்போது களத்தில் உள்ளன. அவற்றுள் நல்ல திட்டம் ஒன்றைத் தேர்ந்தெடுத்து செயற்படுத்துவதே இன்றைய பணி.

அரசின் பணி

உலகத்தில் பல அரசாங்கங்கள் தமிழைப் பயன்படுத்துகின்றன. அவை தனித்தனியே இதுபற்றி முடிவு எடுக்க இயலும். எனினும் அவை மரியாதை கருதி, இந்தியப் பெருநாட்டில் உள்ள

தாய்த் தமிழகத்தை எதிர்நோக்கி உள்ளன. எனவே தமிழக அரசு இதில் முன்னோடியாக இருந்து செயல்பட வேண்டியுள்ளது.

கேரள அரசு ஐந்தாண்டுகளுக்கு முன்னரே மலையாள மொழிக்கான வடிவங்களைச் செம்மைப்படுத்தியமை ஒரு முன்னுதாரணம் ஆகும்.

நடை முறை

தமிழக அரசு தற்போது முதற்கட்டமாகப் பெரியார் வடிவங்களைக் ஏற்றுக் கொண்டுள்ளது. மேலும் அறிஞர்கள் பலரின் பரிந்துரைகளைத் 'திரட்டி முழுச் செப்பங்களுக்கு முனைந்திட வேண்டும். எல்லாப் பரிந்துரைகளையும் பரிசீலித்து முடிவு எடுத்து, அதன்படி ஆணை பிறப்பிக்க வேண்டும். தமிழ்நாடு அரசாங்கத்தின் கல்வித்துறை மூலமாக இதனைச் செயல்படுத்த வேண்டும்.

அரசியல் கட்சிகளின் பணி

தமிழ் நாட்டில் பல்வேறு அரசியல் கட்சிகள் உள்ளன. மக்களின் கருத்துகளை அவை பிரதிபலிக்கின்றன. ஆனாலும் சில வேளைகளில் அக்கட்சிகளின் தலைவர்கள் வாய்தவறிப் பேசி விட்டவைகளைக் கூட, அவை முழுக்கத் தவறு என்று தெரிந்தாலும் கூட, கட்சிக் கட்டுப்பாடு குறித்து, அக்கட்சியின் தொண்டர்கள் அதனை முழுக்க ஏற்றுக் கொண்டாக வேண்டியுள்ளது.

ஒரு கட்சி ஒரு திட்டத்தை அறிவித்து விட்டால், அடுத்த கட்சி அத்திட்டத்தை எதிர்ப்பில்லாமல் முழுக்க ஏற்றுக் கொண்டது என்ற நிலை மக்களாட்சி நாடுகளில் இதுவரை இருந்ததாகத் தெரியவில்லை. இந்தியா மட்டும் அதற்கு விலக்காகி விடுமா? ஒரு வேளை அத்திட்டத்தை ஏற்றுக் கொண்டாலும், அதற்கொரு திருத்தம் சொல்லாமல் இருந்ததில்லை.

தமிழ் என்பது அனைத்துக் கட்சிக்கும் பொதுவானதால், சர்வகட்சித் தலைவர்களின் ஆதரவினையும் தேடிக் கொள்வது, செயலாக்கத்திற்கு உறுதுணையாக இருக்கும்.

மக்கள் கருத்து

பொதுமக்களின் நன்மைக்காகவே, எழுத்துச் சீர்மை மேற்கொள்ளப் படுகின்றது. எனவே பொது மக்களின் கருத்தை அறிவோம் எனப் புகுதல், அவர்களையே ஏமாற்றுவதற்கு ஒப்பாகும். அறிஞர்களின் கருத்தை அறிந்து கொண்டு, அடுத்த தேர்தலைப் பற்றி எண்ணாமல், அடுத்த தலைமுறையைக் கருத்தில் கொண்டு செயலாற்றுதலே வேண்டிய பணியாகும்.

புதிய ஒலிகள்

ஒலி எழுத்துகள்

தமிழ் மொழியின் ஒலி வடிவங்களே எழுத்துகளாகக் கருதப் பட்டன. அதனாற்றான் உயிர் 12, மெய் 18. ஆக முப்பது எழுத்து என்றார் தொல்காப்பியர். ஒலி வடிவங்கள் நேர் பேச்சிற்கு மட்டுமே பயனாகும் நேரில் இல்லாதோருக்குச் செய்தி அனுப்ப அக்காலத்தில் இயலவில்லை. தற்போது நாடாப்பதிவு முறை உள்ளதால், ஒலிவடிவையும் அனுப்ப முடிகின்றது.

வரிவடிவம்

ஒலிக்கேற்ற வடிவம் தோன்றித் தொன்று தொட்டுப் புழக் கத்தில் உள்ளது. காலங்கள் தோறும் வடிவம் செப்பம் பெற்று வந்துள்ளது. தற்போது மேலும் சில செப்பங்களைப் பரிந்துரைத் தோம்.

புதிய ஒலிகள்

தமிழ் மட்டுமே அறிந்த நிலைமை மாறி ஆங்கிலம் போன்ற அயல் நாட்டு மொழிகளும் வடமொழி, இந்தி போன்ற இந்திய மொழிகளும் தள்ள முடியாத அளவுக்குத் தத்தம் ஆதிகத்தைச் செலுத்துகின்ற காலகட்டத்தில் உள்ளோம். புதிய மொழிகளைக் கற்கும் தமிழர் அம்மொழிகளில் உள்ள ஒலிகள் சில தமிழில் இல்லையே யென்று கவலையுறத் தொடங்கிவிட்டனர்.

மணிப்பிரவாளம்

இருபது முப்பது ஆண்டுகளுக்கு முந்தைய தமிழ் ஏடுகளை வாசித்தால், தமிழ்ச் சொற்கள் குறைவாகவும், வடசொற்கள் ஏராளமாகவும் இருந்தன. வட சொற்களை எழுதுவதற்கு ஸ, ஷ, ஜ, க்ஷ, ஹ, ஸ்ரீ போன்ற எழுத்துகள் உபயோகப்பட்டு வந்தன.

நல்ல தமிழ் என்ற உணர்வு மக்களிடம் வந்ததும், மணிப் பிரவாள நடை ஒழிந்து போய்விட்டது. பழைய தலை முறையைச் சேர்ந்த ஒரு சில எழுத்தாளர்கள் மட்டும் அதனைப் புழங்கி வருகின்றனர். இவர்களின் வழித் தோன்றல்களில் சிலர், "புதிய போக்கு" என்று அறிவித்துக் கொண்டு மீண்டும் மணிப் பிரவாளத்தைப் புகுத்த முயலுகின்றனர். இது ஒரு கொரில்லாப் போர் ஆகிவிட்டது. தாக்குதல்களும், அவற்றிலிருந்து மீளுதலும் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுள்ளது.

ஆங்கிலம்

தற்போது புதிய ஒலிக் குறிகள் வேண்டுவோர் அறிவியல் வளர்ச்சியைக் காரணம் காட்டுவர். ஆங்கிலத்தில் உள்ள அறிவியல் சொற்களை அதே உச்சரிப்பு பெறும் வகையில் எழுதுவதற்காகச் சில குறியீடுகள் தேவை என்பர். இது வெறும் மாயை ஆகும். ஆங்கிலச் சொற்களையும் தமிழ் முறைப்படி எழுதுவதே முறையாகும்.

பிறமொழிகள்

உலகத்தில் ஆங்கிலம், வடமொழி தவிர இன்னும் ஏராளமான மொழிகள் உள்ளன. அவற்றில் உள்ள எல்லா உச்சரிப்புகளுக்கும் தமிழில் வடிவம் வேண்டும் என எதிர்பார்த்தல் பொருந்தாது. ஒவ்வொரு மொழிக்கும் ஒருசில சிறப்புகளும், ஒரு சில பின்னடைவுகளும் உண்டு. ஒரு மொழியில் உள்ளபடியே அடுத்த மொழியிலும் உச்சரிப்பு வேண்டுமென்று வேறு எந்த மொழியினரும் எதிர்பாக்கவில்லை.

வடமொழியில்எகர,ஒகரக் குறில்கள் கிடையா. கடந்த 3000 ஆண்டுகளாக ஏராளமான தமிழ்ச் சொற்கள் வட மொழியில் ஏறியுள்ளன. அப்படியிருந்தும், அதில் எகர, ஒகரம் வேண்டும் என்று எந்த முயற்சியும் எழவில்லை. இந்தியும் பிற வட இந்திய மொழிகளும் இதே நிலைமையில் உள்ளன. அவைகளும் புதியனவற்றை ஏற்கும் நிலையில் இல்லை. எத்திராஜ் என்பவர் தமிழ் நாட்டின் முதலமைச்சராக இருந்தால் இந்தி ஏடுகள் எவ்வாறு செய்தி வெளியிடுமோ?

ஆங்கிலம் ஆதவன் மறையாத பேரரசு என்பர். உருண்டையான உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் ஆட்சி செய்தது. அந்தந்த நாட்டு மொழிகளுடன் கூடிக் குலாவிப் பல சொற்களை ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால் 26 எழுத்துக்களுக்கு மேல் கூடுதலாக ஒரு எழுத்தைக்கூட ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை.

வட சொல், திசைச் சொல்!

பிறமொழிச் சொற்களைத் தமிழில் எவ்வாறு ஏற்கவேண்டும் என்பதை இலக்கண ஆசிரியர்கள் கூறிப் போந்தனர். வடசொல், திசைச் சொல் ஆகியவற்றின் புதிய எழுத்துகளை நீக்கித் தமிழ் எழுத்தில் எழுதவேண்டும் என்பது இலக்கணம்.

இங்கே எழுத்து என்பது ஒலி வடிவத்தையே சுட்டும். இந்த விதி எக்காலத்திற்கும் பொருந்தும். தஸரதன் என்பதைத் தயரதன் என்றார் கம்பர்.

நாட்டுப்புற மக்கள் ஸ்டேசன் என்பதை இன்றும் டேசன் என்றே வழங்குவர். ஸகூட்டர் என்பதை கூட்டர் என்பர். Terrace என்ற சொல் கொத்தனாரிடையே 'தாருசு' என்றே வழங்குகிறது. pan என்பது 'பாந்து' என்றாயிற்று! இன்று ஆங்கிலம் படித்த பொறியாளர்களும் இதனைப் 'பாந்து' என்றும் மீண்டும் ஆங்கிலப் படுத்திப் 'பாண்டு' என்றும் வழங்குகின்றனர். தமிழ் வடிவம் உள்ள சொல் மட்டும் தமிழ் நாட்டில் உயிரோடு இருக்கும்.

திராவிட மொழிகள்

தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகியவை திராவிடமொழிக் குடும்பத்தைச் சேர்ந்ததென்பர். பிற மூன்று மொழிகளும் வடமொழியைக் கலந்து கொண்டதாலேயே தனியாகப் பிரிய நேரிட்டன. க, ச, ட, த, ப ஆகிய எழுத்துகளுக்கு அதன் வர்க்க ஒலிகளை உச்சரிக்கத் தனி வடிவங்களை ஏற்றுக் கொண்டன. தமிழிலும் இந்த ஒலிகள் உண்டு.

ஒரு சொல்லின் முதலில், இடையில், இரட்டித்து, கடைசியில் ஆகிய நான்கு இடங்களிலும் வரும்போது நான்கு ஒலிவடிவங்கள் பெறுகின்றன. ஒரே வரிவடித்தை இவை அனைத்தையும் தற்போது நாம் ஒலிக்கின்றோம். இதே நிலை தொடர்ந்து நீடிக்கலாம். இந்த நிலையிலிருந்து வழுவி, வடமொழிகளைப் பின் பற்றியதாலேயே, பிற திராவிட மொழிகள் பிரிந்துபோக நேர்ந்தன.

தமிழர்கள் படிக்கும்போது ஒரே வரிவடிவம் கொண்ட எழுத்து நான்கு இடத்திலும் நான்குவிதமாக ஒலிக்கின்றனர். வட இந்திய மொழிகளும், தெலுங்கு, கன்னடம் அறிந்தோரும், தமிழ் கற்று அறியும் தொடக்கத்தில், வல்லின எழுத்தின் முதல் ஒலியையே இடையிலும் பெய்து வலிந்து உச்சரிப்பர். இயற்கையான உச்சரிப்பு அவர்கட்கு வருவதில்லை. மிகுந்தபயிற்சிக்குப் பின்னரே சரியாக ஒலிப்பர். அவர்களின் மொழி நோக்கிலேயே தமிழையும் பார்ப்பதாலேயே இந்த இடர் தோன்றுகிறது.

ஒலிப்பு முறை

எனினும் புதிய ஒலிகளைக் காட்ட சில ஏற்பாடுகள் தேவைப் படும் நேரங்களும் உண்டு. சிறு கதைகளிலும், புதினங்களிலும், உரையாடல்களைக் காட்ட நேரும்போதுஅவை தேவையாகின்றன. ஆங்கில மொழியின் அனுபவத்தைத் தமிழிலும் மேற் கொள்ள Diacritical marks (ஒலிக் குறியீடுகள்) சிலவற்றை மேற் கொண்டு, ஒரே வடிவத்திற்குப் புதிய ஒலிகளை ஏற்றுகின்றனர்.

தமிழ்க் கட்டுரைகளையும், பிற இந்திய மொழிக் கட்டுரைகளையும் எழுதும்போது இம்முறை பயன்படுகிறது. ஆங்கில அகாரதிகள் எல்லாவற்றிலும் ஒலிப்புமுறை முதற்பக்கத்திலேயே கொடுக்கப்பட்டிருக்கும்.

தமிழிலும் இம்முறையையே கையாளலாம். குறியீடுகளுக்குப் பதிலாக பக்கத்தில் எண்கள் இட்டு ஒலி வேறுபாட்டைப் புலப் படுத்தலாம்.

கிரந்த எழுத்துகள்

ஸ்ரீ என்ற எழுத்து தமிழில் சி என்ற எழுத்தால் நீக்கப்படுகிறது.

சிறப்பு என்ற பொருள்படும் சீர் என்ற தமிழ்ச் சொல்லின் வடமொழி வடிவமே ஸ்ரீ எனக் கொள்ளலாம். சிரங்கம், சினிவாசன், சிதரன் என்று எழுதுகிற பழக்கம் இலங்கை நாட்டில் உள்ளது. தமிழ் நாட்டிலும்கூட தினத்தந்தி போன்ற மக்கள் (popular) ஏடுகள் சிரி என்றே எழுதிவருகின்றன. ஆனந்தவிகடன், கல்கி போன்ற இதழ்கள்கூட விட்டுவிட்டன. இவற்றைவிட்டால் தமிழ் நாட்டில் அகில இந்திய வானொலியைத் தவிர வருத்தப் படுவோர் யாருமில்லை.

க்ஷ என்ற எழுத்து ட் + ஷ என்பதன் கூட்டு வடிமேயாகும். ட்+ச் இவற்றைக் கொண்டே எழுதி வருகின்றனர். மீனாட்சி; கட்சி போன்றன முன்பு கூட்டெழுத்தால் எழுதப்பட்டு வந்த

தைப் பெரும்பாலோர் மறந்துவிட்டனர். ஹரிஹரன் என்பதை அரிகரன் என்று எழுதுவதால் ஒலி வடிவம் மாறுவதில்லை.

இதுபோன்று ஸ, ஜ, ஷ, க்ஷ, ஸ்ரீ ஆகிய எழுத்துகளை எடுத்து விடுவதால், தமிழுக்கு இழப்பு ஏதும் இல்லை. இருந்த போதிலும் ஏற்கனவே அவை காலங்காலமாகப் புழங்கி வந்துவிட்டதால், பழைய வரலாறுகளை எழுதவும், ஒரோவழிப் புழங்கவும் தேவைப்படுவதால், அவற்றை நீக்க வேண்டுவதில்லை. அவற்றின் புழக்கத்தைக் குறைத்துப் பயன்படுத்துவதே சிறப்பாகும்.

F ஒலி இல்லை என்பதால் 'துக்ளக்' இதழ் சிலகாலம் ஆங்கில எழுத்தைப் பெய்து எழுதியது. F ஒலி வேண்டிய இடத்தில் ஃப சேர்த்து எழுதி மரபாக்கிவிட்டோம். அதனால் அதுவும் தேவையில்லை.

வரிவடிவத் தோற்றம்

சிந்துவெளி எழுத்து

இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் சுமார் 400 ஆண்டு கட்கு முந்திய எழுத்து வடிவங்கள் பல கிடைத்துள்ளன. ஏராள மான வடிவங்கள் கிடைத்திருக்கின்றன. எனினும் அந்த எழுத்து களின் மொழி என்னவென்று இன்னும் கண்டு பிடிக்க முடிய வில்லை. உலகத்தின் பல்வேறு நாட்டு அறிஞர்கள் இத்துறையில் முயன்று வருகின்றனர். அதன்போக்கு திராவிட மொழிக் குடும் பத்தை ஒத்திருக்கின்றன எனச் சிலரும், சமத்கிருதத்தை ஒத் திருக்கின்றன என்று சிலரும் கருதுகின்றனர். முடிந்த முடிவு இன்னும் கிடைக்கவில்லை.

ஆய்வின் தேவை

சிந்துவெளி மொழி என்று அழைக்கப்படும் அதன் விளக்கம் தமிழ் நாட்டில்தான் வெளியாக வேண்டும். அதற்கு அடிப்படைத் தேவை எழுத்துகளின் படங்கள், இதுவரை வெளியான கட்டுரை களின் படிகள், தமிழ்நாட்டில் எந்த நூலகத்திலும் கிடைக்கு மென்று தோன்றவில்லை. தமிழகத் தொல்லியல் துறை நூல கத்தில் பெரும்பாலானவை கிடைக்கலாம். ஆர்வம் மிக்க இளைஞர் குழு அடிக்கடி சந்தித்துக் கலந்துரையாடுதல் இன்றி யமையாதது. தொல்லியல் புலமையுடையார்தான் இதில் ஈடுபட வேண்டுமென்பதில்லை; தமிழ்க் கழகங்கள் இதில் முயற்சி செய்ய வேண்டும்.

எழுத்தின் பண்புகள்

சிந்துவெளி எழுத்துகள் அ, ஆ, இ, ஈ, என்பது போன்ற எழுத்துகள் அல்ல. ஒரு படம் வரைந்து காட்டி அதன் மூலம் சொற்களை உருவாக்குவதை Ideograph என்பர். இடமிருந்து வலமாக அல்லாமல் வலப்பக்கமிருந்து இடப்பக்கம் எழுதப்படுகின்றன. மீன், சிப்பு, தராசு, குழந்தை, ஏர், கோட்டை, அம்பு, வில் போன்று பல வடிவங்கள் உள்ளன. என்றுதான் விளங்குமோ இந்த இனிய மொழி என்பது தெரியவில்லை.

சிந்து மொழிக்கும் அதற்கு அடுத்து வந்த தமிழ், பிராமி ஆகியவற்றிற்கும் ஏதாவது தொடர்பு இருக்கவேண்டும்.

பிராமி

'வம்ப மோரியர்' என்று சங்க இலக்கியங்கள் கூறுவது வடநாட்டில் கங்கைக் கரையில் கொடி கட்டி ஆண்ட மவுரியப் பேரரசினை ஆகும். மவுரிய மன்னர்களில் தலையானவர் பேரரசர் அசோகர் ஆவார். தமிழகம் தவிர, இந்தியாவின் எல்லாப் பகுதியிலும் அவர் ஆட்சி விரிந்து இருந்தது. போரிலே ஏற்பட்ட உயிர்களின் இழப்பு அவரது மனதை மாற்றி விட்டது. பவுத்த மதக் கொள்கைகளை உலகம் முழுவதும் பரப்ப முயற்சிகளை மேற்கொண்டார். கற்றூண்களிலும் கற்பாறைகளிலும் பவுத்த தரும வாசகங்களை எழுதி வைத்தார். வடக்கே காந்தாரம் முதல் தெற்கே ஆந்திரப் பிரதேசம்வரை அவரது கல்வெட்டுகள் காணப்படுகின்றன.

அவர் பயன்படுத்திய மொழி பிராகிருதம்; பயன்டுத்திய வரிவடிவம் பிராமி என்றழைக்கப்படும். அசோகரது காலம் கி. மு. மூன்றாம் நூற்றாண்டு ஆகும்.

தமிழ்

தமிழ்நாட்டில் பல நகரங்களை அடுத்துள்ள குன்றுகளில், சமண முனிவர்கள் வாழ்ந்து வந்தனர். அவர்கள் ஆடையைத் துறந்தவர்கள். மலைமேல் அமைந்துள்ள இயற்கைக் குகைத் தளங்களில், கல்லில் செதுக்கி வழவழப்பாகிய படுக்கைகளில் உறங்கினர். அக்கால மன்னர்களும் மக்களும் இவ்வாறு படுக்கை செதுக்கி உதவியுள்ளனர். அவ்வாறு படுக்கை செதுக்கிக் கொடுத்தோர், தத்தம் பெயர்களையும் கொடைகளையும் செதுக்கி வைத்துள்ளனர். நல்ல தமிழ் மொழியில் அவை உள்ளன.

மதுரை நகரைச் சுற்றியுள்ள மாங்குளம், அரிட்டாபட்டி, ஆண்டிப்பட்டி மலைகளில் குகைப் படுக்கைகள் உள்ளன. இவை எல்லாவற்றிலும் எழுத்துகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

கரூர் நகரைச் சுற்றியுள்ள, புகழூர், ஐவர்மலை, திருச்செங்கோடு, அறச்சலூர் போன்ற இடங்களிலும் குகைப்படுக்கைகள் உள்ளன. இவற்றில் புகழூரிலும், ஐவர் மலையிலும் அறச்சலூரிலும் எழுத்துகள் உள்ளன. அண்மையில் ஓமலூர் கோயில் பட்டியில் பாறைக் கிணறு வெட்டிய செய்தியும் இவ்வெழுத்தில் கிடைத்துள்ளது

ஆண்டிப் பட்டியில் கிடைத்த காசு ஒன்றில் 'திண்ணன்' என்பான் பெயர் காணப்படுகிறது.

புதுச்சேரியை அடுத்துள்ள அரிக்கமேடு பகுதியில் கிடைத்துள்ள பானை ஓடுகளில் தமிழ்ச் சொற்றொடர்கள் காணப்படுகின்றன. உறையூரில் கிடைத்த பானையிலும் எழுத்து வடிவங்கள் கிடைத்துள்ளன.

காலம்

தொல்லியல் ஆராய்ச்சியாளர்களின் அனுமானப்படி மதுரையைச் சுற்றிக் கிடைத்துள்ள எழுத்துகள் காலத்தால் சற்று முந்தியவை. கரூரைச் சுற்றியுள்ளவை காலத்தால் சற்று பிந்தியவை. புதுச்சேரி அரிக்க மேட்டில் கிடைத்த எழுத்துகளை வைத்துக்கொண்டு மேற்கண்டவாறு காலக்கணக்கை அனுமானிக்கின்றனர். தொல்லியலார் அனுமானமே உறுதிச் சான்றாக எடுத்துக் கொள்ளப்படுகின்றது. இவை ஏன் கி.மு. ஏழு அல்லது எட்டாம் நூற்றாண்டில் எழுதப்பட்டிருக்க முடியாது என்று சொல்ல வலுவான ஆதாரம் இல்லை. 'கரி 14 முறை' ஆய்வுக் கணக்கு ஏதுமில்லை. தமிழ்நாட்டில் மிகக்குறைந்த இடங்களிலேயே அகழ்வாய்வுகள் நடை பெற்றுள்ளன. அவற்றிலும் கரி (Carbon) 14 முறையில் காலம் அறுதியிட்டுக் கூறப்பட்டவை மிகவும் குறைவு.

கொற்கை ஆய்வு

தமிழகத் தொல்லியல் துறை கொற்கையில் ஆய்வு செய்துள்ளது. அதன் காலம் கரி 14 முறையில் கி.மு. 784 வரை சென்றுள்ளது. அங்கு கிடைத்த பானை ஓடுகளில் இவ்வெழுத்துகள் காணப்படுகின்றன. அவற்றுடன் சிந்துவெளி எழுத்துகளின் படங்கள் சிலவும் சேர்ந்து வருகின்றன. இந்த ஆய்வு முடிவுகள் இன்னும் புத்தகமாக வரவில்லையாதலால், விரிவான ஆராய்ச்சிகள் தோன்றிய பின்னர் இவ்வெழுத்துகளின் முன்னெல்லை நிச்சயிக்கப்படும். எப்படியிருந்த போதிலும் கி.மு. 10–ஆம் நூற்றாண்டளவினதாக இவ்வெழுத்துகள் இருக்குமென்பதற்கான ஆதாரங்கள் புதிய ஆய்வுகளால் விரைவில் கிடைக்குமென்று எதிர்பார்க்கலாம்.

தொல்லியல் துறையினர் காலக் கணிப்பில் ஒரு வேடிக்கை உண்டு. ஏதாவது ஒரு செய்தியைப்பற்றிய கல்வெட்டுகள் ஒரு சில பகுதியில் கிடைக்கவில்லை. என்றால் அந்தச் செய்தி அந்த இடத்திற்குப் பொருந்தாது என்று சொல்லி விடுவார்கள். அந்தப் பகுதியில் எந்த ஆராய்ச்சியும் நடக்காமலேகூட இருந்திருக் கலாம். புதிதாக ஏதேனும் கல்வெட்டு கிடைத்ததாக யாரேனும் அறிவித்தால் தமது கொள்கையை உடனே மாற்றிக் கொள்ளத் தயங்கார். ஆனால் அவர்கள் கருத்தை மாற்றிக் கொண்டதை அறிய வழியில்லாமலே தமிழ் உலகம் பழைய கருத்திலேயே உழன்று கொண்டிருக்கும்.

தமிழ் வடிவம்

தமிழ்நாட்டில் கிடைத்த வரிவடிவங்கள் தமிழ் மொழிக்கு ஏற்றவாறு உள்ளன. சிறப்பெழுத்துகளான ழ, ள, ற, ன ஆகி யவை காணப்படுகின்றன. வடநாட்டிலும், இலங்கையிலும் பிரா கிருத மொழியை எழுதப் பயன்பட்ட பிராமி எழுத்துகள் இவ் வடிவினை ஒத்து இருக்கின்றன. பிராகிருத மொழிக்குத் தேவைப் படும் கூடுதலான வர்க்க எழுத்துகள் அங்கு காணப்படுகின்றன. அடிப்படை வடிவங்கள் ஒன்றாகவும், கூடுதல் எழுத்துகள் இரு மொழிக்கும் தனித்தனியாகவும் இருந்துள்ளன.

தமிழ்மொழியை எழுதப் பயன்பட்ட அதே வடிவங்கள் வட நாட்டிலும் பயன்பட்டன. (சிலர் இதனை மாற்றிச் சொல்வர். வடநாட்டில் பயன்பட்ட பிராமி எழுத்துத்தான் தமிழ்நாட்டில் பயன்பட்டது என்பர். எப்படிச் சொன்னால் என்ன? எல்லாம் ஒன்றுதானே! இரண்டு இடத்திலும் ஒரே வடிவம்தானே இருந்தன.)

அசோகர் புத்தமதத்தைச் சேர்ந்தவர். புத்தமதம் மூலமாகத் தான் பிராகிருதம் எல்லாத் திசையிலும் பரவிற்று என்று கருது வோர் தமிழ்நாட்டில் புத்தமதச் செய்திகள் கல்லில் இல்லை, அதனால் இலங்கை வழியாகத் தமிழகத்தில் புகுந்திருக்கும் என்று ஊகிப்பர் (?). (Dr. K. V. இராமன் தொல்லியல் கட்டுரை கள் 1978) இதை இக்கட்டுரையாளர் ஏற்றுக் கொள்ளவில்லை.

வல்லின எழுத்துகளான க, ச, ட, த, ப ஆகிய ஐந்து எழுத்து கள் எல்லா மொழிக்கும் பொதுவானவை, வல்லின எழுத்துகள், ஒரு சொல்லின் முதலில், இடையில் தனித்து, இடையில் இரட் டித்து, இறுதியில் வரும்போது தனித்தனி ஒலிகளை மேற்கொள் கின்றன. தமிழ்மொழியில் படிக்கும்போது இவை இயற்கையாக அமைகின்றன. காக்கை, காகம், கங்கை என்பவற்றில் க என்ற

எழுத்து ஐந்துவித ஒலிகளை ஏற்கின்றது. காகம் என்பதும் காஹம் என்பதும் ஒலிவடிவில் ஒன்றேயாம். இதுபோல ஏராள மான எடுத்துக் காட்டுகளைச் சொல்லாம். பிறமொழிகளில் சொல்லின் முதலில் வருவது முதல்வர்க்கம். இரட்டித்து வரு வது இரண்டாம் வர்க்கம். மெல்லெழுத்தை அடுத்து வருவது மூன்றும் வர்க்கம். மெல்லினம் இருப்பதால் மூன்றும் வர்க்கம் தேவையில்லாததாகும். எனவே வல்லின எழுத்துகளின் வர்க்க ஒலிகளுக்கு தனிவடிங்கள் ஏற்கும் மொழிகளே, பிந்தியவை என்பது வெள்ளிடைமலை.

தொல்காப்பியம்

தமிழ் எழுத்து வடிவங்கள் தொல்காப்பியரின் இலக்கண விதிகளுக்குப் பொருந்தி வருகின்றன.

1. மெய்களுக்குப் புள்ளிஉண்டு.

2. எ, ஒ, எழுத்துகளுக்கு நெடிலின் மேல் புள்ளி இட வேண்டும்.

3. உயிர்மெய் எழுத்துகள், உயிர்க் குறியின் அடையாளத் தால் உருவு திரிந்து காட்கிதரும்.

4. ம, என்ற எழுத்து நடுவில் புள்ளியுடன் இருக்கும். மேற்கண்ட நான்கு விதிகளும் தமிழ் எழுத்துகளுக்குப் பொருந் தும். ஒலிப்பதில் மாத்திரை குறைகின்ற இடங்களில் புள்ளி வைத்துக் காட்டும் முறை முன்பு இருந்துள்ளது. குற்றியலுகரம் வரும் இடங்களில் புள்ளி வைத்துக் குறைத்துக் காட்டியுள்ள தைப் பண்டைக் கல்வெட்டுகளால் அறியலாம்.

பிராகிருதம்—தமிழ்

பிராகிருதம்—தமிழ் மொழி வாணர்கள் ஒன்று கூடி ஒரே காலத்தில் புதிய வரிவடிவை எடுத்தாளத் தொடங்கினர் எனக் கருதலாம். கி. மு. ஐந்தாம் நூற்றாண்டை எல்லையாகக் கொள்ள லாம். தத்தம் மொழிக்கேற்ப கூடுதல் வடிவங்களைக் கொண் டனர் எனக்கருதலாம். அக்காலத்தில் தொல்காப்பியம் தோன்றி இரண்டிற்குமுள்ள வேறுபாட்டை உணர்த்தியதெனலாம்.

இக்கட்டுரை 'புதிய தமிழ் வடிவம்' என்ற நூலுக்குத் தேவை யில்லையென்றாலும் பண்டைய தமிழ் எழுத்துகளின் அடிப்படை யில் தோன்றியமையால் இங்குக் கூற நேர்ந்தது.

இந்தியப் பொது வடிவம்

இந்தியா முழுவதும் எல்லா மொழிகளுக்கும் ஒரு பொது வரி வடிவம் வேண்டும் என்ற குரல் அவ்வப்போது ஓங்கி ஒலிக்கும். மறுப்பொலிகள் பல கிளம்பும். பின்னர் முதற்குரல் அடங்கிவிடும் இவ்வாறு ஆண்டுதோறும் நிகழ்ந்து வருகின்றது.

பொது வரிவடிவில் பல நன்மைகள் உண்டு என்பது வெள் ளிடை மலை. எனினும் எதனைப் பொது வரிவடிவாகக் கொள்வது என்பதில் கருத்தொற்றமை இல்லை.

ஒருவர் மொழியை எடுத்தால் அடுத்தவருக்குப்பொறுக்காது. சுகமும் சுமையும் சமமாக இருக்கவேண்டும். இதற்கெல்லாம் ஒரு நல்ல வழி உண்டு.

தொன்மைப் பொது வடிவம்

இன்று இந்தியாவில் வழங்குகின்ற எல்லா மொழிகளின் வரி வடிவங்களும் இலங்கைச் சிங்களத்தின் வரிவடிவமும் ஒரே மூல வடிவத்தின் வளர்ச்சியே என்பதைத் தொல்லியல் ஆராய்ச்சிகள் புலப்படுத்துகின்றன.

பண்டைக்காலத் தமிழ் வரிவடிவமே எல்லாவற்றிற்கும் மூலம் ஆகும். வடக்கே இமயம் முதல், தெற்கே இலங்கைக் கதிர் காமம் வரை இதே வரிவடிவம் இருந்தது. அப்போது மொழியில் வேறுபாடு இருந்தாலும் வடிவில் வேறுபாடு இல்லை. அதனையே தற்போதும் ஏற்றுக் கொள்ளலாம். எக்காலத்திற்கும் அது

பொருந்தும். தட்டச்சு, அச்சு எல்லா இடங்களிலும் புழங்கலாம். தற்கால அச்சுவாகனங்களுக்கேற்ப செப்பம் செய்து கொள்ளலாம். உயரங்களை ஒன்றாக வைத்துக் கொள்ளலாம். அகலங்களையும் ஒன்றாக வைத்துக் கொள்ளலாம். எகர, ஒகரங்களுக்குத் தெளிவான வேறுபாடு வைத்துக் கொள்ளலாம். உயிர். மெய்க்கு பக்கக் குறியாகச் சிறு கோடுகளை மட்டும் பயன்படுத்தலாம். மிகவும் சிறப்பாக அமையும்.

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ

க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ழ ள ற ன

க கா கி கீ கு கூ கெ கை கொ

இது தேவைதானா? இந்தியப் பொது வரிவடிவம் தேவையென்று யாரேனும், எந்த அளவிலேனும் முயற்சி செய்தால், அப்போது அதனுடன் சேர்த்து இதனையும் எண்ணிடல் வேண்டும். அவ்வளவுதான்.

எல்லா இந்திய எழுத்துகளுக்கும் மூலவடிவம் இவை. பாசமும் நேசமும் சமம். சுகமும் சுமையும் சமம். வேறு என்ன வேண்டும்?

இதுபோன்ற பரிந்துரையை எமக்கு எழுதியவர் மலேசியா நாட்டுப் பரமானந்தம் ஆவார்.

தோற்றத்தில் இவை ஆங்கிலத்தின் பெரிய எழுத்துகள் போல் இருக்கின்றன. இதற்குப் பதில் ரோமன் வடிவங்களையே வைத்துக்கொள்ளலாம்.

இறுதியாக ஒன்று!

புதிய தமிழ் வடிவம் என்ற இந்நூல் செயலாக்கம் என்ற பகுதியுடன் நிறைவுறுகின்றது. அதனை அடுத்துள்ள மூன்று கட்டுரைகளும் மொழி நிலை பற்றிய எங்களின் கருத்துகள் ஆகும்.

அறிவார்ந்த செயல்

தமிழ் வளர்ச்சியில் நமது முன்னேற்றம் எள்ளி நகையாடும் நிலைமையிலேயே இருக்கின்றது. அதற்குக் காரணம் நாம் எல்லோருமே சிந்திக்கின்றோம். தனித்தனி முடிவு எடுக்கின்றோம். முடிவு எடுத்தபின் மாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை. அதனால் தமிழர் எத்தனை பேர் உண்டோ அத்தனை எண்ணம் உண்டு.

எடுத்துக் காட்டாக, டாக்டர் என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். பல சொற்கள் ஆட்சியில் உள்ளன. அதனை நிலைவு செய்ய தமிழகம் இன்னும் முன்வரவில்லை. இலங்கையில் அதனைக் 'கலாநிதி' என்று நிலைவு செய்துவிட்டனர். அதனைத் தமிழகம் ஏற்றுக் கொள்ளும் நிலையில் இல்லை.

வழி வகுப்போம்!

Indian Standards Institution என்று ஒரு நிறுவனம் இந்தியாவில் உள்ளது. எல்லாப் பொருட்களுக்கும் தர நிர்ணயம், செய்து

அறிவிக்கின்றது. ஒவ்வொரு தடவையும் அதில் முன்னேற்றம் தேவைப்பட்டால் தேவையான செப்பங்களைச் செய்து கொள் கின்றது.

இதுபோன்ற ஒரு நிறுவனம் தமிழ்மொழிக்கும் தேவை யாகின்றது. உலக நாடுகள் பலவற்றில் தமிழ் மொழி ஆட்சி மொழியாகவும், பேச்சு மொழியாகவும் உள்ளது. அனைத்து நாட்டு அறிஞர் குழுவைக் கொண்ட ஒரு அதிகார பூர்வமான அமைப்பு இன்றியமையாத் தேவையாகின்றது. பன்னாட்டு அரசாங்கங்களின் முத்திரையுடன் இயங்கும் ஓர் ஆணையம் உடனடியாகத் தோன்ற வேண்டும்!

கம்

முயற்சி !

இந்நூலின் கருத்தாளர் கொடுமுடி ச. சண்முகன் ஆவர். பல்வேறு ஆய்வரங்குகளில் இவர் படித்த கட்டுரைகளின் விரிவாக்கமே இந்நூல்.

சென்னைப் பல்கலைக் கழகத்தில் சமூகப் பணிப் பட்டயம் (Diploma in Social Service) பெற்றுள்ளார்.

தமிழகத் தொல்லியல் துறை, மற்றும் அனைத்திந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் கருத்தரங்குகளில் தவறாது பங்கேற்று ஆய்வுரைகள் வழங்கிவருகிறார். 1947ஆம் ஆண்டு சனவரி மாதம் இலங்கை நாட்டில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டிலும் சார்பாளராகப் பங்கேற்றார்.

அளக்கையியல் (Surveying Vol. I) என்ற இவரது நூலைத் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் வெளியிட்டுள்ளது. வடிவ வரைவியல் (Geomerrical Drawing) என்ற நூல் அச்சில் உள்ளது.

தமிழ் நாட்டு அரசின் பொதுப் பணித் துறையில் இவர் உதவிச் செயற் பொறியாளராகப் பணியாற்றுகிறார். தொல்லியல் பயிற்சியும் தமிழார்வமும் கொண்டவர்.

தட்டச்சுத் துறைக்குப் புதியதொரு சாதனையைப் படைத்தளித்துள்ள இவர்தம் செயலாற்றல் பாராட்டத்தக்கது.